www.tamilarangam.net

# சுவடுகள்



## ஸ்தவங்கர் சிறப்பிதழ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நிலம்

□□□□
களைத்து,
இடர்பட்டு நிலத்தில்
வீழ்ந்து விடுவதற்காய்
சரிந்து கொண்டிருக்கிறேன்.
என்னை
தாங்கிக்கொள்ள விரும்பாத நிலம்
தன்னுடலை
கீழே கீழே கொண்டு செல்கிறது.
சுற்றிச் சுழன்று, கால்கள்
பற்றி நிற்க ஏதுவற்று
அந்தரப் பட்டுத் தவிக்க
நிலத்தில் கிடை காண
புவியீர்ப்பின் துணையோடு
உடலைச் சுமந்து
சென்றுகொண்டிருக்கிறேன்.

நிலம்.

நிலம் கீழ் நோக்கி
அடைகிறது.
அடைதல் வேகமடைகிறது.
எனது உடலத்தின்
சுழற்சியும், ஆதாரத் தேடலும்
இன்னும் வேகமடைகிறது.

நிலம்.

நிலம்
தன் வேகத்தைத் துரிதமாக்கி
அடைகிறது கீழ்நோக்கி.
என்னை சுமக்க விரும்பாத நிலம்.
எனக்காக
தன் இருப்பையும் மாற்றும் நிலம்.

கையில் அகப்படுகிறது
கட்டிடமொன்றிலிருந்துதிர்ந்த
திராந்திக் கட்டையொன்று.
கணத்தில்
கையோடு அதுவும் என்னோடு.
பிடித்ததை விடமுடியாமல்
அதனுடன் அடைகிறேன்.
அடையும் நிலத்தில்
தரிப்புக் காண.

பருத்த மரத்தின்
தடித்த வேர்
அகப்பட்டது மறுகையில்.
உன் பொருட்டு
நானும்
உன்னோடு அடைகிறேன் என்று
பருத்த மரத்தின்
தடித்த வேர் மறுகையில்.

நிலம்.

கீழே
இன்னொரு நிலம்போல்
பளிங்குப் பரப்பொன்றில்
மோதுண்டு
நிலம் கண்ணாடிச்சுவர்
நொருங்கியதைப் போன்ற சத்தத்தோடு
நொறுங்குண்டு தூளானது.

நின்றது புவியீர்ப்பும்.
நானும் அந்தரத்தில்.
கீழேயும் இன்றி,
மேலேயும் இன்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு கையில் தீராந்திக் கட்டை.
மறு கையில்
பருத்த மரத்தின்
தடித்த வேருமாய் நான்
அந்தரத்தில்.

நிலம்.
இன்னொரு அந்நிய நிலத்தில்
கண்ணாடிச் சிதறல்களாய்
பொரிப்பொரியாய்.

தீராந்திக் கட்டை புதிதாய்
பசிய இலைக் குஞ்சுகளிரண்டை
வெளியில் சிமிட்டி
தனக்கு உயிர் உண்டென்றது.
பருத்த மரத்தின் தடித்த வேர்
அழகிய மொட்டுகளிரண்டை
பிரசவித்தது ஆனந்தமாக.

இறக்கை இல்லாமல்
அந்தரப் புலத்தில்
கைகளால் வலித்து மிதக்கிறேன்.
என்னோடு
துளிர்த்த தீராந்தியும்,
மொட்டவிழ்த்த வேர்க்கொடியும்.

கூவுகிறது குயிலொன்று.
உடைந்து சிதறிய நிலத்திலிருந்து
அவலமாய் அதன் குரல்.
பசுமரம் நடுவதற்காக
கைகளால் பறந்து
குயிலின்
குரல் வந்த
திசைக்கு நான்.
கூடவே
பசுமரமாய் தீராந்தியும்,
பூங்கா வனமாய்
பருத்த மரத்தின்
தடித்த வேரும், பூக்களும்.

- தமயந்தி -

SUVADUGAL,
A Tamil monthly from Norway
Estd: Sept'1988

Bank account: 16075213062
SparebankenNOR

ISSN: 0804 - 5712

Editorial Group: Thuruvapalagar

Price: 25NKr

Subscription: 300NKr/ 12 issues

Published by:
Norway Tamil Culturel Centre

Address:
Suvadugal,
Herslebs gt43,
0578 Oslo,
NORWAY

சுவடுகள்,
தமிழ் மாத இதழ்
ஸ்தாபிதம்: புரட்டாதி'1988

வங்கிக் கணக்கிலக்கம்: 16075213062
ஸ்பாரபாங்கன்நூர்

ஆசிரியர் குழு:
துருவபாலகர்

தனிப்பிரதி விலை: 25 குறோணர்கள்

சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு 300 குறோணர்கள்

வெளியீடு:
நோர்வே தமிழ்க் கலாசார மையம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கண்ணீர் சிந்து

அரபியில்: டொக்டர் அத்னன் அல் நாஸ்வி
தமிழில்: அ.ஜ.கான்

ஓ போஸ்னியா
இதயம் கிழிந்து கண்ணீர் விடுகிறாய்....
உன் கண்ணீர் கொட்டட்டும் தீக்கொழுந்துகளாக....

விடுதலையும் நேர்மையும் உள்ள எந்தவொரு மனிதனும்
அந்நிலம் பற்றியெரிய
தன் விலா எலும்புகளை வீசியிருப்பான்....
இல்லையென்றால்... இரத்தம் சிந்தியிருப்பான்....
இல்லையென்றால்... இருளைக் கிழித்திருப்பான்.
தன் பயண விளக்கால்....
அல்லது....வசந்தத்தை வாழ்த்த
பெருந்தன்மையைக் கொண்டுவந்திருப்பான்....

ஓ போஸ்னியா!
இரத்தம் காய்ந்து போயிருந்தால்....
உன் கண்ணீரை உகுத்துவிடு....
அச்சந்தங்களையாவது எதிரொலிக்கட்டும்....

ஓ போஸ்னியா!
காரிருள் இரவுகளில்
கண்ணீரை சிந்து எரியும் தீப்பந்தங்களாக
எங்கள் பாதைகள்...... வழிகள்...... மலைகள் வெளிச்சமாகட்டும்

ஓ போஸ்னியா!
உன் அவமானத்திற்குக் காரணமாகாமல்
கண்ணீரைக் கொட்டு!

உன் கண்ணீர் பொழியட்டும் ஆபரணங்கள் போல
முத்துக்கள், வைரங்கள், கரையும் மெழுவர்த்திகளைப் போல....
கருத்த இரவுகளின் போது
சாலைகளில்.... பாதைகளின் மேல்.... கண்ணீர் சிந்து....
எங்கள் இதயங்களைப் பற்றவை....
நெஞ்சுக்குள்ளும், விலா எலும்புக்குள்ளும் தீயேற்று.
ஓ, எத்தனை பாதை தவறிய இதயங்கள் அங்கே....
காரிருளில் அவர்கள்....கடும் காரிருள் இரவுகளில்
வெளிச்சத்தை இழந்தனர்....
அச்சத்தில் உறைந்து போயினர்....

ஓபோஸ்னியா
அவ்விதயங்கள் அசைவற்றுப் போயின....
இப்படித்தான் உறக்கத்தில் வீழ்ந்தன.

இரவுகள் வெகுவேகமாக கழிகின்றன இன்றும்....
கனவுகளின் மிச்சங்கள் கண் இமைகளில் தஞ்சமாகிறது....
மெல்ல மெல்ல அமைதியாக கண்கள் மூடியவாறு
சத்தமற்ற இரவுகளில் முணுமுணுத்தவர்கள் இறந்து போக
இரகசியப் பேச்சொன்று விடை கொடுத்தனுப்பும் அவர்களுக்கு.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ஸ்தவங்கர்(STAVANGER)

நோர்வேயின் தென்மேற்காக அமைந்துள்ள ஸ்தவங்கர் மாநகரம்(by kommune) ரோகலாண்ட்(Rogaland) மாகாணத்தின் நிர்வாகத்திற்குட்பட்டதாகும். Gands ஏரியின்(Gands fjord) கழிமுகத்தில்(Estuary) அமைந்துள்ள இம்மாநகரம் இயற்கையாகவே பல சிறப்பம்சங்களை கொண்டு விளங்குகின்றது. நோர்வேநாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் செல்வத்தை வாரிவழங்கும் ஒரு மாநகரமாக விளங்கும் ஸ்தவங்கர் நோர்வேயின் செல்வந்த மாநகரங்களில் தனியிடத்தைப் பிடிக்கின்றது. இங்கு தான் நோர்வேயின் ஏற்றுமதி வருமானத்தில் கணிசமான பங்களிப்பை நல்கும் மசகெண்ணை உற்பத்தி செய்யப்படுகின்றது. உலகின் மிகப் பெரிய எண்ணெய் அகழ்வுமேடை(Oil platform) அமைக்கப்பட்டு வருகின்றது வரும் இலையுதிர் காலத்தில் இத்தொழிற்சாலை இயங்கத் தொடங்கும்.

**நோர்வேநாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் செல்வத்தை வாரிவழங்கும் ஒரு மாநகரமாக விளங்கும் ஸ்தவங்கர் நோர்வேயின் செல்வந்த மாநகரங்களில் தனியிடத்தைப் பிடிக்கின்றது.**

வடகடலுக்கு அருகில் அமைந்துள்ள ஸ்தவங்கர் மாநகரின் மொத்த நிலப்பரப்பு 70Km2 மட்டுமே இதில் 37% விவசாய நிலப்பகுதியாகும்(26Km2) சுமார் 2.9% காடுகளும் குன்றுகளுமாகும்(2Km2) இங்கு வாழும் மொத்த மக்கள் தொகை 01. 01. 95 இல் 103496 இதில் வெளிநாட்டவர் தொகை 7703 பேர் இதில் ஆண்கள் 4314 பெண்கள் 3389 ஆகும். நோர்வேயின் மொத்த சனத்தொகையில் வெளிநாட்டவர் 2.1% ஆனால் ஸ்தவங்கர் மாநகரில் வாழும் வெளிநாட்டினர் 7.5%ற்கும் அதிகமாகும். இங்கு வாழும் இலங்கைத் தமிழர்கள் 170 பேர் இதில் ஆண்கள் 101, பெண்கள் 69 பேர்களாகும்.


ஸ்தவங்கர் மாநகரம் அமைந்துள்ள ரோகலாண்ட் மாகாணத்தில்(Fylke) மொத்தம் 26 மாநகரங்கள் உண்டு இதில் ஸ்தவங்கர் மாநகரமே சனத்தொகையில் கூடியதாகும். அதேபோல் சனத்தொகையில் குறைந்த மாநகரம் Utsyre நகரமாகும் (மொத்தம் 211 பேர்) ரோகலாண்ட் மாகாணத்திலிருந்து 6 மிகமுக்கிய பத்திரிகைகள் வெளிவருகின்றன இதில் தற்போதைய ஆளும் கட்சிசார்பான தினசரிச் செய்திப் பத்திரிகையும்(Dag avis ஆரம்பம் 1899) மற்றும் ஸ்தவங்கர் மாலைப் பத்திரிகை (1893) என்பன நூற்றாண்டுகளைக் கடந்த பத்திரிகைகளாகும்.



www.tamilarangam.net

*1950களில் மிகவும் பின்தங்கிய கைத்தொழில் நகரமாக ஸ்தவங்கர் விளங்கிய போதும் நாட்டின் மிகமுக்கிய தொழில் நிறுவனங்களின் தலைமை அலுவலகம் பல, உயர்தரப் பாடசாலைகள், முக்கிய கலாச்சார மையங்கள் என இப்பொழுது ஸ்தவங்கர் நவீன தொழில் நுட்பத்தின் வெளிப்பாடாக விளங்குகின்றது. 1100ம் ஆண்டுகளில் ஸ்தவங்கர் மாநகரம் ஆரம்பிக்கப்பட்டாலும் அது உத்தியோகபூர்வமாக செயல்படத் தொடங்கியது 1125 முதல் தான். எனினும் 1300களின் கடைசிப் பகுதியில் இந்நகரின் முக்கியத்துவம்/வலிமை குறையத் தொடங்கியது. எனினும் 1425களில் மீண்டும் ஸ்தவங்கரின் முக்கியத்துவமும் வணிகமும் பெருகத் தொடங்கியது. அதேபோல் 1500 - 1600 காலப்பகுதியில் சிறந்த கலாச்சாரமையமாக சர்வதேச முக்கியத்துவம் பெற்று விளங்கியது எனினும் 1684இல் ஏற்பட்ட பாரிய தீவிபத்து ஸ்தவங்கரின் வணிக வியாபாரத்தைக் கடுமையாகப் பாதித்தது. இதையடுத்து 1690இல் ஸ்தவங்கரின் வணிகத்தளம் கிறிஸ்ரியன்சன்னிற்கு மாற்றப்பட்டது 1800களின் ஆரம்பத்தில் ஸ்தவங்கரின் முக்கியத்துவம் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியது. மீன்பிடித்துறை, கப்பல்கட்டுதல் உட்பட ரின்களில் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தல் என ஸ்தவங்கர் தொழில் ரீதியாக மீண்டும் முக்கியத்துவம் பெறத்தொடங்கியது. 2ம் உலகயுத்தமும் அதைத் தொடர்ந்து நோர்வேயில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் பொருளாதார சீர்திருத்தங்களும் சமூகவாழ்வில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்களைத் தோற்றுவித்தது. தொடர்ந்து மசகெண்ணையின் கண்டுபிடிப்பும் பல மேற்கத்தைய அமெரிக்க முதலீட்டாளர்களின் பாரிய முதலீடுகளும் ஸ்தவங்கரின் முக்கியத்துவம் மீண்டும் உச்சநிலையை அடையக் காரணமாயிந்துருள்ளது. இதனால் ஸ்தவங்கரில் ஏற்பட்ட அதிகரித்த குடிவரவு இற்றைவரை தொடர்கின்றது.*

**-* இ. சுபாஸ்சந்தர் *-**



"என் பிள்ளையைத் தமிழ் பேச வைப்பது எப்படி?"
"என் பிள்ளைக்குத் தமிழ் மொழியில் விருப்பத்தை ஏற்படுத்துவது எப்படி?"

**விரைவில் வெளிவருகிறது!**

உலகெங்குமுள்ள தமிழ்ப் பிள்ளைகளுக்கு ஒரு புது விருந்து...

**பிள்ளைகளுக்கான தமிழ் வீடியோ**

**பாப்பா பாரதி**

(பாகம்-1)

இனிமையான பாடல்கள்,
கதைகள், நாடகங்கள்.

**சின்னச் சின்னக் கதைகள்** (கதை நூல்)

எங்கள் பிள்ளைகளுக்கு ஏற்ற, தேர்ந்த சொற்கள் கொண்டு
கவனத்துடன் கோர்க்கப்பட்ட இலகு தமிழ்க் கதை நூல். பல வண்ணப் படங்களுடன்.

இவை பாரதி பள்ளி வெளியீடுகள்

BHARATHI ACADEMY
P.O. BOX 1357, CLAYTON, VIC. 3169, AUSTRALIA
TEL: (03) 551 2903

www.tamilarangam.net

# சந்திப்பு

**சுமார் எட்டு வருட காலமாக ஸ்தவங்காரில் வசித்துவரும் தமிழ் நாடகாசிரியரும், நடிகரும், நெறியாளருமான திரு. அ. ஜீவாகரனை சுவடுகள் ஸ்தவங்கர் சிறப்பிதழுக்காக சந்தித்தோம். அவர் ஸ்தவங்கர் தமிழ் நாடக வளர்ச்சி தொடர்பாக பல பயனுள்ள விடயங்களைக் குறிப்பிட்டுச் சொன்னார். அவற்றிற் சில பகுதிகளை இங்கு தருகிறோம்**

*(?) தமிழர்கள் நோர்வேக்குப் புலம்பெயர்ந்த காலம்முதல் இன்றுவரையுள்ள இடைவெளியில் ஸ்தவங்கர் தமிழ் நாடகத்துறையில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகள், அல்லது முன்னேற்றம்?*

(!) ஆரம்ப காலங்களில் புலம்பெயர்ந்த தமிழர்கள் இந்நாட்டு சூழ்நிலைகளுக்குள் படும் இன்னல்களையும், அவதிகளையும் நகைச்சுவை ஊடகத்தினூடாகவே நாடகத்தை மக்களுக்குள் கொண்டு சேர்த்தோம். நகைச்சுவை நாடகம் என்பதை முதலில் ஒருவர் பிரதியாக்கம் செய்துவிட்டு மேடையில் சமர்ப்பிப்பதென்பது நாடகத்தின் சில பகுதிகளைத் தொய்வடைய, அல்லது பிசிறுத்தன்மையுடையதாக்கக் கூடியதாய் அமைவதுண்டு. எனவே சமூக, நகைச்சுவை நாடகத்தை உருவாக்க நாம் இங்கு கூட்டு

முயற்சிகளை மேற்கொண்டோம். நாடகத்தில் பங்கு பெறும் கலைஞர்கள் எல்லோரையும் ஒன்றுகூட்டி கருத்துக்கள் பரிமாறுவோம். அவரவர் சந்தித்த, அல்லது கேட்டறிந்த அனுபவங்களைத் தொகுப்போம். மக்களுக்கு இலகுவாகச் சென்று சேரக்கூடிய கருத்துள்ள நகைச்சுவைகளை அவற்றிலிருந்து தெரிவு செய்வோம். அப்படித் தெரிவு செய்து தொகுக்கப்பட்ட நகைச்சுவைகளை வைத்துப் பொருத்தமான சமூகக் கதையொன்றை உருவாக்கி மேடையேற்றுவோம். இப்படி எம்மால் தயாரித்து வழங்கப்பட்ட நகைச்சுவை நாடகங்களை மக்கள் ரசித்தார்கள். எளிதாகப் புரிந்துகொண்டார்கள். இந்த நாட்டில் தமக்கு நேரும் அனுபவங்களை மேடையிற் சந்திக்கும்போது மக்கள் அதனுடன் ஒன்றித்து ரசித்தார்கள் என்றுகூடக் கொள்ளலாம். தற்போது, அதாவது கடந்த மூற்று நான்கு வருடங்களாக நவீன நாடக மூலத்தைக் கையாள்கிறோம். எமது சமூகத்துக்குள் காலகாலமாய் புரையோடியுள்ள பிரச்சனைகளை மையக்கருவாகக் கொண்டு (உதாரணம்: சாதி, சீதணம், கூலி ஒடுக்குமுறை, அந்நியதேசத்து இருப்புத் தொடர்பான அவல நிலைகள்) நாடகங்களை மேடையேற்றி வருகின்றோம். முன்னைய சமூக, நகைச்சுவை

www.tamilarangam.net

நாடகங்களில் நாம் மேற்கொள்ளாத பல புதிய விடயங்களை தற்போது முடிந்தளவு மேற்கொண்டு வருகிறோம். அதாவது, முன்னைய நாடகங்களுக்குப் போதியளவு பயிற்சி கொடுக்கப்படுவதில்லை. அதற்கு இந்த நாட்டின் பொருளாதார, நேர நெருக்கடிகள், இயந்திரத்தனமான எமது வாழ்க்கைமுறை போன்றவை இடங்கொடுக்க மறுத்தன. தற்போதும் இதே பிரச்சனைகள் இருந்துவந்த போதும் கலைஞர்கள் ஆர்வமாய் முன் வந்து தமது நேரங்களைப் பயிற்சிக் காலங்களுக்காக தியாகம் செய்கின்றனர் என்றே கொள்ளவேண்டும். அடுத்துப் பின்னணியிசை, ஒளியமைப்பு போன்றவற்றில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றோம். (இசையைப் பொறுத்தவரை நண்பர் ரவிக்குமார் எமது சில நாடகங்களுக்கு இசையமைத்து ஒத்துழைத்துள்ளார். இந்தவேளை அவரையும் நினைவு கூருகின்றேன்.) சுருங்கக்கூறின், ஸ்தவங்கர் நகரில் தமிழ் நாடகத்தின் தரமும், முயற்சிகளும் மேலோங்கியுள்ளன.

(?) ஸ்தவங்கரிலுள்ள நாடகக் கலைஞர்கள் பற்றி?

(!) இங்கு(ஸ்தவங்கரில்) முற்றுமுழுதான, அனுபவமுள்ள நாடகக் கலைஞர்களென்று யாரையும் சொல்வதற்கில்லை ஒரு சிலர் தவிர. ஆனால் நாடகத்துறை தொடர்பான ஆர்வம், விடாமுயற்சி என்பது இங்கு இப்போது பல இளைஞர்களிடம் காணக்கூடியதாயுள்ளது. அது ஒன்றே போதுமே... வெற்றிகரமாய் நாடகத்தை மேடையேற்ற. ஆர்வம், விடாமுயற்சி இவை மிக முக்கியமல்லவா?! ஆவவே ஸ்தவங்கரைப் பொறுத்தவரை பல நாடகக்கலைஞர்கள் உருவாகியுள்ளார்கள், உருவாகிவருகிறார்கள். ஸ்தவங்கரில் சில வருடங்களுக்கு முன் அறிமுகமான சில நாடகக்கலைஞர்கள்இன்று வேறு இடங்களில் பிரபல்யமான கலைஞராய் விளங்குவதை என் கண்கூடாகவே கண்டுள்ளேன். என்னைப் பொறுத்தவரை ஸ்தவங்கர் தமிழ் நாடகத்துறைக்குக் கிடைத்த வெற்றிதான் இது.

(?) உங்களது நாடகப் பயிற்சிகள் தொடர்பாய்?

(!) ஒரு பாத்திரத்தை, அந்தப் பாத்திரத்தை ஏற்று நடிக்கும் நடிகருக்கு அதன் வசனங்களைப்பேசி நடித்துக்காட்டுவதை முடிந்தவரை தவிர்த்து, அந்தப் பாத்திரத்தின் தன்மைகளை, குணாம்சங்களை, ஆளுமையை அந்த நடிகன் உள்வாங்கும்வரை விளங்கப்படுத்துகின்றோம். நடிகன் அவற்றை உள்வாங்கியபின் தான் வெளிப்படுத்தும் உணர்வுகளை, முகபாவங்களை கூர்மையாகக் கவனிக்கிறோம். நாம் எதிர்பார்க்கும் பாவங்களை அவர் வெளிப்படுத்துமிடத்து அப்படியே செய்யும்படி விட்டுவிடுகிறோம். நாடகக்கலைஞர்களுக்கு ஒன்றைத்தான் நான் அடிக்கடி கூறிவருகிறேன். அதாவது தரப்படும் பாத்திரத்தையேற்று நடிக்க வேண்டுமென்பதை விடுத்து, அந்தப் பாத்திரமாகவே மேடையில் வாழ வேண்டுமென்று.

(?) ஒவ்வொரு பாத்திரத்துக்குமுரிய நடிகர்களைப் பொருத்தமாய்த் தெரிவு செய்யும் முறைகள்?

(!) பல வழிகளைக் கையாள்கின்றோம். அதில் ஒன்று: ஒரு நாடகத்துக்கு நடிகர்களைத் தெரிவு செய்யும் நாளில் கலைஞர்கள் எல்லோரையும் ஒன்றுகூட்டி. சில சம்பவங்களைக்கூறி, அதில் வரும் ஒரு பாத்திரமாக நடிகர்கள் ஒவ்வொருவராய் நிகழ்த்திக்காட்டச் சொல்வோம். அதனூடாக அவரவர் நடிப்புத் தன்மைகளை அறிந்து தெரிவு செய்வோம்.

(?) உங்கள் நாடகங்கள் தொடர்பாய் உங்களைத்தேடிவரும் விமர்சனங்கள் பற்றி?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*(!) எமது நாடகங்கள் தொடர்பாய் முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் பல. அந்த விமர்சனங்களை ஏற்று தற்போது பல திருத்தங்களைச் செய்ய முடிந்துள்ளது. விமர்சனம் தேவை. விமர்சனங்கள் கட்டாயம் தேவை. எந்தவொரு கலையிலக்கியப் படைப்பையும் விமர்சனங்களூடாகவே செழுமைப்படுத்த முடியும். சுருங்கக்கூறின் ஆரோக்கியமான விமர்சனங்களூடாகத்தான் கலையிலக்கியங்களை மெருகூட்டவும், வளர்க்கவும் முடியும். ஆனால் விமர்சனம் என்ற பெயரால் தற்போது எம்மத்தியில் முற் வைக்கப்படுபவை பல விமர்சனங்களேயல்ல. ஒருவர்மீதுள்ள கோபதாபங்களையும், காழ்ப்புணர்ச்சிகளையும் தீர்க்கும்பொருட்டு விமர்சனம் என்பதன் பெயரால் சாடல்களையே காண்கிறோம். கறாரான, ஆளுமையுள்ள பூரணமான விமர்சனங்கள் முன்வைக்கப்படல் வேண்டும். முதலில் எமது விமர்சகர்கள் விமர்சனம் என்றால் என்ன என்று நிறையவே அறியவேண்டியுள்ளது.*

*(?) இறுதியாக ஏதாவது...?*

*(!) நாடகத்துறை தொடர்பாக நிறைய அறியத் தவிக்கும் ஓர் ரசிகன் நான். நான் கற்றுக்கொள்ள வேண்டியது நிறையவே உள்ளது. இங்கு மேடையேற்றப்பட்ட நாடகங்களூடாக நிறையவே கற்றுக்கொண்டுள்ளேன். ஒவ்வொரு நடிகர்களிடமிருந்தும் நிறையவே கற்றுள்ளேன். நண்பர் தமயந்தியூடாக நவீன நாடகத்துறை தொடர்பான பல விடயங்களை அறிந்துள்ளேன். *நிழலும் நேர்கொண்டே* என்ற எனது பிரதியை தமயந்திதான் நெறிப்படுத்தினார். அந்தப் பயிற்சிக் காலங்கள் மிகவும் இனிமையானவை. அவற்றினூடாக நிறையவே அனுபவங்களைப் பெற்றுள்ளேன். இந்தவிடத்தில் சில கலைஞர்களை நான் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன். கொடுக்கப்பட்ட பாத்திரத்தில் நான் எதிர்பாத்ததை விடவும் மிகச்சிறப்பாக, சொல்வப்போனால் உயிரோட்டமாகவே நடித்தார்கள், மேடையில் வாழ்ந்தார்கள். இப்போதும் அவை என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளது.*

**சந்திப்பு: தனஞ்சயன்**

---

## அகதிக்கு உதவ.....

பாலஸ்தீனப் பெண்மணியான சுஹைலா அண்ட்றாவஸின் வழக்கு முடிவடைந்துள்ளது. இதன் விளைவாக அவர் ஜேர்மனியிடம் கையளிக்கப் படலாம். இதைத் தடுத்து நிறுத்த அனைவரும் உதவுமாறு சுஹைலாவிற்கான ஆதரவுக் குழு கேட்டுள்ளது.

1977ல் ஜேர்மனிய விமானம் ஒன்றைக் கடத்திய குற்றச்சாட்டில் சோமாலியாவில் கைதான சுஹைலா அங்கு சிறைத் தண்டனை அனுபவித்தார். பின்பு பல வருடங்களின் பின், நோர்வேயில் அரசியற் தஞ்சம் கோரி வாழ்ந்து வந்தார். கடந்த வருடம் இவரது உண்மை அடையாளம் தெரிய வந்ததன் விளைவாக அவரை ஜேர்மனிக்கு அனுப்பக்கூடிய சூழல்கள் உருவானது வாசகர்கள் அறிந்ததே. ஜேர்மனியில் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம், அவர் ஏற்கனவே விமானக் கடத்லுக்காகத் தண்டனை அனுபவித்து விட்டார் போன்ற காரணங்களை முன்வைத்து சுஹைலாவின் நண்பர்கள் போராடி வருகின்றனர்.


சுவடுகள் வாசகர்களது குரலும் இவர்களுடன் இணைய வேண்டும் என வேண்டுகிறோம்.

தொடர்புகளுக்கு: Støttegruppen for Souhaila Andrawes, Folke Bernadottes vei 6, 0862 Oslo.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வீடு எங்கே?

**அரபியில்:** ஃபிர்தெளஸ் சபித் ஹீசேனி
**தமிழில்:** அ.ஜ.கான்

ஓ வீடு எங்கே?
சாம்ராஜ்ஜியங்கள் உருவாகி அழிந்த
நிலத்திலா உள்ளது?
விடுதலைக்காக தியாகிகள் ரத்தம் சிந்தியது
எங்கே?
வேற்றுமையில் ஒற்றுமை இப்படித்தானோ!

நம் தொடக்க நிலை வடிவமெடுத்த போது
வாழ்வின் இலயத்திற்கேற்றபடி ஊசலாடிய
போது
வெயில்கால தூக்கக்கலக்க இரவொன்றில்
தாயின் கைகளில் கூடுகட்டிக் கொண்டோம்.

குழந்தைப் பருவம் இளம்பிராயத்தோடு
கலந்தும்
சிறுவயது வாலிபத்தோடு கலந்தும்
எங்கேயோ
ஆனால் வன்முறையின் வெறியாட்டத்தின்
போது
ஆயிரக்கணக்கானவர்களோடு
ஒதுக்கப்பட்டோம்

ஓ! வீடு எங்கே?
புதிய தேசத்தின் மடிப்புக்குள்
நம்பிக்கையை இளமை தழுவிய நிலத்திலா
உள்ளது?
படகோட்டிகளின் துக்கம் நிறைந்த எண்கள்
நதிகளை கடக்கையில் அதிர்கிறது
ஏகாந்த மனதின் அடி ஆழங்களில்
கற்றுக் கொடுக்கப்படாத அறியாமை நிறைந்த
உலகில்
மேய்ப்பர்களின் நிலங்களிலிருந்து
புல்லாங்குழல் இசைகள் அமைதியான
இருத்தலுக்கு
பசும் நெல்வயல்களினூடே வரும் சைகை
அழைப்புகள்

ஓ! வீடு எங்கே?
சுதந்திரத்தின் இனிமையை சுவைக்கவும்
தாய்நிலை மதிப்பீடுகளை தக்கவைக்கவும்
அந்நிய தகுதிகளோடு சோதனையிடப்பட்டு
சுயமாய் தன்னிறைவு பெற்ற நிலத்திலா
உள்ளது?

மாபெரும் சிந்தனையாளர்களின்
மூளைகளிலிருந்து
கற்றுக் கொள்ள இருக்கைகள் போடப்பட்ட
நிலம்
அறிவு எங்கு கிடந்தாலும் அபகரித்துக்
கொள்ள
செழுமையாக்கப்பட்டது
ஊக்கப்படுத்தப்பட்டது.
அந்நிலைக் கவிஞர்களின் பாடல்கள்
தனிமை நிறைந்த வெற்றிடத்தை நிரப்ப
மறுமலர்ச்சிக்கு அழைத்துச் சென்றது
வசந்தத்தின் ஒளிர்வுக்குள் மூழ்கிய இடம்
வழக்குகளும் வலிகளும் சூழ்ந்த நாட்களில்
போதுமான இரக்கம் பெற்றிருந்தது
புகலிடம் கொண்ட அந்நிலம்.

ஓ! வீடு எங்கே?
அழைப்பிற்கிணங்கி புனித எல்லைக்குள்
அனைவரையும் ஒழித்துக்கட்டி
மீட்சிக்கு உத்தரவாதம் அழிக்கின்ற
ஆத்மாக்கள் வாழும் நிலத்திலா உள்ளது?

ஆசீர்வாதங்கள் பொங்கி வழியும் நிலத்திலா
தவறுக்கு மன்னிப்பு வழங்குவதை
மோட்சம் பெறுவதற்கான நேர்வழியை
உறுதி செய்ய வந்த மனிதர்களின் நிலத்திலா
வீடு எங்கே? ஓ! வீடு எங்கே?

www.tamilarangam.net

- தேசப்பிரியன் -

## தேசத்தின் குறிப்புகள்




சிறிலங்கா அரசாங்கத்திற்கும் புலிகளிற்குமிடையிலான பேச்சுவார்த்தை சிக்கல் நிலையை அடைந்துள்ளதை யிட்டு 3வது ஈழப்போரிற்கான சூழ்நிலை தோன்றிவருவதாக அறியவருகின்றது. பேச்சுவார்த்தைகள் நான்கு மாதங்களிற்கு மேலாக பல மட்டங்களைத் தாண்டி நடைபெற்றுள்ள போதிலும் பேச்சுவார்த்தையில் ஒரு இணக்க முடிவைக் காணமுடியாத நிலையிலேயே இருதரப்பினரும் உள்ளனர். பேச்சுவார்த்தையில் ஏற்றுக் கொண்ட விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தாமலும், தமிழ் மக்களின் உயிர் வாழுதலிற்கான அடிப்படைக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவும் மறுக்கும் அரசு அதற்கு இராணுவ அச்சுறுத்தலைக் காரணமாகக் காட்டியுள்ளது. இதற்கு மாறாக அடிப்படைப் பிரச்சனைகளைத் தவிர்த்துத் தீர்வுத் திட்டங்களை விவாதிக்கத் தயார் என அறிவித்துள்ளது. அடிப்படைப் பிரச்சனைகளையே நடைமுறைப்படுத்தத் தடையாய் இருக்கும் இராணுவம் தீர்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த எவ்வாறு ஒத்துழைக்கும் என்ற கேள்வி ஒரு புறமிருந்தாலும் தீர்வுத் திட்டங்கள் என்ன என்பதை இற்றைவரை அரசு பகிரங்கப்படுத்தவில்லை. ஜீலை மாதமளவில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவிருக்கும் புதிய அரசியல் யாப்பு இனப்பிரச்சனை தொடர்பான தீர்வுத் திட்ட விடயங்களைக் கொண்டிருக்காது என வெளியாகியுள்ள செய்தி சிறிலங்கா அரசின் மீதான நம்பிக்கையீனத்தை மேலும் வலுப்படுத்துவதாகவுள்ளது.

### புதிய அரசியல்யாப்பும் சிங்கள பௌத்த பேரினவாதமும்

1972, 1977ம் ஆண்டு அரசியல்யாப்புகள் போன்றே புதிய அரசியல்யாப்புக் குழுவிலும் தமிழர்கள் எவரும் இடம்பெறவில்லை. இதுமட்டுமல்ல முன்னைய இரு யாப்புகளிற்கும் தற்போதைய யாப்பிற்கும் நெருங்கிய பல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒற்றுமைகள் உண்டு. இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என்றும் இலங்கையின் அரசியல் நிர்வாகம் ஒற்றையாட்சி முறைக்குட்பட்டதாக இருக்கும் என்பதுவும் ஒரு சில உதாரணங்களாகும். அரசியல்யாப்பு முழுமையாக வெளியிடப்படாத நிலையில் அதனை விமர்சிப்பது நடைமுறைச் சாத்தியமில்லாத போதும் வெளியாகியுள்ள சில பகுதிகள் இலங்கைவாழ் சிறுபான்மை மக்களிற்கு எதுவிதத்திலும் நம்பிக்கையூட்டுவதாக இல்லை. இலங்கை பல இன, மத, மொழி, கலாச்சாரங்களைக் கொண்ட ஒரு பல் தேசிய நாடு என்பதை 1948 முதலே அரசியல் யாப்புரீதியாக ஏற்றுக்கொள்ள சிங்களத் தேசிய தலைவர்கள் மறுத்து வருகின்றனர். சந்திரிக்காவும் அவ்வரிசையில் இடம் பிடிக்க முயல்வதாகவே தற்போதைய நிலையுள்ளது. சந்திரிக்காவுடன் நெருக்கமான சில சிறுபான்மைத் தலைவர்கள், பத்திரிகையாளர்கள் கூறுவது போல் சந்திரிக்கா வேண்டுமானால் பேரினவாதக் கருத்தமைவு இல்லாதவராக இருக்கலாம். ஆனால் தற்போதைய சந்திரிக்காவின் அரசியல் செயற்பாடுகளும் அறிக்கைகளும் அவர் விரும்பாவிட்டாலும் கூட சிங்கள பௌத்த பேரினவாதத்திலிருந்து விடுபட முடியாதவராக அதன் முழுமையான ஆளுகைக்குட்பட்டவராக செயல்பட முனைவதாகவே தெரிகின்றது.

## இந்திய விஜயமும் மறைக்கப்பட்ட உண்மைகளும்

இலங்கையின் பூகோள அமைப்பு சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் இந்தியாவுடன் ஒரு நெருங்கிய இணைந்த உறவைப் பேணவேண்டிய கட்டாய சூழலை இலங்கைக்கு ஏற்படுத்துகிறது. இதனடிப்படையிலேயே இலங்கை இனப்பிரச்சனையை இலங்கை இந்திய அரசுகள் கையாளுகின்றன. ஆரம்பம் முதலே இலங்கை இனப்பிரச்சனையில் முரண்பட்ட தெளிவில்லாத நிலையையே இந்தியரசு கையாண்டு வருகின்றது. இலங்கை இனப்பிரச்சனையைவிட தென் கிழக்காசியாவில் தனது ஆதிக்கம் வலுப்பெற முக்கியத்துவம் அளிக்கும் கொள்கையின் விளைவே இலங்கை இந்திய ஒப்பந்தம். இவ் ஒப்பந்தத்தின் தோல்வி இனப்பிரச்சனையில் இந்தியாவின் நேரடித் தலையீட்டைத் தவிர்த்தாலும் இந்திய அரசின் சம்மதமின்றி எத்தகைய தீர்வுத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த இயலாத நிலையே இன்றும் நிலவுகின்றது.

சந்திரிக்கா பதவியேற்றது முதலே இலங்கை இனப்பிரச்சனைக்கு முக்கியத்துவம் அளித்துள்ள இந்தியா, கிடப்பில் போடப்பட்டிருந்த ரஜீவ் வழக்கை துரிதப்படுத்தியுள்ளதுடன் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருந்த வெளிநாடுகளுக்கு இலங்கைப் பிரச்சனையில் தனது இறுக்க நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளது. இதையடுத்து இம்முயற்சியில் ஈடுபாடு கொண்டிருந்த பல நாடுகள் பின்வாங்கி உள்ளன. தற்போது நடக்கும் பேச்சுவார்த்தைகளைப் பற்றிக் கண்காணிக்க ஒரு குழுவை நியமித்திருக்கும் இந்தியரசு இலங்கையரசுக்கு தலையிடியை கொடுக்கும் சில அதிரடி நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளது. அதில் ஒன்று தான் அதி தீவிர இந்திய எதிர்ப்புக் கொள்கையை கொண்டிருந்த மக்கள் விடுதலை முன்னணிக்கு (ஜே. வி. பி) ஆயுதப்பயிற்சி வழங்கத் தொடங்கியுள்ளமையும் இனப்பிரச்சனையில் இலங்கை இராணுவத்தின் இறுக்க நிலைப்பாட்டை ஆதரித்து மறைமுகமாக செயல்ப்படுதலுமாகும். தென் கிழக்காசியாவின் ஒற்றுமைக்குப் புலிகள் ஆபத்தானவர்கள் என்ற இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் பேச்சும் இலங்கையில் ஒற்றையாட்சிக்குட்பட்டே இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவின் பேச்சும் இனப்பிரச்சனை தொடர்பாக இந்திய அரசின் நிலைப்பாட்டைக் காட்டுவதாகவுள்ளது. இப்பிரச்சனை தொடர்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்த இதழ்
**பெண்கள் சிறப்பிதழ்**
**விரைவில்**
நிறவாதமும் நிலைபெறுதலும் சிறப்பிதழ்

*இலங்கை இந்திய அரச அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தையின் போது வடக்குக் கிழக்கு இணைந்த தீர்வில் இந்தியாவின் நாட்டமின்மையும், காணப்படும் எத்தகைய தீர்வுத் திட்டங்களும் இந்திய மாநிலங்களுக்குள்ள அதிகார பரவலாக்கலிற்கு(?) கூடுதலாக இருக்கக் கூடாது என்பதையும் இந்திய அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனடிப்படையிலேயே இலங்கையரசால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டங்கள் இந்தியாவின் பார்வைக்கு வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு வருவதாகவும் அறியவருகின்றது. இதுமட்டுமன்றி இன்னொரு விடயத்தையும் இந்திய அதிகாரிகள் கோடிட்டுக்காட்டியுள்ளனர் தற்போது முடக்கி விடப்பட்டுள்ள ராஜீவ் கொலை தொடர்பான விசாரனை குழுவின் சிபார்சின் அடிப்படையில் புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்பட பல முக்கிய தலைவர்களை நாடு கடந்தும்படி இந்தியா கோரவுள்ளது. இதன் மூலம் அரச புலிகள் பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டை போடுவதுடன் ஒரு பெரும் இராணுவத் தாக்குதலை நடத்த இலங்கையரசைத் துரண்டவும் இந்தியா முனைப்புடன் செயலாற்றி வருகின்றது. பிராந்தியத்தில் இந்தியாவின் ஆதிக்கமும் சர்வதேச ரீதியாக இந்தியாவின் ஆதரவும் இலங்கைக்கு அவசியமாகையால் இனப்பிரச்சனை தொடர்பாக தெளிவில்லாத நிலையில் இருக்கும் சந்திரிக்கா அரசும் தற்போதுள்ள நிலையை பயன்படுத்திக் கொள்ளவே விரும்புகின்றது. எனினும் பேச்சுவார்த்தையிலும் சமாதானத்திலும் தாங்கள் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டிருப்பதாகக் காட்டிக் கொள்ளவே சந்திரிக்கா அரசு விரும்புகின்றது.*

## வெகுவிரைவில் பாராளுமன்றப் பொதுத்தேர்தல்?

*புதிய அரசியல்யாப்பு நடைமுறைக்கு வந்ததும் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் நடாத்துவதற்கான ஆயத்தங்களை பொ. ஐ. ஐ. முன்னணி செய்து வருகின்றது. எனினும் புதிய அரசியல்யாப்பு நடைமுறைப்படுத்தத் தேவையான 2/3 பலம் அரசாங்கத்திடமோ அதை ஆதரிக்கும் எதிர்க்கட்சிகளிடமோ கிடையாது. எப்படிப் பார்த்தாலும் பிரதான எதிர்க்கட்சி என்ற ரீதியில் ஐ. தே. க. ஆதரவின்றி புதிய அரசியல் யாப்பை நடைமுறைப்படுத்த இயலாது. இந்நிலையில் சகல நிறைவேற்று அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதி என்ற முறையில் பாராளுமன்றத்திற்கு அப்பாற்பட்ட முறையில் புதிய அரசியல்யாப்பை நடைமுனறப்படுத்த முயலலாம் அதில் ஒன்றுதான் சர்வஜனவாக்கெடுப்பு. எனினும் 1994ல் கிடைத்த வெற்றி 1995ல் கிடைக்குமா என்பது கேள்விக்குறியே புதிய அரசியல்யாப்பை நடைமுறைப்படுத்தும் வரை புலிகளுடனான பேச்சில் ஒரு நெகிழ்ச்சித் தன்மையைக் கடைப்பிடிக்கவே சந்திரிக்கா அரசு விரும்புகின்றது. இதனூடாக புதிய யாப்பின் பிரகாரம் நடைபெறும் தொகுதிவாரியான தேர்தல் முறையினூடாக சிறுபான்மை மக்களின் ஆதரவினூடாக பாராளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மையைப் பெறலாம் என அரசாங்கம் கருதுகின்றது. பொ. ஐ. ஐ. முன்னணி அரசுக்குள்த் தோன்றியுள்ள முரண்பாடுகளும் இக்கூட்டு முன்னணியில் சு. கட்சியின் ஆதிக்கமும் இடதுசாரிக்கட்சிகளின்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிருப்தியீனமும் சந்திரிக்காவின் இந்த துணிச்சலான பரிசோதனைக்கு எவ்வளவு தூரம் வெற்றியளிக்குமென கூறுவது கடினமே.

## புலிகளும் பேச்சுவார்த்தையின் அவசியமும்

இன்றுள்ள அரசியல் நெருக்கடி நிலையில் புலிகளால் முன்வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கைகள் தமிழ் மக்களின் நடைமுறை ரீதியான அன்றாட பிரச்சனைகளை உள்ளடக்கியதாகவே பெருமளவிற்குக் காணப்படுகின்றது. பொருளாதாரத் தடை நீக்கம், கடல் வலயத் தடைநீக்கம், சுதந்திரமான போக்குவரத்து என்பன தமிழ் மக்களைப் பொறுத்தவரை முக்கியமாகவும் உடனடியாகவும் தீர்வு காணவேண்டிய விடயங்களாகும். ஒரு நிரந்தர சமாதானம் தோன்ற வேண்டுமானால் இவ்வாறான பிரச்சனைகளிக்கு முதலில் முற்றுப்புள்ளி வைத்தல் அவசியம். இதனால் புலிகளிற்கு இராணுவரீதியாக சாதகநிலை இருப்பினும் சமாதானத்தில் அரசு உறுதியாக இருக்கும்வரை இராணுவ ரீதியான சாதகநிலை பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது ஏனெனில் தமிழ் மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள் நேர்மையான நீதியான சமாதான அரசியல்த் தீர்வினையே விரும்புகின்றனர். பேச்சுவார்த்தை முயற்சிகள் இன்று சிக்கல் நிலையை அடைந்திருந்தாலும் பேச்சுவார்த்தை முறிவடையக்கூடாது என்பதே பலரின் விருப்பமாகும். எனினும் இடவிடயத்தில் அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படும்வரை, புலிகளும் அரசியல்த் தீர்வு பற்றிய தங்களது தீர்க்கமான தீர்வுத் திட்டங்களை பகிரங்கமாக முன்வைக்கும் பேச்சுவார்த்தை என்பது காலத்தைக் கடத்தும் கைங்கரியமாகவே இருக்கப்போகின்றது.

### கடைசிச் செய்திகள்

எதிர்பார்த்தபடியே தற்போது புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையிலான மோதல் ஆரம்பித்துள்ளது. காலத்தை இழுத்தடித்து யுத்தத்திற்குத் தயாராகும் சிறிலங்கா அரசின் நோக்கத்தைப் புலிகள் அறிந்து கொண்டதாலேயே புலிகள் முதலில் தாக்கினார் என புலிகளின் சர்வதேசப் பேச்சாளர் லோரன்ஸ் திலகர் கூறியுள்ளார். எனினும் சர்வதேசத் தொடர்பு சாதனங்களில் சில வெளியிட்ட செய்திகளின்படி புலிகளே மோதல் தவிர்ப்பு நிலையை மீறினார்கள் என்பதும் பேச்சுவார்த்தையின் போது புதிய புதிய கோரிக்கைகளை முன்வைத்தார்கள் என்பதும் நாலாம் கட்டப்பேச்சுவார்த்தைக்கு முன் பலாலி இராணுவமுகாமில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவித்துள்ளன.

மோதல் தவிர்ப்பு உடன்பாடு ஏற்பட்டது முதலே கிழக்கில் பொதுமக்கள் பலரும் இராணுவத்தினரின் தாக்குதலுக்கு உள்ளானதுடன் முகாம்களைப் பலப்படுத்தி யுத்தத்திற்கு இராணுவம் தயாராகி வந்தது. இன்று தோன்றியுள்ள இந்நிலையைத் தொடர்ந்து இருபகுதியினரையும் மீளவும் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவர சர்வதேச நாடுகள் முயற்சித்து வருகின்றன. எனினும் அது இலகுவான காரியமாக இருக்கப்போவதில்லை என இலங்கையிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யோகி


# புதிய தளங்களில் ஓர் சங்கீத சங்கமம்

இன்னும் என் நெஞ்சினில் சுவைத் தேனாகிப் போன நேற்றைய இரவு. மேலைநாட்டு நவீன சங்கீத அதிவேக இசையினால் இறுகிப்போன அசைவற்ற அந்த மண்டபக் காற்று, மெலிந்து மெதுவாக இசைத்து அசைந்தது. கீழைநாட்டு இசையினை தானும் கேட்கத்தான் காற்றும் மெதுவாக அசைந்தது போலும். கொத்தாக எறிந்து கோர்வையாய் அசைந்த குட்டி மலர்களின் பரத அசைவுகளுடன் இசைந்த பாடல்களின்போது இடம் தேடி அமர்ந்தோம்.

எல்லோரும் எழுந்து அங்கும் இங்கும் போகிறார்கள். என் நண்பர்களும் எனை மறந்து எங்கோ ஓடிவிட்டார்கள். அப்பா என்று என்னைத் தன் அன்பினால் கட்டும் மகளும் தன் விழிகளின் வீச்சுக்குள் கணவனைத் தேடுகிறார். அவரும் எங்கோ தெரியவில்லை. நிகழ்ச்சி முடிந்துவிட்டது. இவ்வளவு சுவையாக ஒரு இசை இரவினை விரைவாக்க முடியுமோ? பழமையான பரதத்தின் பின்னால் 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்று இப்போதுதான் தொடக்கிய நேற்றைய இரவு - குட்டி மாஸ்ரருக்குள் புதைந்து கிடந்த மனிதனைப் புதிதாக அடையாளம் காட்டிற்று. தன்னைவிட்டு விலகி, மக்கள் மனங்களில் ஆயாசமாக மனிதர் அமர்ந்துவிட்டார்.

"நோர்வேயில் அரசியற் தஞ்சம் கோரிய தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புங்கள். ஆனால் இன்னும் அமைதி வரவில்லை. தயவு செய்து சற்றுப் பொறுத்திருங்கள்" என்று நோர்வே தமிழ்ச் சமூகம் சார்பாக எழுந்த ஈனமான குரலை நோர்வே அதிகார அலகு ஆக்ரோஷமாக அடக்க எக்காளமிட்டது. எமக்காகக் குரல் உயர்ந்த எழுந்த 'அகதிகள் நடவடிக்கைக் குழு'வின் குரல் பணபலமும் இன்மையால் ஈனமாகிப் போன வேளையில் 'இதோ நானிருக்கிறேன்' என மனிதாபிமானக் கரங்களை நீட்டியவர்தான் குட்டி மாஸ்ரர்.

'பொது நலனை' வரித்த போதே மனிதர் புதியதோர் தளத்தினுள் ஓடிப்போய்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உட்கார்ந்து கொண்டார். இப்போதுதான் தூரத்தே தெரிகிறது எனைவிட்டு எங்கோ ஓடிச்சென்ற நண்பர்களின் அசைவுகள். பொது மனிதனாகிப் போன குட்டி மாஸ்ரரையும் தமது இனிய குரல்களால் - தமது விரல்களில் அசைவுகளினால் இறுகிப்போன காற்றினை இசையாய் உயிர்ப்பித்த கலைஞர்களையும் சொற்களைத் தேடிப் பிடித்து எனது நண்பர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

குட்டி மாஸ்ரர் என்ற அந்த மனிதனைக் ட்டி அணைத்து "நல்ல நோக்கம், மிக நன்றாக நிகழ்ச்சிகள் அமைந்தன" என்றேன். என் உணர்வுகளைக் கொட்ட வார்த்தைகள் பலமற்றுப் போயின. என் வார்த்தைகளால் - சின்னக் கைகளால் அந்த மனிதனைக் கட்டிக்கொள்ள முடியவில்லை.

அங்கும் இங்கும் கலைஞர்களைச் சுற்றி மக்கள் பாராட்டிக் கொண்டிருக்க, சுற்றித் தேடிய எனது கண்கள் பரதநாட்டியப் பாடல்களுக்கு வயலின் இசையால் உயிரூட்டிய கலைஞியைச் சந்தித்தன. அங்கும் அவரைச் சுற்றி மக்கள் கூட்டம். மகிழ்வான சிரிப்பினூடே பாராட்டைத் தெரிவிக்க மட்டும் முடிநத்து. காலைச் சுதந்திரமாக வீசிக்கொண்டு மேடை முன்னேரப் பகுதியில் மூன்று கலைஞர்கள். சாதனை ஒன்றினை சாதாரணமாக நிகழ்த்திவிட்டு, எதுவுமே தெரியாதது போல் சிரித்த வண்ணம் இருந்தனர்.

எல்லா வகை இசைப் பிரியர்களையும் துல்லியமாக நிறுத்துவிட்டு, ஒரு வெற்றிகரமான இசை இரவினை நிகழ்த்திய குட்டி என்ற மனிதனின் நோக்கம் பாராட்டப்பட வேண்டியதே.

பரதநாட்டியம், பாரதி பாடல், ஈழ மெல்லிசைப் பாடல்கள், தமிழ் சிங்களப் பொப்பிசைப் பாடல்கள், மேலைநாட்டுச் சங்கீதக் கருவிகளூடே கீழைநாட்டுச் சங்கீத சுரங்கள், தமிழக சினிமா பழைய, புதிய, மிகப் புதிய பாடல்கள்...... எதையுமே மனிதர் விட்டுவைக்கவில்லை. நிகழ்ச்சிக்கு வந்திருந்த எல்லோரையும் திருப்திப்படுத்த எடுத்த பிரயத்தன முயற்சியின் விளைவுதான் இந்தக் கதம்ப இசைப் பின்னல்.

திரு.சச்சி அவர்கள் ஏன் இந்த நிகழ்ச்சி நிகழ்த்தப் படுகிறது என்று கூறி, குட்டி மாஸ்ரருக்கு நன்றி, பாராட்டுத் தெரிவித்தார்.

"ஈழத்துக் கலையென்றால் ஏன் தமிழக சினிமாவாகவும், சினிமாப் பாடல்களாகவும் போய்விட்டது? இது ஈழத் தமிழர்களின் சாபக்கேடு இல்லையா?" என்ற என் நண்பனின் பொதுவான ஈழத் தமிழ் சமூக கலை தொடர்பான விசனம், குட்டி மாஸ்ரரின் உயர்ந்த நோக்கத்தையும் மனிதாபிமானத்தையும் கொஞ்சமும் குறைத்து விடுவதல்ல.

நாமும் எமது கலைகர்களும் எமது சொந்தக் கலைகளின் தேடல்களூடாக, சுய படைப்பாற்றலை நிகழ்த்தி, இன்னும் உயரிய கலைத்தளத்தினை உருவாக்க முயல வேண்டும் எனும் ஆதங்கத்தின் வெளிப்பாடு மட்டுமே.

யோகி.


**தமிழ்க்கல்வி வளர்ச்சி**

**5வது மாநாடு**

கோலாலம்பூர். மே மாதம் 27-28-1995

**ஏற்பாடு:**

**தமிழ் இலக்கியக் கழகம்**

Tamil Literary Society.
NO. 110, Jalan Bangau,
Berkeley Garden, 41150 Klang.
Malaysia.

www.tamilarangam.net

*"இன்றைய இலங்கை மக்கள் ஒரு ஜனநாயக மயமாக்கலுக்கு ஆதரவைக் கொடுத்துள்ளார்கள். சமூகநலக் கொள்கைகளுக்கு ஆதரவைக் கொடுத்துள்ளார்கள். அவற்றுடன் ஒரு திறந்த பொருளாதாரக் கொள்கை என்பதே இன்றைய நிலை. இது ஒரு புதிய நிலையாகும்." - சமுத்திரன்*

நோர்வேயில் வசித்து வரும் பேராசிரியர் ந.சண்முகரத்தினம் (சமுத்திரன்) 1994 பிற்பகுதியில் இலங்கை சென்று திரும்பினார். ஏறத்தாழ மூன்று மாதங்கள் அங்கு தங்கியிருந்த அவர் இந்தச் சந்திப்பில் தற்போது அங்கு ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்கள் பற்றிய தனது அபிப்பிராயங்களைத் தெரிவித்தார்.

# தாயகத்திற்கு ஒரு மீள்பயணம்

## இலங்கை சென்று திரும்பிய சமுத்திரனுடன் ஒரு சந்திப்பு



*(முன்தொடர்)*

***பல எழுத்தாளர்கள், புத்திஜீவிகளிடையே புலிகளை நிராகரிக்கும் போக்குக் காணப்படுகிறது. தமிழ் மக்களது வரலாறு எழுதப்படும்போது அதில் புலிகளுக்கும் முக்கிய பங்குண்டு என்பதை மறுக்கமுடியாது. இதை எவ்வாறு பார்க்கிறீர்கள்?***

புத்திஜீவிகள் மத்தியில் புலிகளைப் பற்றி இவ்வாறு அபிப்பிராயம் இருப்பது போலவே, புத்திஜீவிகள் பற்றியும் புலிகளுக்கு இப்படி ஒரு அபிப்பிராயம் இருப்பதாகக் கருதப்படுகிறது. புலிகளின் இந்தப் போக்கையும் விமர்சிக்கத்தான் வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை புலிகளது அரசியல் தொடர்பாக எனக்குப் பல விமர்சனங்கள் உள்ளன. இவற்றைப் பகிரங்கமாக முன்வைத்தும் இருக்கிறேன். இன்றைய நிலையில் இலங்கை அரசுக்கும் விடுதலைப புலிகளுக்கும் இடையில்தான் பேச்சுகள் நிகழவேண்டும். இவர்கள் முஸ்லிம் மக்களுடன் ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டும். விடுதலைப் புலிகள் ஒரு போராட்ட சக்திதான் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அவர்களது அரசியல், தமிழ் மக்களது போராட்டத்தின் விளைவுகளைப் பாதித்திருக்கிறது என நம்புகிறேன். இந்தக் குறைபாடுகள் இல்லாவிடில் எமது போராட்டம் வேறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விதமாக அமைந்திருக்கும். சர்வதேச ரீதியான அங்கீகாரமும் கிடைத்திருக்கும் என நம்புகிறேன்.

இன்றைய நிலையில் அவர்கள் பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்து அதை நடத்துவதுடன் மாத்திரமன்றிச் அரசியல் ரீதியில் சமாதானப் போக்கை வெளிக் காட்டுவதுடன் தமிழ் மக்களது போராட்டம் மேலும் பலம்பெற வழிவகைகளை மேற்கொள்ளல் அவசியம். குறிப்பாகச் சிங்கள மக்களுடன் அவர்களது நம்பிக்கையைப் பெறும் வகையில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் சர்வதேச சமூகத்திடம் அங்கீகாரம் பெறும் விதத்திலும் விடுதலைப் புலிகள் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வராயின் அவர்களால் தமிழ் மக்களது விடுதலைக்குக் கணிசமான பங்களிக்க இயலும் என நம்புகிறேன்.

*இடதுசாரிக் கொள்கையைக் கொண்டிருப்பதாகத் தோற்றம் காட்டினாலும் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி பின்பற்றிய அதே திறந்த பொருளாதாரக் கொள்கைகளையே கடைப்பிடிக்க உள்ளதாக அறிவித்துள்ளது. இந்நிலையில் பொருளாதார ரீதியாக இது எவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு மாற்றாக அமைய முடியும்? உலக வங்கியின் 'பிடி'யில் இருந்து எந்தளவுக்குச் சந்திரிகா அரசால் விடுபட முடியும்? இந்தப் பின்னணியில் இன்னொரு கேள்வி: இலங்கைவாழ் மக்களது அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் தீர்க்கப் படுமா?*

முன்னர் இருந்த கொள்கைகள் மக்களது பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுக்கவில்லை. எனவே மாற்றுக் கொள்கை அவசியம். இந்த அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்ற வேண்டிய நிலையில் உள்ளது. எத்தகைய திறந்த பொருளாதாரக் கொள்கை என்பதுதான் முக்கிய கேள்வியாகும். சந்தைக்குச் சாதகமான திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்பதே தற்போதைய அரசின் கொள்கை. அதேபோல் மனித முகமுள்ள திறந்த பொருளாதாரக் கொள்கை என்பதும் இவர்களது கொள்கையாக உள்ளது. இது இன்னமும் தெளிவாக்கப் படவில்லை. எத்தகைய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப் படுத்தப்பட உள்ளது. அண்மையில் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்திலும் இது தெளிவாக இல்லை. எனது அபிப்பிராயத்தில் சந்தை உறவுகளைப பயன்படுத்த வேண்டிய கட்டாயம் உண்டு. அதே நேரம் ஒரு ஜனநாயக அபிவிருத்தி அரசாக இலங்கையை எப்படி மாற்றுவது என்பது ஒரு பெரிய சவால். இந்த அரசியல் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவைக்கு ஒரு சவாலாக அமையலாம். ஏனெனில் உலகவங்கி தானும் ஜனநாயக மயமாக்கலுக்குச் சாதகமான ஒரு நிறுவனம் எனக் கூறுகிறது. இன்றைய இலங்கை மக்கள் இந்த அரசுக்கு ஒரு ஜனநாயக மயமாக்கலுக்கு ஆதரவைக் கொடுத்துள்ளனர்; சமூக நலக் கொள்கைகளுக்கு ஆதரவைக் கொடுத்துள்ளனர். அவற்றுடன் பொருளாதார அபிவிருத்தி என்பதே மக்களது விருப்பம். இது உலக வங்கிக்கு ஒரு சவால். இந்நிலையில் உலகவங்கி என்ன செய்யப் போகிறது? மக்களது கருத்துக்கு மதிப்பளிக்கப் போகிறதா

www.tamilarangam.net

அல்லது இதுதான் கொள்கை என ஒன்றைத் திணிக்கப் போகிறதா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். துரதிர்ஷ்ட வசமாக இலங்கை ஒரு பலவீனமான நிலையிலேயே உள்ளது. சர்வதேச மூலதனத்தைக் கடன் பெறும் நிலையில் இலங்கை இல்லை. அதேவேளை கடந்த காலத்தில் எதிர்பார்த்த அளவு சர்வதேச மூலதனம் இலங்கைக்கு வரவில்லை. இவற்றால் இலங்கை இன்னும் உலக வங்கி போன்ற நிறுவனங்களிடம் தங்கியிருக்க வேண்டிய நிலையில் உள்ளது. எனவே பொருளாதார அபிவிருத்தி என்பது தொடரும் பிரச்சனையாகவே இருக்கப் போகின்றது. இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு ஏற்பட்டாலும் அதன் இறுதி வெற்றி, பொருளாதார அபிவிருத்தியிலேயே தங்கியுள்ளது. இதிலும் இலங்கையின் சகல இன மக்களும் ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும்.

***நிதிநிறுவனங்கள் போல, சர்வதேச ரீதியில் பணக்கார நாடுகளை எதிர்த்து நிற்பது சாத்தியமா? உதாரணமாக, 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' அஞ்சல் நிலையம் புத்தளத்தில் அமைவதைத் தற்போதைய அரசு முன்பு எதிர்த்தது. இப்போது அந்த ஒப்பந்தம் நிராகரிக்கப்படவில்லை.***

***எதிர்க்கட்சியில் இருந்தபோது கடைப்பிடிக்கப்பட்ட கொள்கை ஆளுங்கட்சியாக மாறியபின் மாறியிருப்பதையே இது காட்டுகிறது.***

இலங்கையின் உள்ளார்ந்த அமைப்புகளை அபிவிருத்திக்கு ஏற்ற வகையில் எவ்வாறு

## 1[illegible]வருட பழமையான ஸ்தவங்கர் மறை மாவட்டம்

நோர்வேயின் அரசியல் யாப்பில் கிறிஸ்த்த மதத்திற்குரிய அரசியல், சமூக அந்தஸ்த்தும், பாதுகாப்பும் யாப்பியல் ரீதியாக வரையறுக்கப்பட்டுள்ளது. அதே சமயம் ஏனைய மதங்களும் சுதந்திரமாக இயங்க வழி வகுக்கப்பட்டுள்ளது. இன்றைய நோர்வேயைப் பெறுத்த வரை மதம் பொது விடயங்களில் முக்கியத்துவம் பெறுவதில்லை. ஆனால் சில நூற்றாண்டுகளிற்கு முன்பு நிலையே வேறு. கிறிஸ்த்தவ மதத்தின் பெயரால் நடந்த ஒடுக்கு முறைகள், துன்புறுத்தல்கள் அதிகம். அந்த அளவிற்கு நோர்வே சமுகத்தின் நாளாந்த வாழ்க்கையில் கிறீஸ்த்தவ மதம் அழுத்தமான ஆதிக்கத்தைச் செலுத்தியது. அந்த வகையில் Stavanger ஆயரைக் கொண்ட மறை மாவட்டம் முதன் முதலாக 1125இல் ஆரம்பிக்கப்பட்டது. பின் 1682ல் ஆரம்பிக்கப்பட்ட Agder மறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. இது மீளவும் 1925ல் Rogaland மறைமாவட்டத்துடன் இணைக்கப்பட்டு, மாற்றமெதுவுமின்றி இற்றை வரை இயங்கி வருகிறது.

மலர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாற்றலாம் என்பது பற்றி அரசாங்கம் இன்னும் தெளிவாக இல்லை. எல்லாவற்றுக்கும் சந்தையை நம்பியிருக்க முடியாது. எதைத் தனியார் மயப்படுத்துவது, எங்கு சந்தை உறவுகளைக் கட்டுப்படுத்துவது என்பதில் தெளிவு தெரியவில்லை. உதாரணமாக ஏற்றுமதியைப் பொறுத்தவரை அரசின் தலையீடு நீண்டகால நோக்கில் அவசியம். இந்த நிலைகள் பற்றி அரசு இன்னும் போதிய கவனம் செலுத்தவில்லைப் போலவே தெரிகிறது.

***சந்திரிகா இலங்கையின் முதற் பெண் ஜனாதிபதி ஆகியிருக்கிறார். அந்த வகையில் பெண்களின் நிலையை மேம்படுத்த அவரிடம் ஏதாவது திட்டம் உள்ளதா? அல்லது அவ்வாறு அவரது நடவடிக்கைகளைக் காணக் கூடியதாக உள்ளதா?***

குறிப்பாக ஒரு திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. இன்றைய அரசில் அமைச்சரவையில் முன்னெப்போதையும் விட அதிகளவில் பெண்கள் உள்ளனர். இதை மாத்திரம் வைத்துப் பெண்களின் நிலை மேம்பட்டிருப்பதாகக் கூற முடியாது. இந்த நிலை மற்றைய பெண்களுக்கு உரிமைகளுக்குப் போராடுவதற்கு உந்துசக்தியாக அமைந்திருக்கும் என நம்பலாம். ஆனால் இலங்கையில் பல பெண்ணுரிமை அமைப்புகள் உள்ளன. இப்போதுள்ள நிலை அவர்களது போராட்டத்துக்குச் சாதகமானது எனக் கூறலாம்.

இலங்கையில் பெண்களின் கல்வி மட்டம் உயர்வாக இருப்பதால் அவர்கள் பல விடயங்களை விளங்கிக்கொள்ளக் கூடியவர்களாக உள்ளனர். இது அவர்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க உதவும் (உதாரணமாகத் தங்களது மீளுற்பத்தி பற்றிய உரிமைகள், பல்கலைக்கழகத்தில் கணிசமான பெண்கள் பயில்வது, அதிகளவில் வேலைகளில் ஈடுபடல்). அதேவேளை இலங்கையில் தினசரியும் பெண்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சனைகள் இலங்கை நாகரிகம் குறைந்த ஒரு நாடா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

***எந்த நேரமும் பெண்கள் தனியாக நடமாடக்கூடிய பகுதியாக உலகிலேயே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிதான் உள்ளது எனக் கூறுகிறார்கள். அதே நேரம் விடுதலைப் புலிகளில் பெண்களின் பங்கு கணிசமாக உள்ளது. இது ஒரு சாதகமான அம்சமாகப் பார்க்கப்படக் கூடியதா?***


(இந்நிலையில் கலந்துரையாடலில் கலந்துகொண்ட வேறு சிலர் இதுபற்றி, இது ஒரு அசாதாரண நிலை என்பதைச் சுட்டிக் காட்டுவதுடன், பெண்களைக் கேலி செய்வது யாழ்ப்பாணச் சமூகத்தில் முற்றாக மாறிவிடவில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகின்றனர்.)

***இந்த விஜயத்தில் உங்களது குறிப்பிடத்தக்க அவதானங்கள் சிலவற்றைக் குறிப்பிட முடியுமா?***

நான் சென்ற பகுதிகளில் பல நண்பர்களைச் சந்தித்தேன். அவர்கள் மிக உற்சாகமாக உள்ளனர். தெற்கிலும் கிழக்கிலும் பல சாதகமான நிலைகளுடன் பலர் எதிர்பார்ப்புகளுடன் உள்ளனர்.

தெற்கைப் பொறுத்தவரை தேர்தலுக்கு முன்பிருந்தே பல சிங்களக் கிராமங்களில்,

www.tamilarangam.net



நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் (MIRJE) யுத்தத்திற்கு எதிராகப் பிரசாரங்களை மேற்கொண்டு வந்தது. இவர்களது யுத்த எதிர்ப்புக் கூட்டம் ஒன்றுக்கு நான் போயிருந்தேன். யுத்தத்திற்கு எதிராகவும், தமிழ் மக்களது உரிமைகளுக்காகவும் அவர்களது குரல்கள் நம்பிக்கை தந்தது. நூற்றுக்கு நூறு சிங்கள மக்கள் மத்தியில், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடு பிரிவதைத் தடுக்கவே யுத்தத்தை நடத்துகிறோம் என்ற பிரசாரத்தை, யுத்தமே நாட்டைப் பிளவுபடுத்துகிறது எனக் கூறி எதிர்கொள்கிறார்கள். யாழ்ப்பாணம் பற்றிய பல சந்தேகங்களையும் அந்தக் கூட்டங்களில் தீர்க்கின்றனர். தமிழ் மக்கள் தமது சுயமரியாதையுடன் வாழ்வதே தீர்வுக்கு உகந்த வழி என அவர்கள் கூறுகின்றனர். ஆகவே பல வகைகளில் நல்ல சூழ்நிலை உள்ளது. இதனை அரசு தகுந்த முறையில் பயன்படுத்தல் அவசியம்.

***சிங்களப் பகுதிகளில் சிங்கள இனவாதத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்யப்படுவது போலத் தமிழ்ப் பகுதிகளில் தமிழ் இனவாதத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்யக்கூடிய நிலை இல்லை. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?***

இது வருத்தத்திற்குரியது. தமிழ் இனவாதத்திற்கு எதிராகத் தமிழ் மக்கள் குரல் கொடாதவரை தமிழ் மக்கள் ஜனநாயக உணர்வுள்ளவர்கள்; நாகரிகமானவர்கள் என்று நாம் கூறிக்கொள்ள முடியாது. அதன் அடிப்படையாக இருப்பது வடகிழக்கில் உள்ள முஸ்லிம் மக்கள் பிரச்சனை.

***இலங்கையின் இனப்பிரச்சனைக்கு, உங்களது***

www.tamilarangam.net

*அபிப்பிராயத்தில் சாத்தியமானதும் சரியானதுமானதுமாக என்ன தீர்வாக அமையலாம் எனக் கருதுகிறீர்கள்? வடக்கு கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்களுக்கு என்ன தீர்வு?*

ஒருவகையிலான சமஷ்டி அமைப்பு ஒன்றேதீர்வாக அமையக்கூடும். எனது அபிப்பிராயத்தில் அதுபற்றிப் பூரணமான ஒரு வடிவம் இல்லை. வடகிழக்கை இணைக்கக் கூடிய, முஸ்லிம் மக்களது தனித்துவத்தை, உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய ஒரு வடிவம் அவசியம். அதனாலேயே முஸ்லிம் மக்களின் பங்களிப்பும் ஒரு கட்டத்தில் அவசியம். அவர்களது ஒத்துழைப்பும் அவசியம்.

விடுதலைப் புலிகள் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் நல்லுறவை வளர்த்து, ஒருவகையிலான உத்தியோக பூர்வமற்ற தொடர்பை ஏற்படுத்தி ஒரு சுமுக நிலையை ஏற்படுத்த முயல்வது நல்லது என்றே கருதுகிறேன்.

*இம்முறைதான் இந்தியாவின் நேரடி அரசியல் தலையீடு இல்லாததுபோல் தெரிகிறது. இந்தியா என்ன மாதிரியாக நடந்துகொள்ளும் எனக் கருதலாம்?*

கொள்கை ரீதியில் இந்தப் பேச்சுகளுக்குத் தான் சாதகமாக இருப்பதாகவே இந்தியா கூறுகிறது. அது உண்மையாயின் நல்லது. ஆனால் இந்தியா உண்மையில் எப்படி நடந்துகொள்ளும் என்பது தெரியவில்லை. இந்தியாவுக்கு விடுதலைப் புலிகளுடன் பிரச்சனை உள்ளது. தற்போதைய பேச்சுகள் விடுதலைப் புலிகளுடன்தான் நிகழ வேண்டும். இந்நிலையில் இந்தியா பெரிதாகத் தலையிடாமல் இருக்க வேண்டும் என்பதே பொதுவாக எல்லாரதும் விருப்பம்.

*விடுதலைப் புலிகள் இந்தப் பேச்சுகளில் தமிழ் மக்களது அரசியல் வெற்றிகளை ஈட்டுவார்கள் போலத் தெரிகிறதா?*

இதுவரை அவர்கள் அந்தப் பேச்சுகளில் சரியாக நடந்துகொள்வதாகவே தெரிகிறது. ஆனால் இவற்றைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

*சமஷ்டித் தீர்வு ஏற்படின் தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையில் விலகிப்போக வாய்ப்பு உண்டா?*

அப்படித் தோன்றலாம். ஆனால் சுயநிர்ணய உரிமை என்பது அடிப்படையில் தமிழ் மக்களது பிரிந்து போகும் உரிமையையும் உறுதி செய்வது. அதேவேளை அதன் அடிப்படையில் மக்களது சகல உரிமைகளும் அடங்கியுள்ளன. மக்களது சகல உரிமைகளும் கிடைக்க வேண்டும் என்பதுதான் முக்கியமானது. சுயநிர்ணய உரிமையின் பேராலேயே மக்களின் உரிமைகள் மறுக்கப் படலாம்.

*சந்திரிகாவை ஒரு இரட்சகராகப் பார்க்கும் போக்கு பரவலாக முன்வைக்கப் படுகிறது. இப்போதுள்ள பல்வேறு சக்திகளுக்கிடையில் அவருக்கு அதற்கான வீச்சுக் கொடுக்கப் படுமா?*

www.tamilarangam.net

சந்திரிகாவை அப்படிப் பார்க்க இலங்கையின் இன்றைய நிலை காரணமாகலாம். இதுவரை இலங்கையின் தலைமையின் நியாயமின்மை, தலைமையின் கொடுமைகள் என்பன சந்திரிகாவை ஒரு இரட்சகராகப் பார்க்கக் காரணமாகலாம். சந்திரிகா ஒரு மாற்றாகத் தென்படலாம். ஆனால் இதை நாங்கள் இலங்கை மக்களின் எதிர்பார்ப்புகளின் வெளிப்பாடாகக் கொள்ளலாம். இதுவரை மக்கள் அனுபவித்த துயரங்களின் விடுதலைக்கான எதிர்பார்ப்பாக இது அமையலாம்.

### *இன்றுள்ள நிலையில் ஒரு தீர்வை வலியுறுத்த வெளிநாட்டுத் தமிழர்கள் என்ன பங்களிப்பை வழங்கலாம்?*

தீர்வுக்கு ஆதரவாக சர்வதேச அபிப்பிராயத்தைத் திரட்டுவது அவசியம். இதை வெளிநாட்டுத் தமிழர்கள் செய்யலாம். விடுதலைப்புலிகளின் கிளைகள் இதில் ஈடுபடலாம். பொது அமைப்புகளும் இதைச் செய்யலாம். இணைந்து செயற்படுவதே பயன்தருவது. இது ஒரு பொதுவான பரந்த தமிழ் அமைப்பினால் செய்யப் படலாம் என்றே நான் கருதுகிறேன்.

நன்றி: சமுத்திரனுக்கும், கலந்துகொண்ட நண்பர்கட்கும்.

தொகுப்பு: மனு

**_எல்லை யோர வியாபாரம்_**

எல்லையோர வியாபாரம் பற்றி?
பாதையோர வியாபாரம் பற்றிக் கேள்விப்பட்டுள்ளோம் ஆனால் எல்லையோர வியாபாரம் பற்றி?
ஐரோப்பா வாழ் தமிழர்களில் பலரிற்கு இது தெரியும். ஐரோப்பிய ஒன்றியம் என்ற பெயரில் பல
நாடுகள் கூட்டாக இயங்கினாலும் அந்நாடுகளிடையே காணப்படும் நாணயப் பெறுமதி ஏற்ற
இறக்கங்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான *இறுதிவிலையில் பலத்த
வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது தொடர்பாக நோர்வே அரசு கடுமையான
சட்டதிட்டங்களை (அளவு கட்டுப்பாடு) வைத்துள்ள போதிலும் பொலிஸாரின் கண்ணில் படாமல்
கடத்தல் தினமும் நடைபெறுகின்றது. இதில் கடந்த வருடம் (1994) தை, மாசி மாதங்களில்
நடைபெற்ற விற்பனையோடு ஒப்பிடுகையில் 1995 தை, மாசி மாதங்களில் விற்பனை முறையே 45%
- 56% அதிகரித்துள்ளது. இது நோர்வேயில் மாத்திரம் இடம் பெறும் விடயமில்லை.
நோர்வீஜியர்கள் சுவீடனுக்கு ஓடுவதுபோல சுவீடன் நாட்டவர் டென்மார்க்கிற்கும் டென்மார்க்
பிரான்ஸ் நாட்டவர் ஜேர்மனிக்கும் ஜேர்மன் மக்கள் நெதர்லாந்து எல்லை யோரத்திற்கும்
ஓடுகின்றார்கள். நோர்வே சுவீடன் நாடுகளைப் பொறுத்தவரை வர்த்தக நிலுவை சுவீடனுக்கே
சாதகமாயுள்ளது. 1994 ல் சுமார் 30000 மில்லியன் குரோணர்களிற்கு நோர்வீஜியர்கள் சுவீடனில்
பொருட்களைக் கொள்வனவு செய்துள்ளனர். இது சட்டரீதியான வர்த்தகம் காட்டும் கணக்கு
கடத்தல் கணக்கு இதில் அடங்காது. எனினும் ஐரோப்பிய பொது நாணயம் (1998) புழக்கத்திற்கு
வரும்போது நிலைமையில் பாரிய மாற்றம் ஏற்படுமென கருதப்படுகின்றது.

www.tamilarangam.net

# நவீன பகுத்தறிவுவாதிகளும் தமிழகமும்



அரசியலில் கோமாளித்தனமான சம்பவங்கள் இடம் பெறுவதுண்டு. ஆனால் அரசியலே கோமாளித்தனமாக மாறியிருப்பது தமிழகத்தில் தான் என்று துணிந்து கூறிவிடலாம். அந்தளவுக்கு அங்கு நடைபெறும் சம்பவங்கள் கூனிக் குறுக வைக்கின்றன. ஜெயமாலினி, குஷ்புவுக்குக் கோவில் கட்டியதையெல்லாம் தூக்கி எறியும் விதத்தில் தமிழகத்தை ஆளும் பகுத்தறிவுக் கொள்கையில் வழிவந்த அ.தி.மு.க கட்சியினரும் அமைச்சர்களும் செயலாற்றி வருகின்றனர்.

தங்களது ஆத்மார்த்த இஷ்ட தெய்வமான முதலமைச்சர் ஜெயலலிதாவின் 47வது பிறந்த தினத்தை முன்னிட்டுத் தமிழகத்தில் நடந்த கூத்து, இந்த 20வது

திராவிடன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூற்றாண்டிலும் இப்படியும் நடக்குமா என மூக்கின் மீது விரலை வைக்குமளவிற்கு நடந்தேறியுள்ளது. அமைச்சர்களும், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் என பலரும் மண் சோறு சாப்பிட்டு, வேப்பிலை கட்டி அங்கப் பிரதட்சனை செய்து, அலகு குத்திக் காவடி எடுத்து, தீ மிதித்து, கோவிலைச் சுற்றி ஈரத்துணியுடன் உருண்டு புரண்டு, தங்கள் தலைவிக்காகத் தங்கத் தேர் இழுத்து இப்படி இன்னும் எத்தனையோ? கற்பனை பண்ணவே முடியாத சம்பவங்கள்.

தமிழகத்தைச் சில பார்ப்பணிய பெருச்சாளிகளும் ஆண்டிருக்கின்றன. பார்ப்பணிய ஒடுக்கு முறையாளர்கள் பலர் அமைச்சர்களாகவும் இருந்திருக்கிறார்கள். ஆனால் திராவிட இயக்கத்தில் இருந்து பிரிந்து பகுத்தறிவுவாதிகளாகத் தங்களைச் சித்திரித்துக் கொள்ளும் அ.தி.மு.க. ஆட்சியில் நடக்கும் கேவலமான அரசியல்கள் தமிழகத்தில் முன்பு இடம் பெறாதவை. சுதந்திரமடைந்த பின் பார்ப்பணிய ஒடுக்கு முறையாளர்களிடம் இருந்து தமிழகத்தை மீட்க 'அறிஞர் அண்ணா', 'ஈ.வே.ரா. பெரியார்' உட்பட பல திராவிடக் கழக உறுப்பினர்கள் மேற் கொண்ட முயற்சிகளை எல்லாம் இன்றைய ஜெயலலிதா அரசு முறியடித்தே தீருவது எனக் கங்கணம் கட்டிக் கொண்டு செயலாற்றி வருகிறது.

திராவிடப் பகுத்தறிவு இயக்கம் பற்றிய கடுமையான விமரிசனங்கள் இருந்த போதும் தமிழகத்தில் பல புரட்சிகரமான மாற்றங்களைத் தோற்றுவித்ததில் தி.க. ஆற்றிய பங்களிப்பு மறுக்க முடியாதது. மூட நம்பிக்கை, சாதியம், மத அனுஷ்டானங்கள் சாஸ்திரம் வேதம் போன்ற எல்லா வகையான ஒடுக்கு முறை வடிவங்களையும் கொண்டு இயங்கிய சக்தி வாய்ந்த பார்ப்பணிய ஒடுக்கு முறையாளர்களுக்கு எதிராக சிலை உடைப்பு, சிலைக்குச் செருப்பு மாலை,



*வருடாந்தம் ஒவ்வொரு முறை பிறந்த நாள் விழாவின் போதும் கருமாரி அம்மனாக, மூகாம்பிகையாக அருள் தரும் ஆதிபரா சக்தியாக வலம் வரும் செல்வியாரின் அடிகளார்கள் என்ன கருதினார்களோ தெரியாது இவ்வருடப் பிறந்த நாளின் போது தங்களது இஷ்ட தெய்வத்தை கன்னி மரியாளாகச் சித்திரித்துப் போஸ்ரர்கள் ஒட்டினார்கள். ஆனால் யாருமே எதிர் பாராத அளவிற்குத் நாகபட்டினம் தூத்துக்குடி உள்ளடங்கலாக தமிழகத்தில் வெடித்த வன்முறையினால் பல கோடி ரூபா பெறுமதியான பொருள் நாசத்தை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியுள்ளது. அது சரி செல்வியை இந்துக் கடவுளாகச் சித்திரித்த போது ஏன் இந்து சமய குரவர்கள் எதிர்ப்புக் குரல் கொடுக்கவில்லை? எல்லாமே செல்வியின் 'லக்ஷமி தட்சணை' தானாம். செல்வியின் நவீன பகுத்தறிவுச் சிந்தனையாளர்கள் தங்களது பையை நிரப்புவதில் மட்டுமன்றி கோவில் உண்டியல்களையும் தாராளமாக நிரப்புகின்றனர். இந்து வெறியர்களான சிவசேனை (ஆர்.எஸ்.எஸ்.), பாரதிய ஜனதா ஆகியவற்றுடனும் உறவுகளை விருத்தி செய்து வருகின்றனர். இவர்களுக்கு வீரமணி சிலை வைத்தாலும் ஆச்சரியமடைய முடியாது.*

www.tamilarangam.net

பூணூல் அறுப்பு, கலப்புத் திருமணம், விக்கிரகங்களிற்குத் தலை உடைப்பு என ஒடுக்கு முறைவாதிகளிடம் இருந்து மக்களை மீட்கப் புறப்பட்ட அன்றைய திராவிடக் கழகம் இனறு ஜெயலலிதா புகழ் பாடும் வீரமணியின் கையில் இருந்து கொண்டு திண்டாடுகிறது. தி.க. பெயரைத் தனது கட்சியுடன் ஒட்ட வைத்துக் கொண்டிருக்கும் அ.தி.மு.க. அரசும் சரி தி.மு.க., ம.தி.மு.க. கட்சிகளும் சரி நேரம் பார்த்துக் காரியம் தொடங்குவதில் இருந்து பார்ப்பணிய சக்திகளுடன் இணையத் துடிப்பது வரை தங்களது நவீனப் பகுத்தறிவுக் கொள்கைகளை(?) பறைசாற்றி வருகின்றனர். ஜெ.அம்மையார் கோவில் குளத்தில் நீராடச் சென்று பல உயிர்கள் பலியானது முதல் தற்போது கருமாரி அம்மனாகக் காட்சியளிப்பது வரை..... தமிழக மக்களை மீண்டும் முட்டாளாக்குவதில் திராவிடக் கட்சிகள் யாவும் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டு வருகின்றன. ஒரு காலத்தில் தங்களது அரசியலைக் கொண்டு நடத்த திராவிடக் கட்சிகளிற்கு ஈழத்தமிழர்கள் 'கைத்தடியாக' பயன்பட்டார்கள். இன்று ஈழத் தமிழர்கள் பற்றி வாய் திறவாமல் இருப்பதே தங்களது அரசியல் எதிர்காலத்திற்குச் சிறப்பு எனக் கருதுகின்றார்கள். அந்த அளவிற்குத் திராவிட மறு மலர்ச்சி பகுத்தறிவுக் கோட்பாடுகள் திராவிடக் கழகங்களை ஆட்டிப்படைக்கின்றன. திராவிடச் செம்மல்களின் நவீன பகுத்தறிவு வாதக் கொள்கைகள் மக்களை முட்டாளாக்குகின்றனவோ இல்லையோ பதுங்கியிருந்த பார்ப்பணிய பெருச்சாளிகள் நாக்கில் எச்சில ஊற சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன.

## உலக வங்கியின் இந்தியர்க்கான கண்பார்வை

உலகவங்கி தொடர்பாக பல தரப்பட்ட விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டுவரும் இன்றைய காலகட்டத்தில் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஒரு சில பிரயோசனமுள்ள காரியங்களிலும் உலகவங்கி ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ளது.

தொடர்ச்சியாக இந்தியாவில் பெருகிவரும் கண்பார்வைக் குறைவு/பார்வையற்றோரின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் முகமாக உலகவங்கி சுமார் 118 மில்லியன் டொலர்களை (சுமார் 3300 மில்லியன் இந்திய ரூபாய்) குறைந்த வட்டிக்கு கடனாக வழங்க முன்வந்துள்ளது. இப்பணத்தைக் கொண்டு பார்வையற்ற அல்லது பார்வை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள 8 மில்லியன் மக்களுக்கு 2000ம் வருடத்துக்குள் செலவிடப்படவுள்ளது. இந்திய மொத்த சனத்தொகையில் 10.5 மில்லியன் மக்கள் கண்பார்வை இழந்துள்ள அதேசமயம் கைத்தொழில் வளர்ச்சி கொண்ட நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்களில் 40-60 வயதிற் குட்பட்டோரில் சுமார் 40% ஊழியர்களின் கண்பார்வை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

www.tamilarangam.net

- விமல்ராஜ் -

# இங்கு நிகழ்ந்தவை

**21.01.95. மாலை ஆறுமணி. றோகலாண்ட் ஈழத்தமிழர் சங்கத்தால் ஸ்தவங்கர் நகரில் தைப்பொங்கல்விழா கொண்டாடப்பட்டது. விழாவில் *நிர்ப்பந்தம்* என்னும் நாடகமும், றூட்ஸ் இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியும், *குணாவின் பதிவுகள்* என்ற தலைப்பில் ஓவியக்கண்காட்சியும் குறிப்பிடத்தக்கவை.**

*முதலில் திரு. அ. ஜீவாகரனின் *நிர்ப்பந்தம்* என்னும் நாடகம் தொடர்பாக மேலோட்டமாய். கதையின் சாராம்சம் இதுதான்:-*

*மிகவும் ஏழ்மையில் வாடும் ஓய்வுபெறும் ஆரம்பப்பாடசாலை ஆசிரியர் ஒருவரது குடும்பம். ஆசிரியர், அவரது மனைவி, இரண்டு மகன்கள். குடும்பத்தின் அன்றாட தேவைகளையே பூர்த்தி செய்ய முடியாத நிலையில், அவர்களது ஒரேயொரு பூர்வீக சொத்தான வீடு, வளவை ஆறுமாதத்தில் மீட்பதாக அவ்வூர் சுரண்டல்வாதியொருவரிடம் ஈடுவைத்துவிட்டு ஆசிரியரின் மூத்த மகன்*

*சந்தோஷ் பட்டப்படிப்பை இடையில் நிறுத்திவிட்டு பிரான்ஸ்க்குப் பயணமாகிறான் குடும்பத்தைக்காப்பேன் என்ற நம்பிக்கையுடன். ஒரு வருடத்துக்கு மேலாய் அவன் வேலையெதுவுமின்றி அலைகிறான். அவனது நண்பர்களான கார்த்திக், சுரேஷ் ஆகியோரும் அவனுக்கு வேலைதேடும் முயற்சியில் இறங்கி தோல்வியைத் தழுவினர். சந்தோஷ் பிரான்ஸ் பயணமாவதற்கு ஈடு*



*வைத்துவிட்டு வந்த வீட்டை மீட்க முடியாமற் போகிறது. ஆறு மாதத்தவணையில் மீட்பதாக ஈடு வைத்த வீடு ஒரு வருடத்துக்கும் மேலாக மீட்கப்படாமற்போக கடனுக்கும், அதன் வட்டிக்குமாக வீடுவளவு விலைபோகிறது. ஆசிரியரும் குடும்பமும் இப்போது ஒதுங்கக் கூரைகூட இல்லாத நிலையில் தள்ளப்படுகின்றனர். ஆசிரியரின்*

www.tamilarangam.net

மகன் சந்தோஷ் குடும்ப நிலை தொடர்பாக குழம்பிய நிலையில் பணம் தேடத் தவறான பாதையை நாடுகிறான். அவனது நண்பன் கார்த்திக் பல அறிவுரைகள் கூறித்தடுத்த போதும் தற்போதைய குடும்ப சூழ்நிலையைக் காரணம் காட்டி போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுகிறான். பிரான்ஸ் பொலீஸினால் அவனொருநாள் கைது செய்யப்படுகிறான். ஆயுள் தண்டனையும் பெறுகிறான். இதன்பின் அவனது குடும்பம் மிகவும் பாதிப்புக்கும், பரிதாபத்திற்குமுரிய நிலைக்குத் தள்ளப்படுகிறது. மனநோயாளி போல்த் தந்தை, கதறியழும் தாய், மனமுடைந்து செய்வதறியாது தவிக்கும் தம்பி, தனது மகளை தங்கையின் மகன் சந்தோஷ்க்குத் திருமணம் செய்து வைக்க காலகாலமாய்க் கனவுகள் வளர்த்து வந்த மாமன், கேள்விக்குறியை பார்வையாய் எழுப்பியபடி வானத்தையே பார்த்துக்கொண்டு நிற்கும் சந்தோஷின் காதலி. இப்படி


நாடகத்தின் இறுதிக் காட்சி மிகவும் அவலமான சூழ்நிலையை சித்தரித்தது. சந்தோஷின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்து, அவனைத் துணையாகக் கொள்ளக் காத்திருந்த மாலதி என்ற பாத்திரம் இப்போது மேடைமுன் கேள்விக் குறியாக நிற்கிறது. எமது சமூகத்தில் வழமையான, இக்கறுமான பாரம்பரியக் கலாச்சாரத்தின் பெயரால் சொல்லப்படும் *உள்ளத்தில் நினைத்தவனை அவன் இல்லாது போகினும் அவனது நினைவுகளை மட்டுமே சுமந்து தனிமரமாய் வாழ்தல்* என்ற கருத்தோடு நாடகாசிரியர் உடன்பட மறுக்கிறார். அவள் வாழவேண்டியவள். தனது வாழ்வைத் தீர்மானிக்கும் பொறுப்பு முற்றுமுழுதாக அவளது கைகளிலே உள்ளது என்பதை நாடகத்தின் முடிவில் வலியுறுத்தி நாடகம் முடிவுறுகிறது.

சமூகத்தைச் சீரழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும் போதைப்பொருள் கடத்தல், பாவனை சமூகத்தை மட்டுமல்ல அதில் ஈடுபடுபவனின் குடும்பத்தையும் எவ்வளவுதூரம் சீரழிக்கிறது என்பது கதையின் கருவூலம். சினிமாத்தனமான சில வாசனைகள் வீசியபோதும் யதார்த்தங்கள் பல மேலோங்கி நிற்பதாய் நாடகம் தான் சொல்ல வந்த விடயத்தை வெற்றிகரமாகச் சொன்னது. இந்த நாடகத்தில் பாத்திரங்களேற்று நடித்த அத்தனை கலைஞர்களுமே ஒருவருக்கொருவர் சளையாது, விட்டுக்கொடுக்காது நடித்தனர். நடித்தனர் என்பதைவிட அந்தந்தப் பாத்திரங்களாகவே சுமார் ஒருமணி நேரம் மேடையில் வாழ்ந்தார்களெனலாம். இந்த நாடகத்தில் சிலர் ஏற்கெனவே அறிமுகமானவர்களும், சில புதியவர்களும் நடித்தனர். அறிமுகக் கலைஞர்களென ஏற்றுக்கொள்ள முடியாதபடி தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர். சுமார் பத்து நாட்கள் மட்டுமே நாடகப் பயிற்சியெடுத்தனர் என்பதை அறிந்தபோது உண்மையிலேயே நம்பமுடியாமற்தான் இருந்தது. மொத்தத்தில் நாடகம் தான் நினைத்த எல்லையை மிகவும் இலகுவாகவே சென்று தொட்டது. குறுகிய கால எல்லைக்குள் புதிய கலைஞர்களையும் செழுமைப் படுத்தி நெறியாள்கை செய்திருந்த நாடகாசிரியரும், நெறியாளருமான திரு. அ. ஜீவாகரனுக்கு ஒரு சபாஷ். இந்த நாடகத்திற் கலந்துகொண்ட அனைத்து கலைஞர்களிடமும் எதிர்காலத்தில் இன்னும் நிறையவே எதிர்பார்க்கலாம். இன்னும் நிறைய இவர்களால் மக்களுக்குத்தர முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடுத்து றூட்ஸ் இசைக் குழுவினாின் இசைநிகழ்ச்சி. பல பழைய, புதிய திரைப்படப்பாடல்களால் விழா மண்டபத்தை நிறைத்து சுமார் ஒன்றரை மணிநேரம் ரசிகர்களை அசையவிடாது இசையின்பத்தில் மூழ்கடித்தனர். தென்னிந்திய சினிமா இசைக்கலைஞர்கள் மேடை நிகழ்ச்சி நடாத்தும்போது புதிய இசையமைப்பாளராகிய ஏ.ஆர். ரகுமானின் பாடல்களை இசைக்கும் போது மிகுந்த பிரயத்தனப்படுவதை அவதானிக்க முடிவதுண்டு. ஆனால் றூட்ஸ் இசைக்குழுவினர் ரகுமானின் புத்தம் புதிய பாடல்களையும் மிகவும் சர்வசாதாரணமாகவும், அதே முழுமையுடனும் இசைத்தனர் என்பது வியப்புக்கும், பாராட்டுதலுக்கும் உரியதாகும். இசைநிகழ்ச்சியின் இறுதியில் ஈழத்துத் துள்ளிசைப்பாடல்கள் சிலவும் பாடப்பட்டன. ரசிகர்கள் கைகளால் தாளம் போட்டு ரசித்தார்கள். இதில் ஒன்றைப் பூரணமாக உணரமுடிகின்றது. ஈழத்துத் துள்ளிசைப்பாடல்கள் ஏதோவோர் வகையில் எமது ரசிகர்களை ஈர்த்துள்ளது என்பதையே. மக்களிடம் உயர்ந்தரகமான ரசனைத் தன்மை உண்டு என்பதை எந்தக் கலைஞனும் மறுக்க முடியாது. ஆனால் மக்களின் ரசனைக்கேற்ப கலைப்படைப்புக்களமுன்வைக்க வேண்டியது ஒவ்வொரு கலைஞனின் கடமையுமாகும். *மக்களிடம் ரசனைத் தன்மை மந்தமாயுள்ளது. எனவே தரம் குறைந்த கலை எனத் தெரிந்து கொண்டும் தவிர்க்க முடியாமல் கொண்டு செல்லவேண்டியுள்ளது* என்ற மக்களின் ரசனை மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. மக்களிடமிருக்கும் ரசனைத் தன்மைகளை அறிந்து கொள்ள கலைஞர்கள்தான் தேடல்களை நடாத்த வேண்டும். அதற்கேற்ப கலைப்படைக்களை தரமான, சமூகப் பயன்பாடுள்ளவையாகப் படைக்கப்படல் வேண்டும். ஒரு காலத்தில் ஈழத்தின் மூலை முடுக்கெல்லாம் ஒலித்த துள்ளிசைப் பாடல்களை இன்று இசைக்கும் போதும் அதனை ரசிக்கத்தான் செய்கின்றனர். அப்படியானால்

அந்தப் பாடல்கள் ஓர் குறிப்பிட்ட தாக்கத்தை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது என்பதுதானே அர்த்தம். அதே பாணியிலான, புதிய இசை வடிவங்களைக் கொண்டு எமது இசைக்கலைஞர்களால் ஏன் புதிதாய் படைக்க முடியாமல் இருக்கின்றது....? நோர்வேயைப் பொறுத்தவரை சில இசைமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்டளவு வெற்றியும் கண்டுள்ளது எனலாம். அந்த வகையில் அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிடலாமென நினைக்கின்றேன். முரளிதரனின் இசையில் தவராஜா பாடிய *நீலக்கடல் நீர்மீது நாள்தோறும்* என்ற பாடல், ரவிக்குமாரின் இசையில் சுபாஸ் சந்திரன் பாடிய இளவாலை விஜியேந்தரனின் *தீ போலவே காலைக் கீழ் வானிலே* என்ற பாடல், குட்டி மாஸ்ரரின்(கே. சுந்தரமூர்த்தி) இசையில் கார்மேகம் நந்தா எழுதிய *ஒற்றுமை வேண்டும்* என்ற பாடல், திரு எழுதி இசையமைத்த * எனது பாடல், எனது தேடல் அம்மா....* போன்ற பல பாடல்கள் எமது இசைக்கலைஞர்களின் புதிய முயற்சியின் வெற்றிகரமான பெறுபேறுகளெனலாம். இவை போன்ற பாடல்களை ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவு செய்து வெளியிடுவதோடு நின்றுவிடாது மேடை நிகழ்ச்சிகளிலும் மக்கள் முன் அறிமுகப்படுத்த வேண்டுமென்பது றூட்ஸ் இசைக்குழுவினரிடமும், ஏனைய இசைக்கலைஞர்களிடமும் நான் நட்போடு வேண்டிக் கொள்கின்றேன். அடுத்து, இசை நிகழச்சியின் இறுதிப்பாடலாக ஒரு சிங்களத் துள்ளிசைப்பாடலும் இசைக்கப்பட்டது. மக்கள் மிகவும் விரும்பி ரசித்ததை கண்ணூடாகக் காணக் கூடியதாயிருந்தது. தொடர்ந்து றூட்ஸ் இசைக்குழுவினர் நடாத்தும் மேடைநிகழ்ச்சிகளில் எமது சகோதர மொழியான சிங்களமொழிப் பாடல்களையும் பாடுவது வரவேற்கத் தக்கது.

மொத்தத்தில் ஸ்தவங்கரைப் பொறுத்தவரை ஏற்கனவே *ஸதவங்கர் ஸ்மித்ஸ்* இசைக்குழுவினரின் இசைநிகழ்ச்சி, ரவிக்குமாரின் அறிமுகப் பாடகர்களின் இசைநிகழ்ச்சி போன்றவை நடைபெற்ற போதும் இது பெரியளவில் நடைபெற்ற இசைநிகழ்ச்சியாகும். அந்த வகையில் ஈழத்தமிழர் சங்கமும், சிரமங்களைப் பாராது, இந்த யந்திரத்தனமான ஐரோப்பிய வாழ்க்கை நகர்வுக்குள் தமது பல மணி நேர ஊதியங்களையும் தியாகம் செய்து, ஒரு வழிப்பாதைக்கு மட்டுமான செலவைப் பெற்று, மக்களை மகிழ்விக்க வேண்டுமென்ற ஒரே காரணத்துக்காக ஸ்தவங்கர் வருகை தந்த *றூட்ஸ் இசைக்குழு*வினரும் ஸ்தவங்கர்வாழ் அனைத்து தமிழ்., சிங்கள மக்களின் சார்பாகவும் நன்றிக்கும், பாராட்டுதலுக்குமுரியவர்களே.

அடுத்து, *குணாவின் பதிவுகள்* என்ற தலைப்பில் ஓவியக்கண்காட்சியொன்று இடைவேளை நேரத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டது. சுமார் ஐம்பது ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அத்தனையும் கறுப்பு வெள்ளை ஓவியங்கள். கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களில் ஓர் உயிரோட்டம் தென்படுவதுபோல இந்தக் கறுப்பு வெள்ளை ஓவியங்களிலும் ஓர் தனித்துவமொன்று வெளிப்பட்டது.

படங்களனைத்தும் எமது தேசத்தின் எழில்மிகு வனப்பையும், அன்றாட தொழிலாளர்களின்

*செயற்பாடுகளையும், போர் மண்ணின் அவலங்களையும் வெளிப்படுத்தின. குறைந்தளவு எண்ணிக்கையான பல அற்புதமான பதிவுகளைத் தரிசிக்கக்கூடியதாயிருந்தது. ஒவ்வொரு ஓவியத்தின் கீழும் தான் மக்களுக்குச் சொல்ல வந்த விடயத்தை இரத்தினச் சுருக்கமாக கவிதை வடிவில் கொடுத்திருந்தார் இளம் ஓவியர் குணசீலன். எமது தேசத்து கவிஞர்களாகிய இளவாலை விஜயேந்திரன், தம்பா, மைதிலி, அந்தனி தியோப்பிலஸ், பொன். கோணேஸ் ஆகியோர் கவிதை வரிகளாய் ஓவியத்தின் கீழ் பிரசன்னமாயிருந்தனர். அத்தோடு *குணாவின் பதிவுகள்* என்ற ஒரு சிறு ஓவியக் கைநூலும் கண்காட்சியின்போது வெளியிடப்பட்டிருந்தது. இக் கைநூலில் ஓவியர் தொடர்பான விபரங்களைக் குறிப்பிட்டிருக்கலாம் ஏனோ குறிப்பிடவில்லை. தொடர்ந்து பல உன்னதமான ஓவியப்பதிவுகளை இளம் ஓவியராகுணசீலனிடமிருந்து நாம் எதிர்பார்க்கலாம். உலகப் புகழ் பெற்ற ஓவியர் எட்வர்ட்முங்கின் தேசத்தில் வசிக்கும் குணசீலன் ஓவியம் தொடர்பாய் இந்த நாட்டில் நிறையவே கற்றுக் கொள்ளலாம். முயற்சிப்பாரா...? முயற்சியெடுப்பின் எமக்கு இவரிடமிருந்து இன்னும் தரமான கிடைக்க வாய்ப்புண்டு.*

## சர்ச்சையைக் கிளப்பிய ஓவியம்

**கண்காட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் புலிகளின் பிரமுகரொருவர் சென்று ஓவியர் குணாவின் கைகளிலிருந்த குறிப்பு நூல்களைப் பலாத்காரமாகப் பிடுங்கியிருக்கிறார். புத்தகம் விற்கக்கூடாது. கண்காட்சி நடத்தக் கூடாது என்றும் கட்டளையிட்டிருக்கிறார். அமைப்பாளர்களிடம் சென்று பேசும்படி ஓவியர் கூறியிருக்கிறார். கோபமடைந்த புலிப்பிரமுகர் கண்காட்சி மண்டபத்துக்குள் உரத்த சத்தமாய் பேசியிருக்கிறார்.**

**புலியளுக்கெதிரா ஈ. பி. புத்தகம் விக்குது. இதை என்னால பார்த்துக்கொண்டிருக்க ஏலாது. எல்லாம் இப்ப உடனநிப்பாட்டவேணும். நாங்க இங்க சும்மா இல்ல. புலியளப்பற்றி எவனாவது வாய் திறந்தால் ஒவ்வொருத்தனா மேடயிலவச்சுக் குத்துவன்* நிலமை புரிந்த அமைப்பாளர் ஓடி வந்து *சனங்கள் கூடியிருக்கிற பொது இடத்தில் தயவு செய்து சத்தம் போட்டுக் குழப்பாதேங்கோ. ஏதாவது பிரச்சனையண்டால் எல்லாம் முடியக்கதைப்பம்* என்றார். கோபமடைந்த பிரமுகர் மீண்டும் சத்தமாய்க் கத்தினார். * வெட்டுவேன், குத்துவேன்* என்ற பதங்களை சரளமாக அள்ளி வீசினார். விழா நிகழ்ச்சிகள் குழம்பக் கூடாதென்ற நோக்கத்தில் சங்க அமைப்பாளர் அவரை சத்தம் போடுவதானால் வெளியில் நின்று போடும்படி தெரிவித்தார். பிரமுகரின் கோபம் உக்கிரமடைந்தது. *சங்கம் ஈ. பி. புத்தகம் விக்கிறத பாத்துக்கொண்டு போறதுக்கு நாங்க இங்க ஒண்டும் சும்மா இல்ல* இருவர் பிரமுகரைச் சமாதானப்படுத்தி கைத்தாங்கலாக வெளியே கொண்டு சென்றனர் மிகுந்த பிரயத்தனப்பட்டு. இந்தச் சம்பவம் நடந்த சமயத்தில் ஸ்தவங்கர் புலிகளின் வேறு சில*

www.tamilarangam.net

உறுப்பினர்களும் நின்று கவனித்தனர். அவர் பேசியது இவர்களுக்கும் உடன்பாடாயிருந்தது என்பதை அவதானிக்க முடிந்தது. இன்னொரு பிரமுகர் கோபமாய் சங்க உறுப்பினரைக் கேட்டார் "நாங்களும் புத்தகங்கள் கொண்டு வந்தால் விக்கவிடுவியளோ?" என்று.

ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. இந்த விழாவைக் குழப்பவேண்டுமென ஏற்கெனவே சிலரால் தீர்மானிக்கப்பட்டதற்கு காரணமொன்று தேவைப்பட்டுள்ளது. அந்தக் காரணத்துக்குப் பலியானதே குணாவின் ஓவியம் தொடர்பான பிதற்றல். அந்தப் பிரமுகர் புலிக்கெதிரானது எனக் கருதிய ஓவியம் பல விளம்பரங்களாலும், அறிவித்தல்களாலும் நிரப்பப்பட்டுள்ள வழிகாட்டிக் கல் ஒன்று. அந்தக் கல்லிலுள்ள அறிவித்தல்களில் பல இயக்கத்தின் அஞ்சலிகள். இந்தியாவே வெளியேறு என்ற சுலோகம், சாவக்கச்சேரிப் பொலிஸ் நிலையம் தகர்க்கப்பட்டது என்ற அறிவித்தல், தமிழீழ விடுதலைப் போராளிகளின் விளைவு நிலம் என்ற சுலோகம், பல இயக்கங்களின் பெயர்கள் புலிகள் உட்பட. இவற்றோடு ஓவியரின் பெயரும், இன்னும் சில வாசகங்கள் அரூபமாய்.


இந்த ஓவியத்தினூடாக இதன் படைப்பாளி சொல்ல வந்த விடயம்: தான் தரிசிக்கும் தனது தேசத்தின் ஒரு துண்டுச்சுவர்கூட எமது போர் நிலத்தின் நடவடிக்கைகளையும், சேதிகளையும் சொல்கின்றன என்பதைத்தான்.

இந்த ஓவியத்தை பிரமுகர் புலிக்கெதிரானது எனக் கருதியிருக்கிறார். ஈ. பி. யின் விளம்பரமெனக் கூறினார். பிரமுகர் கூறுவதுபோல் இதில் புலிக்கெதிரானதாகவோ அல்லது ஈ. பி யின் விளம்பரமாகவோ என்னால் எதையும் காணமுடியவில்லை. நான் மட்டுமல்ல, அங்கு கண்காட்சியைப் பார்வையிட்டவர்கள் எவருக்குமே இது புலப்படாதது தான். இதே கண்காட்சி ஒஸ்லோவிலும், பேர்கனிலும் காட்சிக்கு வைக்கப்பட்டவையாகும். அந்த இடங்களில் இக்கண்காட்சியைப் பார்வையிட்ட பல புலியுறுப்பினர்களும், ஆதரவாளர்களும் பார்த்துப் பாராட்டினார்களென்றும். இந்தக் கண்காட்சி நோர்வே

**வரலாறு மறைக்கப்படுகின்றது**

ஹிட்லரினதும் முசோலினியதும் மனித வேட்டைகள் மறக்கப்பட்டு அவர்களை வீரக் கதாநாயகர்களாகக் காட்ட ஐரோப்பாவில் சிலர் முயல்வதை நாமறிவோம். அதேபோல் ஹிரோஸிமாவில் அமெரிக்க அரசு நடாத்திய பயங்கரவாதத்தையும் அமெரிக்க மக்கள் வேகமாக மறந்து வருகின்றார்கள் குறிப்பாக இன்றைய தலைமுறையினர் ஹிரோஸிமாவிலும் நாகசாக்கியிலும் நடைபெற்ற அகோரத்தை முழுமையாக விளங்காதவர்களாக உள்ளனர். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பில் வளர்ந்த பிரிவினர் சுமார் 35% உலகில் முதலாவதாகப் போடப்பட்ட அணுகுண்டு ஜப்பானில் ஹிரோஸிமா மீதுதான் போடப்பட்டது என்பதை அறியாதவர்களாயுள்ளனர். இவர்களில் 60% க்கு மேலானோர் இப்பயங்கரவாத செயலுக்கு உத்தரவிட்டவர் அமெரிக்க ஜனாதிபதி ஹரிட்ருமன் தான் என்பதை மறந்து விட்டனர். சுமார் 19 – 29 வயதிற்குட்பட்டோரில் 80% ஹிரோஸிமா மனிதபலிக்கு ஹரிட்ருமன் தான் காரணமென்பதை அதாவது குண்டு போட உத்தரவிட்டவர் என்பதை அறியாதுள்ளனர்.

www.tamilarangam.net



மட்டத்தில் மட்டுமல்ல, தமிழர் புலம்பெயர்ந்து வாழும் எல்லா நாடுகளிலும் நடாத்தப்பட வேண்டுமென்று கூறிய புலியுறுப்பினர்களுக்குத் தென்படாத புலியெதிர்ப்பு ஓவியம் இந்த ஸ்தவங்கர் புலிப்பிரமுகருக்கு மட்டும் எப்படித் தென்பட்டது. பிரதேசத்துக்குப் பிரதேசம் புலிகளின் கலைப்பார்வையும், கோட்பாடுகளும் வேறுபட்டவையா என்ற சந்தேகம் எழச் செய்கிறது.

*இவங்கள் இப்பிடி அனாகரீகமா நடப்பாங்களெண்டு நான் நினைக்கயில்லயடாப்பா* இது தவறாது புலிகளுக்கு நிதியுதவி வழங்கிவரும் ஒரு ஆதரவாளர் வருத்தப்பட்டுக் கூறியது.

*புலிகள் தங்களுக்கு விளம்பரம் தேவயண்டால் வேற எத்தினயோ வழியள் இருக்குது பாவிக்கிறதுதானே?* என விழாவுக்கு வந்திருந்த ஒரு வயதானவர் தனது கருத்தை மெதுவாகக் கூறினார்.

*சனங்கள் கூடியிரூக்கிற ஒரு பொது இடத்தில இப்பிடிக் காட்டுமிராண்டித்தனமா நடக்கக் கூடாது* எனக் கூறியபடி ஒரு நபர் எழுந்து வெளியேறினார். கண்காட்சியை நிறுத்துவதனூடாக விழாவைக் குழப்பலாமெனக் கனவுடன் வந்தவர்களுக்கு பெரும் தோல்வியே ஏற்பட்டது.

இந்தப் படிப்பினையின் பின்பாவது புலிகள் தங்கள் உறுப்பினர்களுக்கு ஒரு பொது இடத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென அறிவுறுத்தல் செய்வார்களா...? ●

● விமல்ராஜ் -

www.tamilarangam.net

## அந்த முகங்களும் நானும்

லாக்கால இரவு
ரு கவிதைதானும் எழுதமுடியாத
ந்தக் கோர இரவில்
ந்த முகத்தைப் பார்த்தேன்

ரணம் கண்களுக்குள்
ளிகளைத் தள்ளிக் கொண்டிருந்தது

னியில்
னிக்கதிரில்
குளிரில் மூழ்கி
உப்பி கிழிந்து
பாதியாய் அழுகிப்போன முகம்

கண்டவுடன்
தன்னையும் என்னையும்
ஒவ்வொரு மவரையும்
மூச்சால் சுட்டது

இப்படியே
நீண்ட நாட்கள்
ஏதோவொரு நினைவை
மௌனமாய்க் கொறித்தபடி
மெதுவாய்
ஒரு புழுவாய் கடந்து போனது

பின்னாளில்
நான் காணும்
ஒவ்வொரு முகங்களும்
அந்தக் கொடுமைக்குள் புதை கொண்டு
இந்த இரவு வீதிகளில்....

குளிர்காலக் காற்று
என்னைக் கிழவனாக்கியது

என்னால்
ஒரு இரவைத்தானும்
முழுமையாய்த் தின்னமுடியவில்லை.

4. ஆனந்தி

## ஒரு புதிய இனம்

சனங்கள்,
அழுது கொண்டே போனார்கள்

ஒருவருக்கொருவர்,
தலையில் அடித்துக் கொண்டும்,
தலை மயிரைப் பிய்த்துக் கொண்டும்
அழுத விதம்
பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது.

இதுவும் வேண்டுமா?
இப்படியும் வேண்டுமா?
என்று சொல்லிச் சொல்லிப் புலம்பினார்கள்.

தெருவோரத்து,
மாடுகளும், ஆடுகளும்
அவர்களுக்காக கண்ணீர் வடித்துக் கொண்டு
தனது
இரை மீட்டலை ஒரு நிமிடம்,
இடை நிறுத்திக் கொண்டது.

சூரியன் உதிக்கவில்லை
பூக்கள் மலரவில்லை

பயம்
கறுத்த ஆடை அணிந்து
தன் மீசையை முறுக்கி
வீதி உலா வருவது போல்
என்
கண்களுக்குள் தோன்றியது

சனங்கள்
அழுது கொண்டே போனார்கள்.

பட்டணத்து மனிதர்கள்
உற்றுப் பார்த்தார்கள்
உண்மையில்,
அவர்கள் சனங்களில்லை
நவீன ரகக் குண்டுகள் பிறப்பித்த
புது இன உயிரினங்கள்

முகமட் அபார்

www.tamilarangam.net

# வன்மையாகக் கண்டிக்கிறோம்

அண்மையில் நடைபெற்ற முஸ்லீம் கொங்கிரஸ் கட்சியின் ஆண்டு விழாவில் உரையாற்றிய கட்சியின் தலைவர் அஷ்ரப் வடக்குக் கிழக்கு இணைப்புத் தொடர்பாகத் தெரிவித்திருந்த கருத்துக்கள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. வடக்குக் கிழக்கு இணைப்பில் தமிழ் மக்களிற்கு இடையூறாக இருக்க விருப்பவில்லை என்றும் அதேசமயம் சிங்கள மக்களிற்குத் துரோகம் செய்ய விரும்பவில்லை எனவும் அஷ்ரப் தெரிவித்துள்ள கருத்துத் தமிழ்மொழி பேசும் அனைவருக்கும் மிகுந்த அவநம்பிக்கையை ஏற்படுத்துவதாகவுள்ளது. சிறீலங்காவின் ஜனாதிபதியால் தொடக்கி வைக்கப்பட்ட இவ்விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பல தமிழ் சிங்கள எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் முன்னிலையிலேயே அஷ்ரப் இக்கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களிற்கு உரிமைகள் வழங்குவது சிங்கள மக்களின் நலன்களைப் பாதிக்கும் என்ற அஷ்ரப்பின் கருத்து, தேசிய இனங்களின் சுயநிர்ணயத்திற்கு எதிரானது என்பதே உண்மை. மாறாகத் தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிப்பது சிங்களப் பேரினவாதிகளின் நலன்களையே பாதிக்குமெனக் கூறுவது தான் யதார்த்தபூர்வமான உண்மை. இவ்வாறான கருத்துக்கள் மூலம் அஷ்ரப் தமிழ் மக்களின் தேசிய விடுதலை போராட்டத்தை கொச்சைப்படுத்தாமல் இருப்பதே நலம்.

தமிழ்ப் பேரினவாதத்திற்கு எதிராக முற்போக்கு எழுத்தாளர்கள், கவிஞர்கள், சிந்தனையாளர்கள் செயல்ப்படுவது போல் முஸ்லீம் பேரினவாதத்திற்கும் காட்டிக்கொடுப்பிற்கும் எதிராக முற்போக்குச் சிந்தனையாளர்களின் கருத்துக்கள் பலவீனமாகவே ஒலிக்கின்றது. முஸ்லீம் தமிழ் மக்களிற்கிடையிலான பரஸ்பர சுயநிர்ணய அங்கீகாரிப்பின் ஊடாகப் பொது எதிரியான சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்த முடியும். இதுவே இரு இனங்களின் நீண்ட கால *மக்கள்* நலன்களிற்கு அவசியமாகும்.

அஷ்ரப்பின் கருத்தும் இனப்பிரச்சனை தொடர்பாக சிங்கள பௌத்த பேரினவாதிகளின் கருத்துக்கும் வேறுபாடு இருப்பதாக நாம் கருதவில்லை. சிங்கள மக்களின் நலன்கள் பாதிக்கப்படாத முறையிலேயே தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்டுமெனக் கூறிவரும் ஜனாதிபதி சந்திரிக்காவிலிருந்து சிங்கள பௌத்த

www.tamilarangam.net

பேரினவாதிகள் வரை அனைவருமே அஷ்ரப்பின் கருத்துக்களால் புளகாங்கிதம் அடைந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமே இவ்லை. தமிழ்மொழி பேசும் அனைத்துத் தேசிய இனங்களினதும் தாயகக் கோட்பாடு சிங்கள மக்களிற்குத் துரோகம் இழைப்பதாக அமையும் எனக் கூறுவது தமிழ் முஸ்லீம் மக்களின் சுயாதிபத்தியத்தையும் இலங்கையர்கள் என்ற தேசிய அங்கீகாரத்தையும் மறுப்பதற்கு நிகரானது.

இலங்கை வாழ் முஸ்லீம் மக்கள் சுயநிர்ணய உரிமையைக் கொண்ட ஒரு தனித்தேசிய இனம் என்பதும், இலங்கையின் வடக்குக்குக் கிழக்கு முஸ்லீம் மக்களிற்கும் உரிய தாயகம் என்பதும் முஸ்லீம் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அனைத்துவகையான படுகொலைகளும் வன்முறைகளும் கண்டிக்கத்தக்கது என்பதுடன் குடாநாட்டிலும் மன்னாரிலும் இருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள் எதுவித நிபந்தனைகளுமின்றி மீளவும் அவர்களது தாயகத்திலேயே குடியமர்த்தப்படல் வேண்டும் என்பதும் சுவடுகளின் கருத்தாகும். தமிழ்மொழி பேசும் மக்களின் இன்றைய இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண எடுக்கப்படும் சகல முயற்சிகளிலும் முஸ்லீம் மக்களின் சுயாதிபத்தியமும் சுயநிர்ணய உரிமையும் கவனத்திற் கொள்ளப்பட்டு அம்மக்களிற்குரிய முழுமையான அதிகாரப் பரவலாக்கல் வழங்கப்படல் வேண்டும் என்பதும் எமது நிலைப்பாடாகும்.

இதுவரை காலமும் கொழும்பை மையப்படுத்திய இனவாத, தேசியகட்சிகளிலுள்ள செல்வந்த முஸ்லீம் தலைவர்களிடமே முஸ்லீம் மக்களின் அரசியல்த் தலைமை இருந்து வந்தது. ஆனால் இன்று சாதாரண முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கிலங்கைக்கு முஸ்லீம் காங்கிரசிடம் முஸ்லீம் மக்களின் அரசியல் தலைமை கைமாறியுள்ளது. இந்நிலையை மு.கா சரியாகப் பயன்படுத்தத் தவறின் வெகுவிரைவில் மு.கா முஸ்லீம் மக்களின் மீதான தனது ஆளுமையை இழக்க வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். அஷ்ரப் சிங்களத் தமிழ்த் தலைவர்களைத் திருப்திப்படுத்துவதைத் தவிர்த்து முஸ்லீம் மக்களின் தேசிய விடுதலைக்கான முயற்சியில் ஈடுபடுவதும் அதற்கான ஒரு சரியான அரசியல்த் தீர்வுத் திட்டத்தை முன்வைத்து அதனை முனைப்புடன் முன்னெடுப்பதுமே முஸ்லீம் மக்களிற்கு இன்று அவசிய அவசர தேவையாகும்.

துருவ பாலகர்கள்
சுவடுகள் 64,
மாசி 1995

Suvadugal
A Tamil monthly from Norway, Issue 64, February 1995

36.

www.tamilarangam.net

வி. உதயன்

# சமூக மாற்றங்கள் மத்தியில் குடும்ப உறவுகள்

முன்னிதழ் தொடர்ச்சி

இதனால்
இச் சமூகத்தில் பெண்ணின் பாத்திரம்
குழந்தைகளின் பராமரிப்பை முதன்மைப்
படுத்தித் தனியே பெண்களின் சமூகப்
பாத்திரம் வீட்டுப் பணியுடன்
முடிவடைகின்றது. ஆண் பெண் இருவாது
கூட்டான கடமைகள் மூலமே தங்கள்
குழந்தைகளின் எதிர்கால வளர்ச்சி
தங்கியுள்ளது என்பதை உணர்ந்து ஆண்
மாத்திரமன்றிப் பெண்களது சமூகப்
பாத்திரம் மேலும் வளர்ச்சி அடைவதற்குப்
பெண்கள் தங்களைச் சமூக, பொருளாதார,
அரசியல் ரீதியாக வலுப்படுத்துவதன் மூலம்
ஓர் சமத்துவமான சமுதாய இலக்கினை
அடைய முடியும்.

நவீன சமூகத்தின் அரசியல்,
பொருளாதார மாற்றமானது அதன்
உற்பத்தி, பயன்பாடு, தேவை .கருதி
மேலும் பலப்படுத்திக் கொள்ள
இச்சமூகத்தைச் சுற்றி இருக்கின்ற
அனைத்து ஸ்தாபனங்களின் தேவையை
மேலும் வலியுறுத்துகிறது. இந்த
அடிப்படையில் பொருளாதார
மாற்றத்திற்கும் அதன் இயக்கத்திற்கும்
குடும்பம் முக்கியமாகிறது. இந்தக்
குடும்பங்களின் அங்கத்தவர்களது தேவை
பொருளாதார உற்பத்தியுடன் மேலும்
இணைக்கப் படுவதால் அதன்
அங்கத்தவர்கள் அனைவரினதும் தொழிற்
தேர்ச்சி, தொழில் வாய்ப்பு அதிகரித்து
சமூகத்தை மேலும் விரிவுபடுத்துகிறது.
இதனால் ஆண், பெண் என்ற வர்க்க



வேறுபாடுகளைக் களைவதற்கு இந்
அடிப்படை சமூக - பொருளாதா
மாற்றமே காரணமாகும். இதனால் இங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆண் ஆதிக்கத்திற்கு இடம் இல்லாமல் போகின்றது. சமத்துவம் அற்ற அல்லது வர்க்கங்களைக் கொண்டு இயங்குகிற சமூகம் தன்னை மாற்றத்திற்கு உட்படுத்துகிறவரை இச்சமூகத்தின் முக்கிய ஸ்தாபனங்களான குடும்பம், கல்வி, பொருளாதாரம் வளர்ச்சி அடைவதற்கு அல்லது மாற்றமடைவதற்கு இடம் இல்லை. ஒரு சமூகத்தின் வளர்ச்சியானது இந்த மூன்று முக்கிய ஸ்தாபனங்களிலேயே தங்கியுள்ளது. இந்த வகையிலே கல்வி முக்கியம் பெறுவதைக் காணலாம். இதனால் கல்வியானது குடும்பத்தையும் சமூகத்தையும் இணைக்கும் முக்கிய பாலமாகக் காணப் படுகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் பெற்றோர்கள் தங்கள் சரியான வழிகாட்டல் மூலம் தங்கள் பிள்ளைகளின் கல்வி தொழில் ஆகியவற்றிற்கான வாய்ப்புகளை உருவாக்கி அவர்களது எதிர்கால வளர்ச்சிக்கு உதவுவதன் மூலம் சமூகத்தில் அவர்களது பாத்திரம் வளர்ச்சி அடைகிறது.

வர்க்க ரீதியான வேறுபாடுகளைக் கொண்ட சமூகத்தின் மத்தியில் உள்ள குடும்பங்களின் பெற்றோர், குழந்தைகள் உறவுமுறை, வளர்ச்சி என்பன அவர்களது பொருளாதார வருமானங்களைக் கொண்டு தீர்மானிக்கப் படுகிறது. இதன் காரணமாக, இவர்களது பிள்ளைகளின் எதிர்கால வேலை வாய்ப்புகளும் இதனைக் கொண்டே தீர்மானிக்கப் படுகிறது. மேல் வர்க்கக் (Upper class) குடும்பங்கள் தங்களுடைய கல்வி, தராதரம், சமூக அந்தஸ்து ஆகியவற்றை அடிப்படையாக வைத்துத் தங்கள் பிள்ளைகளின் சமூக அந்தஸ்து உயர்வதற்கு உதவுகின்றனர். வர்க்க ரீதியான வேறுபாடுகள் நவீன சமூகத்தில் காணப்பட்டாலும் இச்சமூகத்தின் சமூக, கலாச்சார, பொருளாதார மாற்றங்கள் ஒவ்வொரு தனிமனிதர்களது சமூக அந்தஸ்து உயர்வதைக் காணலாம். சம்பிரதாய சமூகங்களின் எல்லா சமூக அலகுகளும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டு, அரசியல், மதம், பொருளாதாரம் இவை எல்லா ஸ்தாபனங்களுமே ஒன்றை ஒன்று கட்டுப்படுத்துவனவாக உள்ளன. இச்சமூகங்களின் முக்கிய ஸ்தாபனமான மதம் ஏனைய முக்கிய அரசியல், பொருளாதார ஸ்தாபனங்களைக் கட்டுப் படுவத்துவதை நாம் காணலாம். இதனால் இங்கு பொருளாதார மாற்றத்திற்கோ அல்லது சமூக மாற்றத்திற்கோ இடமில்லை. இதனால் குடும்ப வளர்ச்சி மேலும் பாதிப்படைகிறது. குடும்பம் என்பது சமூகத்தின் முக்கிய ஸ்தாபனமாகும். குடும்பம் பொருளாதாரத்துடன் இணைக்கப் படுவதால் இதன் ஒவ்வொரு தனிப்பட்ட அங்கத்தவரது பங்களிப்பு முக்கியமாகிறது. இதனால் ஒவ்வொரு தனிமனிதனும் தனது தேவைகள், எதிர்பார்ப்புகள், இலக்குகள் அனைத்தையும் அடைய தன்னையும் தன்னைச் சார்ந்த சமூகத்தின் குடும்ப அமைப்பு முறையை தகர்க்க வேண்டிய அல்லது மாற்றத்திற்குக் கொண்டுவர வேண்டிய கட்டாயத் தேவை ஏற்படுகிறது. இதனாலேயே சமூகமாற்றம் என்பது மானிட வளர்ச்சிக்கு இன்றியமையாதடன், சமத்துவமான ஓர் வளர்ச்சியுற்ற சமுதாய உலகை நாம் உருவாக்க முடியும்●



www.tamilarangam.net

# கிட்டார் பாடகன்

தமயந்தி

அவனுக்குச் சொந்தமானதெல்லாம் கம்பிகள் தொய்ந்து போன ஒரு பழைய கிட்டார், மரக் குவளை ஒன்று, அவனது உடலோடு உரசிக் கொண்டிருக்கும் மரக்கட்டைத் துண்டுகளைப் பொத்தானாய்ப் பொருத்திக் கொண்ட மண்ணிற ஒட்டுக்கள் போட்ட இத்துப் போன நீளக் குளிருடை, அதே வயதை ஒத்த ராணுவக் காற்சட்டை, மறை, வெய்யில், பனியின் தாக்குதல்களிலிருந்து அவனது தலையை விறைத்த வீரனைப் போல் எப்போதும் பாதுகாத்துக் கொண்டுஅவனது தலை மேல் குந்தியிருக்கும் வெள்ளைக் கரடியின் தோலினாலான தொப்பி.

நகரத்தின் தோளிலிருந்து பிரியும் குறும்பாதை புனித யோவான் சாலையைச் சென்றடையும். யோவான் சாலையின் தொப்பிளிலிருந்து தொழிலாளர் தெரு பிரிகிறது. தொழிலாளர் தெருவின் தொடக்கத்தில் இருந்து அதன் இரு கரைகளையும் நிறைத்து நெரிசலாய் அடுக்கப்பட்ட தொழிற்சாலைகள். தொழிலார் தெருவின் நெச்சுக்கு அண்மையில் ‘பேத்தர்’ இரும்பு ஆலை. அந்த இரும்பு ஆலையின் பிடரியிற் தொடங்கி முதுகு வழியாகக் குதிக்கால் வரை சென்று, தொழிலாளர் குடியிருப்புக்குள் மெலிந்து செல்லும் சிறு தெரு ‘கருங்கற் தெரு’ அந்தக் கருங்கற் தெருவின் முகத்தினருகே முதிர்ந்த சிவப்பு அப்பிள் மரம்.



www.tamilarangam.net

அவன் பாடுகிறான். தொய்ந்து போன கிட்டார் கம்பிகளை அவனது விரல்கள் வருடும் போது தொய்வேதுமற்ற இனிமையான இசை விதைக்கப் படுகிறது. இசையின் இடையிடையே அவன் பாடுவான் சில வரிகளை. தான் நினைப்பவை எல்லாவற்றையும் ஏதோவோர் இராகமமைத்துப் பாடுவான்.

"நேசமுள்ளோரே வாருங்கள். இந்த வீதிகள் தம் முன்னோர்கள் நமக்காய் விரித்தவை. சேர்ந்து நடப்போம் வாருங்கள்." அவன் மீட்டும் கிட்டார் இசையும், அவனது பாடலும் அந்தத் தெருவின் இடுக்குகளெல்லாம் நிரவிக் கிடந்தன.

"இந்த மரம் தமது மரம், பசித்திருப்போரே வாருங்கள், பழங்களைச் சமமாய்ப் புசிப்போம்." முதிர்ந்த அந்த அப்பிள் மரத்தின் இலைகள், கிளைகள், பூக்கள், பிஞ்சுகள், பக்கவேர், ஆணி வேர் யாவற்றிலும் படிந்து கிடந்தது அவனது பாடல்.

"இந்த ஆலை மதில்களில் நான் நுகர்கிறேன். என் தந்தையின், தாயின், சுற்றத்து உறவுகளின் வியர்வையின் வாசத்தை, உழைப்பின் உறுதியை." அந்தத் தெருவின் ஆலைச் சுவர்களெல்லாம் அவனது பாடலை ரசித்தபடி எழுந்து நின்றன.

"நண்பனே! நண்பனே!! உன் தசையை நீயேன் புண்ணெனச் செய்கிறாய்? உன் குருதியை நீயேன் விரயமாய் சிந்துகிறாய்? யந்திரங்கள் புத்தியற்றவை. அதனால் தான் அது உயிர்களின் பெறுமதியை அறிய மறுக்கிறது. நான் போரைப் பற்றிப் பாடுகிறேன்." அவனது பாடல் உயரத்திற் பறந்து முகில்களை உருட்டி விளையாடின.

அவன் எப்போதும் மகிழ்ச்சியாகவே காணப்பட்டான். சிரிப்பின்றி அவனைப் பார்க்க முடிவதில்லை. எப்போதும் புன்னகைத்தான். பாடும போதும், ரொட்டித் துண்டுகளைக் கடிக்கும் போதும். தனது மரக்குவளையில் அந்தத் தெருவாசிகள் யாராவது கொடுத்த தேநீரைப் பருகும் போதும்..... சிரித்தான். சிரித்துக் கொண்டே காணப்பட்டான் கணமெலாம்.

பூமியின் நெஞ்சை மிதித்து ஊர்ந்து செல்லும் எல்லா மனிதர்களும் குறைந்த பட்சம் ஏதாவது ஒரு கவலையையேனும் சுமக்க முடியாமற் சுமந்தபடி நடக்கையில் இவனால் மட்டும் எப்போதும் மகிழ்ச்சியாக, சிரித்தபடி இருக்க எப்படி முடிகிறது?

அந்தத் தெருவாசிகளின் முடிவுப் பிரகாரம் அவனொரு பைத்தியக் காரக் கிழவன். ஆசைகள் மேல் ஆசைகளை அடுக்காய் அடுக்கி, சுமக்க முடியாமல் வீங்கி முட்டித் திரியும் மனிதர்களுள் ஒருவன் மகிழ்ச்சியாக, எப்பொழுதும் சிரித்தபடி, பாராபட்சமற்று எல்லா மனிதர்களுக்கும் மரியாதை தெரிவிக்கும் ஒரு மனித நேயமுள்ளவனாகக் காணப்பட்டால் அவன் பைத்தியம். அப்படியானால் இப்போது இந்தப் பூமிக்குத் தேவை நிறையவே பைத்தியங்களல்லவா?

எனக்கொரு அப்பு இருந்தார். அப்பு என்றால்..? என் அம்மாவைப் பெற்றவன். இந்தப் பாட்டுக்காரக் கிழவனைப் போன்று தான் கிட்டத்தட்ட என் அப்புவின் தோற்றமும். காக்கி அரைக்காற்சட்டை, கோட்டுமாய்த்தான் எப்போதும் காணப்படுவார். அறுபத்தெட்டாம் ஆண்டு கொழும்பு கப்பற் துறைமுகத்தில் பார்த்து வந்த 'புக்கிங் கிளார்க்' வேலையை விட்டு விட்டு ஓடி வந்தவர். எப்போதும் பெருமையடிப்பார் தன் உத்தியோகம் பற்றி. வெள்ளைக் காரனின் கப்பல் நங்கூரம் கடலடியில் பாறையில் சிக்குப் பட்டதால் வெள்ளையன் செய்வதறியாது தவித்த போது, துணிந்து தானே கடலில் பாய்ந்து நங்கூரத்தைப் பாறையில் இருந்து மீட்டதாகவும், திகைப்படைந்த வெள்ளையன் தன்னைக் கட்டியணைத்து ஆனந்தக் கூத்தாடினானென்றும்,

www.tamilarangam.net

விலையுயர்ந்த சீமைச் சாராயமும் பணமும் தந்த போது சாராயத்தை மட்டும் எடுத்துக் கொண்டு பணத்தை வாங்க முறுத்ததாகவும்..... இப்படி நிறையத் தனது சாகசங்களையும், சாதனைகளையும் எனக்கு வெட்டியடிப்பார். "எல்லாம் புழுகடா மகனே" என்று ஆச்சி எனக்கு மெதுவாகச் சொல்வாள். "உந்தப் போக்கத்தவள் நான் சொல்றதில எதைத்தான் நம்பினவள்? நான் பொய்யெண்டால் நீயே பார்.." என்று தனது பரம்பரை முதிசமான கொப்பர்ப் பெட்டியிலிருந்து ஒரு வழைய கறுப்பு வெள்ளைப் புகைப்படமொன்றை எடுத்துக் காண்பிப்பார். அந்தப் படத்தில் அப்பு ஒரு வெள்ளையனுடன் கை கோர்த்தபடி கம்பீரமாய் நிற்பார்.

அப்புவும் பாடுவார். "சற்குணபோதன் சரணமிதே...மறைவாய்ப் புதைத்த ஓடு மறைந்த மாயம் என்ன மா முனிவரே அறியேன். யாருமறியாமல் மறைவாய்....." அப்பு தியாகராஜபாகவதரின் ரசிகனாய் இருந்திருக்க வேண்டும். அப்பு பாடுவதெல்லாம் பாகவதரின் பாடல்கள் தான்.

குடிக்காமல் பாடமாட்டார். அவர் பாடுவதென்றால் குடிக்க வேண்டும். இரண்டு போத்தல் கள்ளுத்தான் குடிப்பார். கள்ளுக் கொட்டிலுக்குப் போக மாட்டார். ஆச்சி அல்லது நான் சவேரிமுத்துக் கிழவனின் கொட்டிலில் வாங்கி கர வேண்டும். கள்ளுக் குடிப்பதென்றால் சும்மா ஆகாது. நண்டுச் சம்பல் வேண்டும். கடற்கரைக்குத் தானே சென்று சினை நண்டுகளாய் வாங்கி வருவார். துவரஞ் சுள்ளிகளை வீட்டுக் கோடிப்புறத்தில் அடுக்கி நண்டுகளைச் சுடுவார். நண்டுச்சதைஒய ஆய்ந்தெடுத்து ஒரு கிண்ணத்திலிட்டு வெங்காயம், பிஞ்சு மிளாகாயுடன் உப்பு, தேசிக்காய் ஆகியவற்றைக் கலந்து குழைத்து ஒரு அருமையான சம்பல் செய்வார். கள்ளும் நண்டுச் சம்பலும் வயிற்றுக்குள் சமா வைக்கத் தொடங்கியதும் பூமியில் மானிட ஜென்மமடைந்ததைப் பற்றி முதலில் தொடங்குவார்.

எப்போதும் அப்பு விறாந்தையில் சாக்குக் கட்டிலில் தாற் படுப்பார். பக்கத்தில் சிரட்டையில் அரைவாச் மண்ணிட்டு வைக்க வேண்டும் அவர் துப்புவதற்கு. "தன்ர எச்சில தானே விழுங்கத் தெரியாத சடம்" என்று ஆச்சி அடிக்கடி நச்சரிப்பார். வாழ் நாளெல்லாம் ஆச்சியைக் கஷ்ரப் படுத்திய அந்த நண்டுச் சம்பல் பாடகனும் போய்ச் சேர்ந்தான் ஒரு நாள். காலம் முழுக்கப் புறுபுறுத்தபடி சேவைகள் செய்த ஆச்சி கணவன் கண்களை மூடியபோது தான் தன் உள்ளத்துள் அடங்கிக் கிடந்த நேசங்களையெல்லாம் சொல்லிச் சொல்லி அழுதாள்.

## ஸ்தவங்கர் அரும் பொருட் காட்சியகம் (MUSEUM) 1877

நோர்வேயில் பிரபல்யமான, யழமையான காட்சியகங்களில் இதுவும் ஒன்று. 1877 நிர்மாணிக்கப்பட்ட இக்காட்சியகம் ஆரம்பத்தில் "இயற்கை வரலாறுகளின்" காட்சியகமாக இருந்த போதும் 1975ல் இது புனரமைக்கப்பட்டு கலை கலாச்சார வரலாற்றுக்களையும் தொல்பொருள் வரலாற்றுக்களையும் கொண்டதாக மாற்றியமைக்கப்பட்டது. (தற்போது தொல்பொருள் வரலாறு தனித்த ஒரு ஆய்வு காட்சியகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.) 1979 முதல் ஸ்தவங்கர் கடல் பயண வரலாற்றுக் காட்சியகம் ஸ்தவங்கர் காட்சியகத்துடன் இணைக்கப்பட்டு நிர்மானிக்கப்பட்டு வருகின்றது.

www.tamilarangam.net

அப்புவின் பாடல்களை அப்போது என்னால் ரசிக்க முடியாமல் போய் விட்டது. ஆனால் அவற்றை இப்போது நினைத்து ரசிக்க முடிகிறது. இந்த கிட்டார் கிழவனின் பாடல்களை நான் தினமும் ரசிக்கிறேன் இப்போது. பல சமயங்களில் எனை மறந்தும் ரசித்திருக்கிறேன். கருங்கற் தெருவை அண்மித்த ஒரு குறும் சந்திற் தாற் எனது குடியிருப்பு. எனது எல்லாமுமான ஒரு சிறிய நிலவறை. அதிகாலையில் நான் வேலைக்குச் செல்லும் போதும் மாலையில் வேலை முடித்து அறை திரும்பும் போதும் அவனது பாடலை நுகரத் தவறுவதில்லை. என்னைக் கண்டதும் தனது பாடலை நிறுத்தி வணக்கம் சொல்வான். பதிலுக்கு நானும் சொல்வேன். மீண்டும் பாடத் தொடங்குவான்.

சில வேளைகளில் நான் தாமதமாய் வேலைக்குப் போகும் போது "இரவு துாங்கத் தாமதமா நண்பா?" என்று கேட்பான். பதில் கூறிவிட்டு நடப்பேன். மேலதிக வேலை சில செய்துவிட்டு அறை திரும்பும் சமயம் "குறைந்த கூலியில் உன்னை உறுஞ்சி விட்டார்கள் போலும்.... களைத்திருக்கிறாய் சென்று நன்றாய் ஓய்வெடு நண்பா" மிகவும் கரிசனையோடு சொல்வான்.

நத்தார் தினத்துக்கு இரு தினங்களுக்கு முன் அவனைக் கடந்து செல்லும் போது தன்னருகில் வரும்படி அழைத்தான். சென்றேன்.

"நத்தார் தினத்தைக் கொண்டாட நீ வேறு எங்காவது செல்கிறாயா நண்பா?" கேட்டான்.

"இல்லை எனது அறையிற் தான்" சொன்னேன்.

"தன்யாகவா?" மீண்டுமவனது வினா.

"ஆமாம்" பதில் சொன்னேன்.

"எனது விண்ணப்பமொன்று உன்னிடம்....." சிரித்தபடியே தயங்கினான்.

"சொல்" என்றேன்.

"இந்த நத்தார் நான் உன்னோடு கொண்டாட விருப்பமாயிருக்கிறேன். உனது அறையில். உனக்குச் சம்மதமா?" புருவங்களை உயர்த்தி, புன்னகைத்தபடியே கேட்டான்.

"சம்மதம் நண்பா. சந்தோஷமாகக் கொண்டாடுவோம். நீ என்னோடு கொண்டாடப் பிரியமாயிருப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்." எனது விருப்பையும் தெரிவித்துக் கொண்டேன் அவனிடம். ஏதோவொரு ராகத்தை உச்சஸ்தாயியில் இழுத்த படி தன் விரல்களைக் கிட்டார் நரம்புகளில் மேய விட்டான். அவன் வாசிக்கும் இராகம் என்னவென்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவன் தனது ஆனந்தத்தை வெளிப்படுத்தப் பிரசவிக்கும் ஓர் ஆனந்தமான இராகம் என்பதை மட்டும் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

மார்கழி-24 மாலை. பூமியை இருள் தின்ன முயற்சித்துக் கொண்டிருந்தது. 'இருட்டிற்குப் பலி கொடேன்' என சங்கற்பம் பூண்டது போல் பூமியிற் பரந்து கிடந்த பனிப் போர்வை சிறிதளவு நிலா வெளிச்சத்தை மிகைப்படுத்திக் கொண்டிருந்தது.

எனது அறையின் அழைப்பு மணி ஒலித்தது. கிட்டாருடன் நின்றான் கிழவன். வரவேற்றேன் உள்ளே. புன்னகையுடன் நத்தார் வாழ்த்தைத் தெரிவித்தபடி உள்ளே வந்தான். "நண்பனே! அவனால் முடிந்தது இது தான். இதனை ஏற்றுக் கொள்வாயா? பொட்டலமொன்றை நீட்டினாற். பெற்றுப் பிரித்தேன். அப்பிள் பழங்களும் ஒரு ஓவியமும் இருந்தது. நன்றியைத் தெரிவித்தேன் அவனுக்கு. ஓவியத்தில் ஒரு தெருப்பாடகனும், வழிப்போக்கனொருவனும். வழிப்போக்கன் தெருப் பாடகன்ன் இசையில் மயங்கி நிற்பது போல் ஓவியம் சித்திரிக்கப்பட்டிருந்தது. உயரத்தில் நீல வானில் வெண் முகிற் திரளை நீவியபடி

www.tamilarangam.net

## ஸ்தவங்கர் மாலைப் பத்திரிகை.
(STAVANGER AFTEN BLAD)

ஸ்தவங்கரில் இருந்து வெளிவரும் பிரபல்யமான பத்திரிகைகளில் ஒன்று. எதுவித அரசியல் கட்சி சார்பற்ற தினசரி பத்திரிகையான இதன் நாளாந்த பதிப்பு சுமார் 82000ற்கு அதிகம். பிரபல்யமான பத்திரிகையாளர்களான பெர் தொம்ஸனை (Per Thomsen) தலைமை ஆசிரியராகக் கொண்டிருந்த பெருமை இப்பத்திரிகைக்கு உண்டு. 1893ல் லான்ஸ் ஒப்தடால் (Lans Oftedal) என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை தற்போது நூாறு வருடங்களையும் தாண்டி வெற்றிகரமாக இயங்கி வருகின்றது.

பறவைக் கூட்டம் சிறகுகளை விரித்துக் காட்சி தந்தது.

"நீ வரைந்தாயா?" கேட்டேனவனை

"ஆமாம் அழகாயிருக்கிறதா?" சிரித்தபடியே கேட்டானென்னை.

"மிக அழகாயிருக்கிறது. நீ ஓவியமும் வரைவாயா?" எனது கேள்வி அவனைச் சேரமுன்னம்.....

"ஏதாவது கிறுக்குவேன். அதனை ஓவியமென நீ ஏற்றுக் கொண்டால் மிகவும் மகிழ்வேன். நான் நினைத்ததை வரைய முனைந்தேன். ஆனால் நினைத்தது முழுவதுமாய் வரவில்லை. இந்த ஓவியத்தை நீ விளங்கிக் கொண்டால் அது எனது கிறுக்கலின் வெற்றி. விளங்கிக் கொள்ளவில்லையெனில்..... வருந்துகிறேன் நண்பா" அவன் கருதுவதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

"உனது இசையை நான் சுவைத்துக் கொண்டு நிற்கிறேன்....." நான் கூறி முடிப்பதற்குள் தனது கரங்களிரண்டையும் மேலே உயர்த்தி உரத்த சத்தமாய் ஆனந்தக் கூச்சலிட்டான்.

"நண்பா! மிகவும் நன்றி உனக்கு. மிக்க சந்தோஷம் எனக்கு. ஆமாம். நான் மனித நேயத்தைப் பற்றி எனக்குத் தெரிந்தபடி பாடுகிறேன். நீ அதனை விருப்போடு நுகர்கிறாய். நமக்குள் நட்பு வலுவடைகிறது. அந்த நட்பின் உன்னதங்கள் தடைகள் போல் திரண்டு வரும் முகிற்திரளைசிறகுகளால் உடைத்தெறிந்தபடி உயரத்தில் பறவைக் கூட்டமாய்ப் பறக்கிறது. அவை சுதந்திரமான பறவைகள். ஆமாம் நண்பனே. நமது நட்பின் உன்னதங்கள் சுதந்திரமானவை" அவனது முகத்தில் ஆனந்தம் அதீதமாய்ப் பரவியிருந்தது. நான் எனது தேசத்தை விட்டுத் தப்பியோடி வருவதற்கு முன் அலைந்து திரிந்து எடுத்த புகைப்படங்களில் சில எனனோடு அகதியாக இங்கு வந்தன. அவற்றிலொன்றை நத்தார் பரிசாக அவனுக்குக் கொடுத்தேன். அவனது ஆனந்தத்திற்கு அளவேயில்லை. அவனது விழிகள் கசிந்தன. என்னை இறுகத் தழுவிக் கன்னங்களிரண்டிலும் முத்தமிட்டுத் தனது சினேகத்தைத் தெரிவித்தான். நான் கொடுத்த புகைப்படத்தை நீண்ட நேரமாக வைத்து ரசித்தான். "அற்புதம்" என்றான் பல தடவைகள். குரு நககர்த் துறைமுகத்தில் நின்று மேற்குப் பக்கமாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எடுத்த படமது. பொழுது மறைந்த சற்று நேரம். இயற்கை ஓவியம் வரைந்தது போல் சிவப்பு மஞ்சளுடன் பல வர்ணங்கள் கலந்த மேற்கு வானம். அந்த வானத்தின் கீழ் அமைதியாகக் கிடக்கும் கடற்பரப்பில் சிறு தோணியொன்றை மரக் கோலால் ஊன்றிச் செல்கிறார்கள். பல நாட்கள் நங்கூரம் தூக்கப்படாத யந்திரப் படகுகள் துறைமுகத்தையண்டிக் கிடக்கின்றன ஏதோவோர் அமைதியைக் காத்த படி. அமைதியைத் தொலைத்து விட்டுத் தேடுவது போல் தூரத்தில் மங்கலாய் ஒரு பறவை. இவை எல்லாவற்றிற்கும் அப்பால் யாழ்ப்பாணத்தோடு தீவுப்பகுதியை இணைக்கும் பண்ணை வீதி. வானத்தின் வண்ணங்களையும், பறவையையும், மீனவர் படகுகளையும், களங்கட்டி வலைகளையும், பண்ணை வீதியையும் தானுமொரு பிரதியெடுத்து இரண்டு காட்சிகளாய்க் காட்டுகிறது கடல் நீர். ஒரே படத்தை இரு பிரதிகளெடுத்து மேலும் கீழும் ஒட்டியது போல் தன்னகத்தே பிம்பம் விழுத்திக் கிடக்கிறது கடல்.

"நண்பா! இத்தனை எழில் நிறைந்த தேசமா உனது தேசம்? வருந்துகிறேன் நான். உனது இழப்பு ஈடு செய்ய முடியாதது. நீ மீளவும் பெற வேண்டும் இழந்தவை அனைத்தையும். அதனை நான் மிகவும் விரும்புகிறேன். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. உனது தேசம் மீண்டுமுனக்குக் கிடைக்குமென்று நான் பூரணமாய் நம்புகிறேன். தளராதே. நம்பிக்கையோடிரு." நம்பிக்கையூட்டும் தோரணையில் அவன் எனக்குச் சொன்னான். என்னால் எடுக்கப்பட்ட ஏனைய புகைப்படங்களையும் அவனுக்குக் காண்பித்தேன். ஒவ்வொன்றையும் அணுவணுவாய் ரசித்தான். அனுபவித்து ரசித்தான். சில படுகொலைப் படங்களை அவன் பார்க்க நேர்ந்த போது அவனது விழிகள் சிவந்தன. கோபத்தால் முகம் இறுக்கமானது. இப்போதுதான் நானவனைச் சிரிப்பின்றிப் பார்க்கிறேன். "இது கொடுமை. கொடுமையிலும் கொடுமை. இந்தக் கொடுமை புரிந்தோரை மன்னிக்க முடியாது. இதனைச் செய்தோர் மனித விரோதிகள்." எனக் கோபாவேசமாகக் கத்தினான். அவனது கிட்டார் அழுதது. கோபித்தது எனக்குத் தெரிய முதற் தடவையாக . புகைப்படங்கள் எல்லாவற்றையும் பார்த்து முடிந்ததும் "நண்பா! உனது புகைப்படங்கள் ஒரு சிலவற்றைத் தவிர ஏனைய படங்கள் அதிகமாய் இயற்கையை மட்டுமே உள்ளடக்கியுள்ளது. ஏன் மனிதர்களின் அவலங்களை, உழைப்பை, இன்பதுன்பங்களை உன்னால் பதிவு செய்ய முடியாமற் போனது. மனிதாகள் மீது உனக்கு அப்படி என்னதான் கோபம்? உனது நிழற் படக் கண்ணை மனிதர்கள் பக்கமும் திருப்பு" என்றான். அந்த இரவு நத்தார் தினத்தை நானுமவனுமாய் எனது அறையில் கொண்டாடினோம். நிறைய விடயங்களைப் பற்றிப் பேசினோம். அவனைப் பற்றி நிறையவே நஏற் அந்த நத்தார் இரவில் தெரிந்து கொண்டேன். என்னோடு நத்தாரிரவைக் களித்ததில் அவனுக்கு பன் மடங்கு மகிழ்ச்சி. புது வருடத்தைக் களிக்க தான் பிறந்த ஊரான பர்கன் என்ற பகுதிக்குப் பயணிக்கவிருப்பதாகத் தெரிவித்து விட்டு என்னிடம் இருந்து விடை பெற்றான். அவன் செல்லும் போது மறுதினம் கவலையாயிருந்தது. அவன் என்னோடு கழித்தது சுமார் பன்னிரண்டுமணி நேரங்களாகும்.

சுமார் ஒரு வார காலமாய் நானவனைக் காணவில்லை. அவன் பர்கன் நகரத்திற்குப் போய் விட்டான். மீண்டுமவனைப் புதுவருஷம் முடிந்த மூன்றாம் நாளில் கண்டேன். வழமை போல் அவன் அந்த அப்பிள் மரத்தடியில் பாடிக்கொண்டு நின்றான். என்னைக் கண்டதும் "நீ குன்ஷாமணி" என்றான். அவன் கூறியதை

www.tamilarangam.net

நான் புரிந்து கொள்ளப் பல வினாடிகளெடுத்தது. தாற் பிரயாணிகள் படசில் பர்கன் சென்ற போது ஒரு இலங்கைத் தமிழ் நண்பனும் பயணம் வந்ததாகவும், அக்கரை சென்று சேரும் வரை அவன் தன்னோடு நட்போடு பழகியதாகவும், பல தமிழ் வார்த்தைகள் தனக்குச் சொல்லித் தந்ததாகவும், அவற்றில் சிலதுதான் தனக்கும் பாடமாயுள்ளதாகவும் கிழவன் சொன்னான். "நீ குன்ஷாமணி" என்றான் மீண்டும் சிரித்தபடி. "நீ சொல்வதன் அர்த்தம் தெரியுமா உனக்கு?" கேட்டேனவனை. "ஆமாம் தெரியும். நீ நீடுழி வாழ்க! என்பது தானே இதன் அர்த்தம். அந்த நண்பன் நல்லவன். விபரமாய் எல்லாம் சொல்லித் தந்தான்" அவனது அதே கலப்படமற்ற சிரிப்போடு சொன்னான். அவன் சொன்ன அந்த வார்த்தைகளின் அர்த்தத்தை விளங்க வைத்தேன். அவன் மீண்டும் சிரித்தான். "ஏன் சிரிக்கிறாய்? அந்த நண்பன் மீது உனக்குக் கோபமேற்படவில்லையா?" கேட்டேன் நான். "இல்லை நண்பா. சந்தோஷப் படுகிறேன். பயணக் களைப்புத் தெரியாமல் அந்த நண்பனுக்கு நானொரு இலவசப் பொழுது போக்குச் சாதனமாகப் பயன்பட்டிருக்கிறேன். அந்த வகையிலாவது நான் பயன் பட்டேனென்பது எனனைப் பைத்தியம் என்று சொல்லும் நபர்களுக்கு ஒரு சாட்டையடியாயிருக்கட்டும்" மிகவும் சாதாரணமாகச் சொன்னான். அவன் வேறென்னென்ன சொன்னான் என்பதைக் கேட்டு அவற்றிற்கான விளக்கங்களைச் சொன்னேன் அவனிடம். அனைத்தும் கேவலமான கெட்ட வார்த்தைகள். வாழ்த்துக்கள், வணக்கங்கள் என்று கிழவனுக்கு இவற்றை அந்தப் புண்ணியவான் சொல்லிக் கொடுத்திருக்கிறான். அவன் சொல்லிக் கொடுத்த வார்த்தைகளைக் கிழவனுக்கு விளங்க வைக்க மிகவும் கூச்சமாயிருந்தது.

## ஸ்தவங்கர் விமான நிலையம்

**SOLA 1937**

சூலா (sola-சூரியன்) என வழங்கப்படும் ஸ்தவங்கர் விமான நிலையம் 1937ல் திறக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரின் போது ஜேர்மனிய நாஸிகளிற்குப் பெரிதும் உதவிய இவ் விமான நிலையம் நகரின் தென் மேற்கில் 11கி.மீ. தள்ளி உள்ளது. 1993ல் இங்கு வந்து சென்ற பிரயாணிகளின் எண்ணிக்கை 22லட்சத்துக்கும் அதிகமாகும்.

இந்தக் கெட்ட வார்த்தைகளைக் கிழவனுக்குச் சொல்லிக் கொடுத்ததில் அந்த முகம் தெரியா மனிதன் என்ன சுகத்தை அடைந்திருக்க முடியுமென என்னை நானே கேட்டுக் கொண்டதில் எந்த விடையுமே கிடைக்கவில்லை.

இப்போதெல்லாம் நான் கிட்டார் கிழவனைக் கடந்து செல்லும் போதும், அவன் வணக்கம் சொல்லும் போதும் எனக்குள் ஒருவித உறுத்தல் நெரிப்பதுண்டு. அம்மணப் பதங்களைச் சொல்லிக் கொடுத்த ஒரு நண்பனின் பெயரால் நான் கூனிக் குறுக நேர்ந்து விட்டதே என்பதை எண்ணும் போது மிகவும் சங்கடமாகி விடும்.

"இன்பம் சுவைக்க நினைக்க நினைக்கும் நண்பரே! நீங்கள் இன்பம் சுகிக்க நான் பயன்படுவேனாகில் என்னைப் பாவியுங்கள். ஆனால் மனித நாகரீகம் சாகும்படியல்ல....." கிட்டார் கிழவன் ஒரு புதிய பாடலைப் பாடுகிறான் அடிக்கடி. தூஷண வார்த்தைகள் சொல்லிக் கொடுத்த அந்த நண்பனின் பெயராலேயே கிழவன் இந்தப் பாடலைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாடுகிறான் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

இன்று வெள்ளிக்கிழமை வாரத்தின் கடைசி நாள். இன்று முடிந்தால் இரு தினங்கள் ஓய்வு நாள். அந்த ஓய்வு நாட்களிரண்டிலும் கிட்டார் கிழவனை எனது அறைக்கு அழைத்து நிறையப் பேச வேண்டுமென்று எண்ணிக் கொண்டு காலை வேலைக்குப் புறப்பட்டேன். அப்பிள் மரத்தடியில் வாகனங்களும், சன நடமாட்டமுமாயிருந்தது. என்ன நடந்து விட்டது கிழவனுக்கு என அறிய என்னைத் துரிதப் படுத்தினேன். உடலெல்லாம் நடுக்கமெடுத்தது என்னையறியாமல். அம்புலன்ஸ் வாகனமொனறும், பொலீஸ் வாகனமொன்றும் அப்பிள் மரத்தடியில் நின்றிருந்ததை என்னால் துலங்கிக் கொள்ள முடிந்தது. மரத்தை அண்டி நடந்தேன்.....

"நோர்வே நோர்வேஜியர்களுக்கே ! கறுப்பர்களே வெளியேறுங்கள் எங்கள் தேசத்தை விட்டு"

"கறுப்பு நரகங்களே! எங்கள் தேசத்தை அசுத்தப் படுத்தாமல் வெளியே போங்கள்"

போன்ற வாசகங்கள் பேத்தர் இரும்பு ஆலையின் சுவரில் கறுப்பு மையால் எழுதப்பட்டு இருந்தது. அந்த வாசகங்களின் கீழே நாஸி சின்னமும் பொறிக்கப்பட்டு, புதிய நாஸிஸ்டுக்கள் என்றும் புத்தம் புதிதாய் எழுதப்பட்டு இருந்தன.

அங்கு நின்றிருந்த வாகனங்கள் அவசர அவசரமாய் சென்று மறைந்தன. எனது கிட்டார் பாடகனும் அங்கில்லை. என்ன நடந்திருக்கும் எனபதைத் தெளிவாய் என்னால் ஊகிக்க முடியாமல் இருநதது. அமைதியாக வேலையில் ஈடுபட என்னால் முடியவில்லை. தலைவலி எனக் கூறிவிட்டு அறைக்குத் திரும்பி விட்டேன். அன்று இரவு முழுவதும் தூக்கம் வரவேயில்லை. பேத்திர் இரும்பாலைச் சுவரின் வாசகங்களும், கிட்டார் கிழவனும் எனது தூக்கத்தோடு சமர் புரிந்த வண்ணம்.

நகரத்தின் பிரதான வைத்தியசாலை. முகத்தில் சில சிறு ஒட்டுக்களும், வலது காலில் பெரிய கட்டுமாய் எனது கிட்டார் கிழவன் கட்டிலில் படுத்திருந்தான். என்னைக் கண்டதும் எழ முயற்சித்தான். அவனால் முடியவில்லை.

"வா நண்பா! வந்தென் அருகில் அமர்ந்து கொள்" அவனது கலப்படமற்ற அதே புன்னகை. அவனருகிற் கிடந்த நாற்காலியிற் சென்றமர்ந்து கொண்டேன்.

"அவர்கள் உண்மையிலேயே பாவம், தாங்கள் செய்வதன் தாற்பரியம் புரியாமற் செய்து வருகிறார்கள். அவர்களின் தவறைப் புரியவைக்க நான் அந்த இரவில் எவ்வளவோ முயற்சி செய்தேன். அவர்கள் புரிந்து கொள்ளும் நிலையில் இருக்கவில்லை. மனித நேயத்தை மறந்து நீங்கள் ஈடுபடும் காரியம் தவறானது. சற்றுச் சிந்தியுங்கள் என்றேன். அவர்கள் எதையும் தங்கள் செவிகளில் வாங்கவில்லை. தேசியத் துரோகி என என்னைக் கூறினார்கள். அடித்தார்கள். அப்படியிருந்தும் நான் சொல்ல வேண்டிய நியாயங்களை எடுத்துரைத்தேன். ஒரு நண்பன் தான் வைத்திருந்த இரும்புத் தடியால் எனது காலை உடைத்தான்" வலியின் வேதனை அவனை இடை நிறுத்தச் செய்தது.

தொடர்ந்தான். "நீ எதற்கும் கவலைப்படாதே. நான் விரைவில் குணமாகி விடுவேன். அந்தச் சுவரில் அவர்கள் எழுதியதை நானே வந்து அழித்து விடுகிறேன். அவர்கள் மீது வஞ்சம் வளர்க்காதே. அவர்களுக்காக நான் உன்னிடம் மன்னிப்புக் கோருகிறேன். தங்கள் தவறை விரைவில் அவர்கள் உணர்வார்கள். நாஸிகளால் தங்கள் தந்தையர் தேசம் அனுபவித்த இன்னல்களை சிந்திக்க மறந்து விட்டார்கள். அவர்கள் அவற்றை உணரும்

www.tamilarangam.net


காலம் அண்மையில் என்பதை நான் அறிவேன். அந்த உலகமும் அறியப் போகிறது"

நத்தார் பரிசாய் அவன் எனக்குத் தந்த ஓவியமும், அவனது எல்லாமுமான கிட்டாரும் இப்போது என்னிடம், எனது நிலவறையில். "நான் குணமாகி வரும் வரை இதனைப் பாதுகாத்துத் தருவாயா நண்பா?" என அவன் என்னிடம் அடைக்கலம் தந்த அவனது கிட்டாரின் கம்பிகளை நான் மெல்லத் தொட்டேன். பேச ஆரம்பித்தது. கிழவனின் கிட்டார் இப்போது கிழவனைப் பற்றி என்னோடு நிறையவே பேச ஆரம்பித்தது. எனது நிலவறையில் அந்தக் கிட்டாரின் பேச்சுக் குரல் நிறைந்து வியாபித்திருந்தது.

# உலகின் மிகப் பெரிய மிதக்கும் எண்ணெய் மேடை.

## "HEIDRUN HOOK UP"

ஸ்தவங்கரில் நிர்மானிக்கப்பட்டு வரும் 'Heidrum hook up' என்ற மிதக்கும் எண்ணெய் அகழ்வு மேடையே (oil platform) உலகில் மிகப் பெரிய மேடையாகும். மிகத் தேர்ச்சி பெற்ற மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இரவு பகலாக இதனை நிர்மானிப்பதில் ஈடுபட்டு வருகிறார்கள். முன்னூற்றைம்பது மீட்டர் ஆழத்தில் நிறுவப்பட்டு வரும் இம்மேடை எதிர்வரும் ஆவணி-புரட்டாதி மாதங்களில் தனது உற்பத்தியை ஆரம்பிக்க உள்ளது. ஆரம்பத்தில் தினம் ஒன்றிற்கு இரண்டு மில்லியன் பீப்பாய்(பரல்கள்) எண்ணெயையும் வருடாந்தம் அறுநூற்றி நாற்பது மில்லியன் கன மீற்றர் வாயுவையும் உற்பத்தி செய்யவுள்ளது. இன்றைய விலைப் பட்டியலின் படி இவ்வுற்பத்தி மூலம் கிடைக்கும் வருமானம் தினமொன்றிற்கு மூன்று கோடி குரோணர்கள் அல்லது நிமிடமொன்றிற்கு இருபத்தி ஓராயிரம் குரோணர்களை விட அதிகமாகும். தொடர்ந்து வரும் காலங்களில் உற்பத்தியும் வருமானமும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுவதாகவும் நிபுணர்கள்



தெரிவித்துள்ளனர். மொத்தம் 62,740 தொன் எடையுள்ள இந்தப் பாரிய "எண்ணெய் மேடை" செல்வங்களை வாரிக் குவிக்கவுள்ள அதே சமயம் சுற்றுப் புறச்சூழல் இயற்கையின் மீது இந்நிறுவனம் மேற்கொள்ளும் தாக்குதல்களை எப்படி சமாளிப்பது என்ற கேள்வியும் எழுகின்றது.

திவ்யா




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(முன்தொடர்)



திருச்செல்வம் திலீபன்



பக்கத்து வீட்டுப் பிள்ளை, எனது நண்பரின் பிள்ளை சிறுவர் பூங்காவுக்குப் (Barnehage) போய் நல்லாக மொழி கதைக்கிறது, எனது பிள்ளைக்கு 'சிறுவர் பூங்கா' இடம் கிடைக்கவில்லை என்று கவலைப் படுவோர் பலருண்டு. நாலு வயதுக்குப் பின் ஏன் சிறுவர் பூங்காவுக்குப் போகாத பிள்ளைகள் நோர்வே மொழியில் திறமை உடையோராயும், மற்றப் பாடங்களில் திறமை உடையோராயும் உள்ளனர். எமது கையில் பிள்ளை வளர்வதா, இன்னொருவரின் கையில் பிள்ளை வளர்வதா முக்கியம்? சிறுவர் பூங்காவில் பலரது கட்டுப்பாட்டுக்குள் ஒருவித திணிப்பின் கீழ் பிள்ளைகள் வளர்வது யாரும் மறுக்க முடியாதது.

எமது பிள்ளைகள் எவ்வளவு நேரம் எம்முடன் இருக்கின்றன? அந்த வேளையிலும் எவ்வளவு நேரம் அவர்களுடன் அன்பாக இருக்கிறோம் என்ற கேள்விகளைக் கேட்டுப் பாருங்கள். அப்போது தெரியும் எமது தவறுகள். இத்தவறுகளின் விளைவுகள் பலாபலன்களுக்கு நாளை பதில் சொல்ல வேண்டியவர்கள் பெற்றோர்களே.

இரு பெற்றோரும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் உள்ள சாதாரணப் பிரச்சனைகள் பல. பிள்ளைகளை அரையும் குறையுமான நித்திரையில் இருந்து எழுப்பிக் கொண்டு சிறுவர் பூங்காவுக்கோ பாடசாலைக்கோ ஓடவிடுவார்கள். வேலைக்குப் போய் பின்னேரம் நான்கு ஐந்து மணிக்கு வருவார்கள். இதன் பின்பே சமையல் சாப்பாடு. இவை முடியச் சிறிது நேரம் தொலைக்காட்சி. கிழமை நாட்களான ஐந்து நாட்களில் எத்தனை மணித்தியாலம் தமது பிள்ளைகளது மழலைகளைக் கேட்கிறார்கள்? இதிலும் சிலர் இரண்டு வேலைகள், சில மழலைகள் தந்தையரைக் காணாமலேயே வளர்கின்றன. சனி ஞாயிறு தினங்களில் கலைக்கல்விக்குப் பிள்ளைகளைக் கலைக்கிறார்கள். விழாக்கள், களியாட்டங்கள், வீடியோக்கள், திரைப்படங்கள் என்று சனி ஞாயிறு தினங்களையும் பிள்ளைகளுடன் கழிக்காமல் பலர் உள்ளனர்.

சிலர் தமது பெயருக்கும் புகழுக்குமாகப் பிள்ளைகளைக் கலை, விளையாட்டுத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துறைகளில் வளர்க்கிறார்கள். இது பிள்ளைகளை இயந்திரமாக்குவதுடன் ஒரு திணிப்புமாகும்.

பெற்றோர் நேரத்துடன் அஞ்சலோட்டம் ஓடுகிறார்கள். அதற்காகப் பிள்ளைகளுக்கு அழுத்தம் கொடுக்கப் படுகிறது. அதிக வேலை செய்தாலும் கையில் பெரிதாக ஒன்றும் மிஞ்சப் போவதில்லை. இந்த நாட்டு முறைப்படி வரியால் தட்டி வெட்டி எடுத்துவிடுவார்கள். உடல் வலியும் நோயுமே உங்களுக்கு மீதமாகும். நிதியையும், குடும்பத்தையும் இணைந்து திட்டமிடுவது அவசியம்.

உங்கள் பாலகருக்குரிய அழுத்தங்களாக - சிறுவர் பூங்காவில்/ பாடசாலையில் விளையாட்டு/ படிப்பு, நிறவாத பேதங்கள், மனரீதியான அழுத்தங்கள், வீட்டில் அம்மா அப்பா நாளாந்த நடவடிக்கைகளுக்குத் திண்டாடுவது, படிக்குமாறு திணித்தல் எனப் பல. பணம்தான் மீதியுண்டா எனில் அதுவுமில்லை. பெற்றோர்களும் மனிதர்களாக - விருப்பங்களைப் பூர்த்தி செய்து, உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து - வாழவில்லை. பிள்ளைகளையாவது வாழவிடலாமே. இந்த இயந்திர வாழ்வுக்கு இசையப் பண்ணி, அவர்களை இயந்திரமாக்கி விட்டது பெற்றேரே. நாளை பிள்ளைகளைப் பிழை சொல்ல முடியாது. பிள்ளைகளை இங்கு வாழ்வதற்காக இயந்திரமாக்குகிறீர்கள். ஆனால் எமது தாயகத்தின் விடிவைப் பற்றியும், விடிவு ஏற்பட்டால் அங்கு சென்று வாழ்வோம் என்றும் கூறுகிறீர்கள். பல பெற்றோரது சொல்லும் செயலும் முரணாகவே உள்ளது. இன்று ஒரு தீர்வு வந்து தாயகம் திரும்ப இலவச வழி செய்தாலும் எத்தனை குடும்பங்கள் திரும்பும் என்பது கேள்விக்குறியே.

நிலவுக்குப் பயந்து பரதேசம் போனவர்கள் போல இங்குள்ள கலாசாரத்துக்குப் பயந்து பிள்ளைகளை (முக்கியமாகப் பெண்பிள்ளைகளை), இலங்கை இந்தியாவில் விட்டுவிட்டு இங்கு பணமரங்களைப் பற்றிக் கொண்டிருப்பவர்களையும், அதில் தோல்வி கண்டவர்களையும் காணக் கூடியதாக உள்ளது.

எமது கலாசாரத்துக்கும் இங்குள்ள கலாசாரத்துக்கும் என்ன வித்தியாசம்? இவர்களும் எம்மைப் போல கலாசாரத்தைக் கொண்டிருந்தவர்கள். காலப் போக்கில் பொருளாதாரத் தேவைகட்கேற்ப இவர்கள் மாறியுள்ளனர். ஒருசில வருடங்களே வாழ்ந்த நாமும் அவர்களைக் குறைகூறிக் கொண்டு பணமே முக்கியமாக எண்ணி வாழ்கிறோம். இதுவும் காலத்தின் நியதிதான்.

பெண் பிள்ளைகளைப் பெற்றவர்கள் பயப்படும் பாலியல் பேயே கலாசாரப் பாகுபாட்டின் பெரும் பகுதியாகும். பாலியல் என்பது பருவத்தில் வரவேண்டிய ஒன்று. அது அந்தப் பருவத்தில் வந்தே தீரும். அந்தப் பருவத்தை நாமும் தாண்டியவர்களே. இது பற்றிப் பிள்ளைகளுக்கு விளங்கப் படுத்துங்கள். அவர்களது உள்ளக் கிடக்கைகளை அறியுங்கள். எமது கலாசாரத்தில் எழுத்திலுள்ள விடயங்களை எத்தனை பேர் படித்திருக்கிறோம்? 'ஒரு தாய், மகள் பூப்படைந்தபின் தோழியாகிறாள்' என்பது எம்மில் எத்தறை பேருக்குத் தெரியும்? தாய் தந்தையர் என்ற கட்டுப்பாடு இருப்பினும் சினேகபூர்வமாகப் பழக முயலலாம். அதிலும் சில பெற்றோர் தாம் செய்வது தவறு என உணர்வதால் பிள்ளைகளுக்கு எல்லாம் இடமளித்து விடுகிறார்கள். இதுவும் ஆபத்தானதே.

சிறுவர் பூங்காவிலேயே காதலன் காதலி கதைகள் ஆரம்பிக்கிறது. பாலியல் வயதை அடையும்போது எமது பிள்ளைகளின் நோர்வேஜியத் தோழி காதலனுடன் கதைப்பதும், தொலைக்காட்சியில் பாலியற்

www.tamilarangam.net

காட்சிகள், பொது இடங்களில் அரைகுறை ஆடைகள் என்பன பாதிப்புகளை ஏற்படுத்தும். இங்கு நாம் என்ன செய்யலாம் என்பது கேள்வி. நாட்டைவிட்டு ஓடுவதால் இந்தப் பிரச்சனை தீராது.

என்றோ ஒருநாள் நாம் திருமணம் செய்து பிள்ளைகளைப் பெற்றது போல், பிள்ளைகளும் திருமணம் செய்வர். நாம் முப்பது வயதில் தெரிந்ததை எமது பிள்ளைகள் பதினைந்து வயதில் தெரிந்து கொள்ளலாம். அவர்கள் வாழும் சூழல், வாழ்க்கை முறை அப்படி.

பிள்ளைகளுக்குரிய கட்டுப்பாடுகளுடன் அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து வளர்ப்போம். கௌரவத்திற்காக நாம் திணிக்கும் ஒவ்வொரு விடயமும் நாளை எமது கௌரவத்தைப் பாதிப்பதாக அமையக்கூடாது. பெற்றோர் - பிள்ளைகள் பரஸ்பர உறவு ஒரு திறந்த புத்தகம் போல் அமையாவிடில் ஒருவரை ஒருவர் படித்துக் கொள்ள மாட்டீர்கள்.

நாளை எம்மை எதிர்கொள்ளும் நிறவாதம், பிள்ளைகளின் உணர்வுகள், விருப்பங்கள், பாலியல் பற்றிய சரியான அறிவுரைகள், பிள்ளைகளின் எதிர்காலம் எங்கு சுபீட்சமாய் அமையும், தம்மைத்தாமே வழிநடத்தப் பழகுதல், சுயமான இயற்கை அடையாள உணர்வு, கலாசார சமயத் தெளிவுகள், இங்குள்ள சட்டத்துக்கமையப் பிள்ளைகளை வளர்த்தல் என்பவற்றில் பெற்றோரது கவனம் அவசியம்.

---

**யாழ் புதுவை.பொன் கோணேஸ்**



வறுமையெனும் கோடுகீறி - பாரில்
வாழும் நல்ல மனித சமூகத்தில் சிதறும்....
வார்த்தைகளில் சொரியும் வறுமை
வறுமை.... நல்ல நூல்களில் இருக்கும் -
அறிவியலை
ஆக்கங்களைத் தேர்ந்தெடுத்து
படிக்கமுடியாத வறுமை
படிக்கும்....படித்த நூல்களில் நல்லவை
எதுவெனத் தெரிந்து கொள்ளமுடியாத
மனவறுமை
வளரும் இளம் சந்ததியினர் வருங்காலப்
போக்கில்
எந்த நூல்களைப் படிப்பது எனத்திணறும் -
வறுமை
வறுமை.... வறுமை என்று உழைப்பின்றி -
அன்றாட
வாழ்வில் சங்கடப்படும் சமூகத்தின் வறுமை
வசதியெனும் வடிவங்களில் வாழும் -

ஒருவகையான
சமூக மத்தியில் வளரும் கல்வியின் தேற்றம்
வழுக்கி விழுந்த பெதும்பையர் மனதில் -
எப்படி
வாழ்ந்தால் வசதிவரும் என்ற எண்ண
வறுமை....நல்ல
புத்தகங்களை முடிப்பித்து - அதில்
ஆனந்தம் காணவியலாத வறுமை -
கல்விமான்களின்
சிந்தனை வறுமை....இலக்கிய நூல்கள் மூலம்
சிந்திக்கும் சக்தியை வளர்த்துக்
கொள்ளவியலாத
வறுமை நம்மொழியும் பண்பாடுகளும் சிதறிய
கண்ணாடியாகவிருக்கும் மாபெரும் வறுமை -
இலக்கிய
நூல்கள் அரிதாகவிருக்கும் இந்த
நூற்றாண்டின் வறுமை
அந்நிய தேசங்களில் வாழும் வாண்டுகளின்
மனதில்
தாய்த்தமிழ் நுழையாத வறுமை
வசந்தகாலப் பறவைகள் களிகொள்ளும் ஒரு
கூடங்கள் போன்று நம் கலை காவியம்
ஓடி மறையும் வறுமை

www.tamilarangam.net

# நாற்சந்தி

***"முத்தமிழ் விழா – ஒரு பார்வை" என்ற தலைப்பில் கவடுகள் இதழ் 62 இல் யோகி அவர்களால் எழுதப்பட்ட 18. 11. 1994 இல் கவடுகளால் நடாத்தப்பட்ட முத்தமிழ் விழா பற்றிய விமர்சனம் தொடர்பா சில வரிகளை எழுதலாமென நினைக்கிறேன்.***

முதலாவது நிகழ்வு "சிறைக்கதவுகள்" நாடகம் என்று தொடங்கும் அவரது நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனத்தில் "இரு அப்பாவி ரௌடிகள் போராளியை அடிப்பதாகக் காட்டி நாட்டில நிலைமை அவ்வளவு மோசமில்லை என்ற தவறான எண்ணத்தை உருவாக்கி விட்டார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். "நாட்டில் நிலைமை அவ்வளவு மோசமில்லை" என்ற எண்ணம் அவருக்கு உருவாகிப் போனதற்குக் காரணம் □அப்பாவி ரௌடிகள்□ இங்கே புரியாத புதிராக இருப்பது நாடகத்தில் தோன்றியவர்கள் அப்பாவி ரௌடிக என்ற முடிவுக்கு அவர் எப்படி, எதனடிப்படையில் வந்தாரென்பதுதான். ரௌடிக்கு வரைவிலக்கணம் என்ன அம்புலிமாமாவில் வருவதுபோல் தங்கப்பன், பழனி போன்ற பருத்த உடல்வாகுடன், சினிமாவில் வரும் பரட்டைத்தலை, முறுக்கு மீசை, கழுத்தில் தாயத்து, கட்டம் போட்ட சாரம், ஐந்து இஞ்சி அகலத்தில் இடுப்பில் பெல்ட், அரைக்கை பனியன், கையில் சைக்கிள் செயினோ அல்லது சுவிச் கத்தியுடனோ தோற்றமளிக்கும் கறுத்து உருண்டு பருத்த தோற்றத்துடன், சிவந்த விழிகளுடன் வருவதுமா ரௌடிக்கு வரைவிலக்கணம்?

அதென்னவோ தெரியவில்லை எமது பல விமர்சகரிடம் தென்னிந்தியச் சினிமாவின் அளவு தடிகள் வந்து இலவசமாயக் கிடைத்து விடுகின்றன.

"மக்களின் விடுதலைக்காகப் போராடுகிறோம்" என்று சொல்லிக் கொண்டு புறப்பட்ட போராளிக்குழுக்க அதே மக்களிடையில் ரௌடித்தனம் செய்யும் போது எப்படியான தோற்றத்துடன் காட்சியளித்தார்கள்? யோகி நாட்டில் நின்றிருந்தால் இதனைத் தரிசித்திருக்க முடியுமே?!

அடுத்து, "சிறைக்கதவுகள்" நாடகத்தின் முடிவை வீடியோவில் பார்த்துத்தான் அவர் புரிந்து கொண்டது கவலை தரும் விடயம்தான். நீட்டி முழக்கிச் சொல்ல இது ஒன்றும் முழுநீளச் சரித்திர நாடகமல்லவே. 30 நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் ஒரு சம்பவத்தை மையக்கருவாக வைத்து (83 வெலிக்கடைச் சிறைப்படுகொலை) எமது தாய் நிலம் மீட்சி பெறுவது என்பது நிச்சயம், தான் தனது மைந்தர்களால் மீட்கப்படுவாள் என்ற நம்பிக்கையுடன் தேசத்தாய் காத்திருக்கிறாள் என அவள் வாயிலாகவே சொல்லப்படுவதாய் முடிவு. இங்கேயும் இவர் சினிமாவில் வருவதுபோல் ஒரு பிரமாண்டமான கிளைமாக்ஸ்சை எதிர்பார்த்தார் போலும்.

அடுத்து, "இன்னொரு தேசம், இன்னொரு கனவு" கவியரங்கம் தொடர்பாய்: "அங்குள்ள சிக்கலான வாழ்விலிருந்து உணர்வுரீதியாக விடுபட்டுப் போனமை – இங்குள்ள வாழ்வுகளில் முழுமையக ஒன்றாடை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிதைகளில் தரம் இன்னும் உயராமல் போனமைக்குக் காரணிகளாகலாம்" என்கிறார். எதுகை மோனைகளைச் சுமந்து கொண்டு, கவிதைகள் சந்தங்களோடு வந்து விழவில்லை என்பதை வைத்துக் கொண்டு "கவிதை வாசித்தோர் அங்குள்ள சிக்கலான வாழ்விலிருந்து உணர்வு ரீதியாக விடுபட்டுப்போனார்களென்ற முடிவுக்குத்தான் வரவேண்டுமென யோகி எங்கு கற்றார்? தரமான இலக்கியம் படைப்போர் மட்டுமே தாயகத்தின் சுகதுக்கங்களை உணர்வு ரீதியாக கட்டிப்பிடித்திருக்கிறார்கள் என்ற அர்த்தத்தையல்லவா கொடுக்கின்றது இவரது இந்த வரிகள். அடுத்து, கனவு பற்றிய சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறார். இங்கே இவர் குறிப்பிடுவது தூக்கத்தில் வருமே அந்தக் கனவா? அல்லது லட்சியக்கனவு, எதிர்காலம் பற்றிய கனவு என்றெல்லாம் சொல்லப்படுகிறதே அந்தக்கனவா?

சரி இரண்டு மாதியும் பார்போமே. முதலில் தூக்கத்தில் வரும் கனவு பற்றிச் சிறிது; நான் எப்படித்தான் மல்லாந்து படுத்தாலும், கவிழ்ந்து படுத்தாலும் நிதம் நிதம் சவம் சவமாய் விழும் எனது தேசம்தான் வருகிறது. குண்டுகள்தான், துவக்குகள்தான், புகைமண்டலங்கள்தான் வருகின்றன. பேய்களும் பிசாசுகளும்தான் வருகின்றன. (பேய்க்கும், பிசாசுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கவேண்டாம். கைத்துப்பாக்கியோடு வருவதைப் பேயென்றும், பெரிய துவக்கோடு வருவதைப்பிசாசென்றும் வைத்துக் கொள்வோமே.) ஒரு காலத்தில் பேய்களாலும், பிசாசுகளாலும் நான் துரத்தப்பட்டதுண்டு. இப்போது கனவிலுமல்லவா இவைகள் துரத்துகின்றன. சில சமயங்களில் இவைகளிடமிருந்து தப்புவதற்காக ஓடமுயற்சித்தும் ஓடமுடியாமல் உரத்த சத்தமாய்க் கத்தி, பக்கத்து அறைக்காரனிடம் திட்டு வாங்கிய சம்பவங்களும் உண்டு. இது யதார்த்தம். இதுதான் யதார்த்தம். பாரதிராஜாவின் படங்களில் வருவதுபோல் வெள்ளுடையணிந்த தேவதைகள் மத்தியில் காதலியுடன் கதாநாயகன் சல்லாபம் புரிவது யதார்த்தமற்றது.

அடுத்து, இலட்சியக்கனவு, எதிர்காலம் பற்றிய கனவு என்றெல்லாம் சொல்லப்படும் கனவு பற்றி சிறிது; ஐயா! எனக்கு இரண்டு குழந்தைகள். இந்தத் தேசத்தில் இவர்களுடைய எதிர்காலம் வளர்ச்சி பற்றிய கனவு(?) எப்படி இருக்குமோ என்ற அச்சம் இப்போது பயமுறுத்துகின்றன. (நான் கலாச்சாரக் கட்டுமானத்தைக் குறிப்பிடவில்லை) இந்தத் தேசங்களில் கூர்மையடைந்துள்ள நிறவாதம், வீட்டோடு தீயிட்டுக் கொழுத்தும் நிறவாதம் பற்றிய அச்சம் எழுகிறது. இவற்றிற்கிடையேயும் நல்லதாய் கனவுகள் எதுவும் புலப்படவில்லை. நாம் கறுப்புக் கறுப்புத்தான். வீட்டோடு தீயிட்டுக் கொழுத்தும் நிறவாதம் வந்து கதவைத்தட்டி "உனது பாஸ்போட்டின் கலர் என்ன? என்று கேட்டுவிட்டு தீ மூட்டப்போவதில்லை. நீலப் புத்தகமாயினும், சிவப்புப் புத்தகமாயினும் நாம் கறுப்பு கறுப்புத்தான். இந்த சூழ்நிலைக்குள் வளரும் எமது அடுத்த தலைமுறையினர் சந்திக்கப் போகும் அனர்த்தங்களை எண்ணும் போது நல்லதான கனவுகள் புலப்படவில்லைத்தான்.

கவிகரங்கத்துக்காக கொடுக்கப்பட்ட "இன்னொரு தேசம் இன்னொரு கனவு" என்ற தலைப்பை வைத்து, மனிதன் சர்ச்சையின்றி அமைதியாய் வாழக்கூடிய இன்னொரு தேசத்தைப் பற்றியதான இன்னொரு கவிதையைப் படைத்திருக்கலாம் தான் ஆனால் அப்படி இல்லாமற் போனமைக்குக் காரணம் "யதார்த்தம். யதார்த்தம் தான்".
அதேவேளை யோகி கேட்டுள்ளதும் மனிதன் சர்ச்சையின்றி வாழக்கூடிய இன்னொரு தேசத்தையல்ல, இந்தத் தேசத்தைப் பற்றித்தான் கேட்டுள்ளார். "தாயகக் கனவு மட்டும்தான் அறிவுத்தனமானது எனும் நாகரீகப் போக்குப் பலவீனப் படும்போது கவிஞர்களுக்கு இந்தத் தேசத்திலும் யதார்த்த நிலைகளில் நல்ல கனவுகள் தோன்றக்கூடும்" என்கிறார். காணி நிலத்தோடு இன்னொரு ஜெயப்பிரதா துணைவருவதைக் குறிப்பிடுகிறாரா? ஐயா! இந்த "அறிவுத்தன நாகரீகப் போக்கு" என தாங்கள் குறிப்பிடும் போக்குகள் எதுவுமற்று, நானொரு அப்பாவிப் பொதுமகனாக, நிதானமாக கனவுகாண முயற்சித்தும் எதுவும் தாங்கள் குறிப்பிடுவதுபோல்த் தோன்றவில்லை. இது யதார்த்தம். இதுதான் யதார்த்தம். சற்றும் யதார்த்தமற்ற தற்காலத் தமிழ்ச் சினிமாக்களைப் பார்த்து அதேபோல் கனவு வரவேண்டும் என அடம்பிடித்தல் அறிவுத்தனமானதல்ல.

மேற்படி முத்தமிழ் விழாவில் தனக்குத் திருப்தி தரக்கூடிய நிகழ்வுகளாக "தாவீது கோல்யாத்" நாட்டுக்கூத்து, "ஒரு கைகொடு" நாடகம், "தேசம் பிரிந்த ராகங்கள்" இசைநிகழ்ச்சி என்பவற்றைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*குறிப்பிடும் அவர், முத்தமிழ் விழா பற்றிய தனது தீர்ப்பில் இப்படிக் குறிப்பிடுகிறார். "நாம் 60வது சஞ்சிகையை வெளியிட்டு ஆறாவது ஆண்டை நிறைவு செய்துவிட்டோம் என்ற திருப்தியை மட்டுமே சுவடுகளுக்கு ஓரளவு கொடுத்திருக்கக்கூடிய முத்தமிழ் விழா" என்று.*

*என்னயிது இவரது விமர்சனமும், தீர்ப்பும் ஓரணிசேர மறுக்கின்றனவே?! தனது விமர்சனத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என மீளப்படித்துப் பார்க்காமல் குத்துமதிப்பில் தீர்ப்பெழுதியுள்ளாரா?* •

*வாழ்க விமர்சனம்!*
• தமயந்தி.

ஆசிரியர்,
சுவடுகள்.

முத்தமிழ் விழா விமர்சனத்தில் எனது கவிதையும் விமர்சிக்கப் பட்டது. நன்றி நண்பர் யோகி அவர்களே! உங்களது பார்வையில் உங்களது நோக்கம் புரிகிறது. நாம் காண முயற்சிக்கும் அந்த நல்ல தேசம் யதார்த்த நிலைகளால் எப்படிப் பாதிக்கப் படுகிறது என்பதுதான். உங்கள் ஆசை, நோக்கம், பார்வை சரியானதுதான்.

நான் இன்னொரு தேசத்தை எப்படிப் பார்த்தேன் என்பதைத்தான் நீங்கள் பார்க்க மறந்து விட்டீர்கள், எனது கவிதையை மீள வாசித்தால் எனது யதார்த்த நிலையும் கற்பனையும் ஒத்து மறுதலித்தல் போன்ற நிலைகள் புலப்படும். இக்கவி ஒத்து மறுதலித்தல் போன்றது.

மூலக்கருவாக எதைக் கொண்டேனெனில் "இந்த யதார்த்த நிலையில் வாழும் நாடான நோர்வேயுடன் இணைய முயல்கிறோம். ஒட்ட முடியவில்லை. நோர்வேஜியப் பிரஜா உரிமை பெற்று நோர்வேஜியர் ஆனாலும் இந்த நாடு அந்நியனாகவே பார்க்கிறது. இந்தத் தேசத்தை எமது தேசமாக நினைக்கும்போது, வாழ நினைக்கும்போது யதார்த்தம் என்னை அந்நியனாகக் காட்டுகிறது. இந்த நாட்டில், இந்த நாட்டுப் பிரஜையாக இருக்கையிலேயே இத்தேசம் இன்னோர் தேசமாக இருக்கிறது.

இந்த நாட்டைத் தமது நாடாகக் காண முயலும் தமிழர் பலர் உள்ளனர். உதைபந்தாட்டம், களியாட்ட நாட்களில் பஸ், ரயில்களில் பயணிக்கும் எம்மவர் பலர் ஆர்ப்பாட்டமாக உரத்த குரலில் சொந்த நாட்டில் இல்லாத உரிமை உள்ளவர்களாக நடந்து கொள்வர்.

சரி, எமது நாட்டுக்குப் போவோம் என்றால் நாடு நாம் கண்ட கனவுகளுக்குப் புறம்பாக, ஆசைகளை நிராசையாக்கி நின்றது. எமது தாய்நாட்டை அடையாளம் காணமுடியாத நிலை. எமது மக்களே என்னை அந்நியனாகப் பார்க்கும் நிலை. எமது நாட்டிலே நாம் இருக்கப் பாஸ், பாஸ்போட் வேண்டும். அப்படியானால் அது இன்னோர் தேசம் இல்லையா? எனது சொந்த நாட்டிலேயே நான் அந்நியன். இங்கும் நான் அந்நியன். அப்படியானால் எமக்குக் கனவுகள் மட்டுமே சொந்தமாக இருக்கிறது.

இங்கு யதார்த்த வாழ்வில் எமது கனவு "தொடர்ந்து நிம்மதியாக இங்கு வாழலாம்; வீடு, நிரந்தர விசா அல்லது நோர்வேஜியப் பாஸ்போட் என எம்மவர் இங்கு திட்டமிட்டு வாழ முயலும்போது நிறம் எம்மை அந்நியராக்கி எமது கனவுகளை உடைத்து எறிந்து விடுகிறது. அதேபோல் எமது

www.tamilarangam.net

தாயகம் பற்றிய கற்பனைகள், கனவுகள் ஆசைகளுடன் போகும்போது அங்குள்ள யதார்த்த நிலைகளால் எமது ஆசைகள், கனவுகள் சாகடிக்கப் படுகிறது. அப்படியானால் எனது வாழ்வு (எம் போன்றவர்களதும்) என்றும் யதார்த்தங்களால் நாறடிக்கப்படும். கனவுகள் மட்டுமே மீதியாகும்.

நண்பர் யோகி அவர்களே! எனது கற்பனை யதார்த்தம் தழுவி இல்லையா? கவித்துவம் இல்லையா? எமக்குக் கிடைத்த தலைப்பை நாம் பார்த்த கோணங்கள் வெவ்வேறானவை.

நாம் இங்கு யதார்த்தமாகக் கனவுகாண இயலாது. திரும்பிப் போ என அரசு வெருட்டுகிறது. இந்தத் தேசத்தில் இருக்கையில் எமது நாடு பற்றிக் கனவு காண்பதும் சிரமம். நாட்டுக்குப் போனால் எமது கனவுகள் சிதைந்து நாம் அந்நியராகி நிற்கும் நிலை. எனது தாயகமே இன்னோர் தேசமாகி நிற்கிறது. இப்போது உங்களுக்கு 'இன்னோர் தேசம் இன்னோர் கனவு' பற்றி நான் கொண்ட கற்பனை, யதார்த்த வடிவம் புரிந்திருக்கும் என நம்புகிறேன்.

அலையாய் எழுந்து/ நதியாய் நடந்து/ கவிகேட்க வந்த/ முத்துக்களாம் - தமிழ்/ சிற்பங்களே - எம்/ சொத்துகளே அனைவருக்கும் என் கோடி வணக்கம்.

வான்தொடும் மலைகள்/ பாதாளம் புலரும் கணவாய்கள்/ மீன்பாடும் கடல் - அங்கே/ பணம் உமிழும் எண்ணைப் பிளாற்ஃபோம்கள்/ அழகான நாடு அன்பான மக்கள் கண்கவர் பெண்டிர்/ கண்டீரோ இந்நாடு - இது/ பணத்திற் புரளும்/ நாம் புகுந்த வீடு நோர்வேதான் - இங்கு/ நானும் ஓர் நோர்வேஜியன்.

நான் பிறந்த வீடு இடிந்துபோம் என்று/ வாங்கினேன் வீடு இங்கொன்று/ வீடு வாசல் வாகனங்களோடு - நான்/ வெள்ளையன் பாஸ்போட்டில் கறுப்பு நோர்வேஜியன்.

பாலூட்டிய தாய் பட்டினியில் வாடட்டும்/ சோறும் சுவீடன் சில்லிங்கும் (Kylling: கோழிக்குஞ்சு)/ என் வயிறறை நிரப்பட்டும்/ கலை கலாச்சாரம் மொழி நிலமெல்லாம்/ ஐநூறு ஆண்டுகளாய்/ கற்பழிக்கப் பட்டாலும்/ இன்று நானோர் கறுப்பு நோர்வேஜியன்.

வழிதெரியா வெறிகாரன்/ மொழி தவறாது கேட்டான்/ Svarte faen hvor kommer du fra? கறுப்புப் பேயே எங்கிருந்து வருகிறாய்?/ ஓ புரிந்துகொண்டேன்/ தெரிந்துகொண்டேன்/ எம்மதிப் பிருப்பினும் நாமிங்கு அந்நியரே - ஆம்/ இது எனது தேசமல்ல/ என் கனவு இதுவுமல்ல/ எங்கே என் தேசம்/ எங்கே என் கனவு?

தாய்நாட்டுப் பயணம் எண்ணி/ கட்டிய கற்பனைக் கோட்டையுள்ளே/ நிஜமாக நுழைகையிலே/ அங்கே, ஆங்காங்கே/ பிணங்களின் பக்கத்தில்/ படுத்துறங்கும் நாய்கள்/ சுதந்திரமும் உயிர்களின் நேயமும்/ வெகு சிறப்பாக இருந்தது.

சிரித்த முகங்களுடன்/ படுத்திருந்து வரவேற்கும்/ வெள்ளை நிற மனிதர்கள்/ சீ... சீ.... அவை மண்டை ஓடுகள், எலும்புக் கூடுகள். வரவேற்பு வெகு சிறப்பாக இருந்தது - ஆனால்/ இது நான் விரும்பிய தேசமல்ல/ என் கனவு இதுவுமல்ல.

வெண்மணல் கம்பளம்மேல்/ சிவந்து சிரிக்கும் இரத்தப் பூக்கள்/ என் பாதத்துக்குப் பஞ்சணை போட்டது.

குண்டு விழுந்து குனிந்து நிற்கும் மரங்கள்/ காற்றிலசைந்து சாமரம் வீசின.

கல் வீடுகள் விழுந்து என் காலடியில் முத்தமிட/ காவோலைக் குடில்கள்/ கைதட்டித் தலையசைத்து/ ஆரலாரித்தன.

நான் வளர்ந்த வீடு எனைப்பார்க்க/

www.tamilarangam.net

சுவரெங்கும் சன்னங்களாக யன்னல் போட்டு இருந்தது/ என் வரவு கண்டு முகடு/ வாய் திறந்து சிரித்தது/ உள்ளேயோ கோழிகளும் கோட்டான்களும்/ கூடியிருந்து கோடி வணக்கம் செலுத்தின/

வெளிநாட்டில் விட்ட வியர்வையாலே/ விளைந்து நின்ற வீடுகள் மட்டும் அரண்மனை போலே/ ஆங்காங்கு நின்றன.

அயலட்டையிலேபழைய முகங்கள்/ மறைந்து/ புதிய முகங்கள் முளைததிருந்தன - அவை/ எனைப் புதுமையாகப் பார்த்துப் புன்னகை பூத்தன.... அந்நியனாக.

துப்பாக்கியைத் தோளிலிட்டு/ தூக்க வலுவற்ற சிறுவன் கேட்டான்/ டேய் என்னடா வெளிநாடோ? எங்கயடா பாசும் பாஸ்போட்டும்?

எங்கே என் நாடு?/ எங்கே என் மக்கள்/ எங்கே என் உறவு?/ நான் அதைத் தொலைத்து விட்டேன்/ இனி எங்கு நான் வாழ்ந்தாலும் அந்நியனே/ தாய்நாட்டை விட்டுப் புறப்பட்ட எமக்கு/ சொந்த நாடும் இன்னோர் தேசமே/ என் கனவு மட்டும்/ அடிவானம் தேடும் பொடிப்பிள்ளைபோல/ அக்கரைப் பச்சையாய்/ பாலைவனம் தேடும் வசந்தமாய்/ கானல் நீரில் முகம் துடைத்து/ ஒட்டாத உறவுகளுடன்/ காலத்தால் அழியாது/ கற்பனையில் கட்டைவரை வாழுமீ.

இலவுகாத்த கிளிபோல் காத்திருப்போம்./ எம் கனவுகளை/ கனவுகளை மட்டும்/தடுக்காதீர்.

திருச்செல்வம் திலீபன்,
ஒஸ்லோ.

## ஸ்தவங்கர் நீராவிக் கப்பல் கம்பனி
(STAVANGER DAMPSKIBSSELSKAP)
1885



மிகக் குறைந்தளவு மக்கள் தொகையைக்(4.1மில்லியன்) கொண்டுள்ள நோர்வே ஒப்பீட்டு ரீதியில் நிலப்பரப்பில் மிகப் பெரிய நாடாகும். ஒஸ்லோவில்(Oslo) இருந்து வட நோர்வேயின் ஃபின்மார்க் (Finnmark) செல்லும் தூரம் ஒஸ்லோவில் இருந்து இத்தாலி இருக்கும் இடத்தை விடத் தூரம் கூடியது. நோர்வேயானது பல கடல்ஏரிகளையும் ஆறுகளையும் ஊடறுத்துச் செல்லும் புவியியலைக் கொண்ட நாடாகும். பெரும்பகுதி மலைகளையும் பள்ளத் தாக்குகளையும் கொண்டது. இதனால் நாட்டின் பல இடங்களில் உள்ளூர்க் கடற் பயணம் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் தான் 1855ல் ஸ்தவங்கர் நீராவிக் கப்பல்க் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது. பேர்கனிற்கும் ஸ்தவங்கரிற்கும் இடையில் பயணிகள் போக்குவரத்தை மேற்கொள்ளும் இக் கம்பனி உள்ளூர் வெளியூர் பொருட்கள் ஏற்றி இறக்கல் சேவையிலும் ஈடுபடுகின்றது. நோர்வேயில் உள்ள பிரபலமான கப்பல் கம்பனிகளில் ஒன்றான இதில் சுமார் 1100ற்கு மேற்பட்டோர் தொழில் புரிகின்றனர். 8கரையோரக் கப்பல்களையும் 20கொள்கலன் கப்பல்களையும் 2உள்ளுக்ஷ்ப் படகுகளையும் கொண்டுள்ளது இக்கம்பனி. நோர்வேயில் கப்பற் துறையில் மிக நீண்ட அனுபவம் கொண்ட நிறுவனங்களில் ஒன்றாகும்.

www.tamilarangam.net

# மண் மணம்

அத்தியாயம் 11

க. ஆதவன்

'பட்டண்ணை' என்று ஒரு மனிதர். பூர்விகம் தமிழ்நாட்டில் கோயம்புத்தூரோ, மணப்பாறையோ, மன்னார்குடியோ தெரியாது. கொயிலடிப் பொடியள் பிறக்க முதலே அவர் இங்கு வந்துவிட்டார். எப்படியோ 'நடராசநாதன்' நாயினத்துக்கு இவர் 'சிஞ்சா'ப் போடவென முடிவாகியது.

கொயிலடிப் பெடியள் மத்தியிலே இது 'பட்டண்ணை'க்கு ஒரு கௌரவத்தை ஏற்படுத்தியது.

பட்டண்ணை தானே வாழ்ந்தார். தனக்கென ஒரு வீடமைத்து ... பொருட்களை ஆங்காங்கே ஒழுங்கமைத்து.... தன்கையை நம்பி வாழ்ந்தார்.

பட்டண்ணை கொயிலடிப் பெடியளை விட்டுவைத்தாரோ அல்லது கொயிலடிப் பெடியள் பட்டண்ணையை விடடுவைத்தனரோ தெரியவில்லை.

பட்டண்ணையும் கொயிலடிப் பெடியளும் பின்னிப் பிணைந்த ஒரு phenomenaவாகிப் போயினர்.

இந்தத் தோற்றப்பாட்டின் மர்மம் பலருக்குப் புரியவில்லை. புரிந்தவர்கள் புரியாதது போல் இருந்தனர்.

புரிந்தது என்ன?

புரியாதது என்ன?

திருவிளையாடல்தான்.

ஒருநாள் ரகுநாதன் சைக்கிளில் வந்தான். இரவு ஒரு ஏழு மணியிருக்கும். தூரத்தில் 'ஆமி ஜீப்' வந்தது.. 'கெட் லைற்' வெளிச்சம் ஜீப்பென உணர்த்தியது.



www.tamilarangam.net

ஜீப்புக்கு லைற்றுகள் நெருக்கமாக இருக்கும். ஏனைய 'கார்'களுக்குத் தள்ளி இருக்கும். இந்த அரிச்சுவடி தெரியாதவனல்ல ரகு. 'லைற்'றைக் கண்டுவிட்டான். எங்காவது ஒளிக்கவேணும். பக்கத்தில் மதில்கள். இரும்புக் கேற்றுகள். பட்டண்ணையின் படலை மட்டும் கிடுகு வேலியில் தட்டி அமைத்துக் கட்டப்பட்டிருந்தது.

சைக்கிள் முன் சில்லால் உந்தித் தள்ளி – தட்டிப் படலையை அறுத்துக் கொண்டு உள்ளே போய் சைக்கிளைச் சாத்திப் போட்டு படலையையும் பழையபடி இருக்க விட்டுவிட்டு உள்ளே போய்.... நடுங்கியபடி நின்றான்.

"அவுங்கள் போட்டாங்கள். பயப்பிடாதை தம்பி. தேத்தண்ணி குடியன்" என்றபடி பட்டண்ணை வந்தார்.

பயந்தபடி... நடுங்கியபடி நின்ற ரகுவிற்கு பட்டண்ணையின் 'பிளேன்ரீ' இனிப்பாக இதமாக இருந்தது. குடித்து முடித்த 'கிளாசை' வாங்கும்போது ரகுவின் விரல்களை அவர் தொட்டவிதம் இயல்பாக இல்லாமல் ஏதோ போலிருந்தது. அதற்கென்ன விரல்கள்தானே என விட்டுவைத்ததன் வில்லங்கத்தை... நீளக் காற்சட்டை போட்டிருக்கலாம் என்ற சிந்தனை தெளிவாக உணர்த்தியது.

பட்டண்ணையின் தனிமையைப் போக்க ஏதாவது செய்யலாமா என்ற நடுங்கும் சிந்தனையிடையே ஒரு திறில்....

பதுங்கிப் பதுங்கி சுவரோடு சுவராய் ஒரு உருவம் வெளியேறியது. பட்டண்ணா கில்லாடி என்பதை ஜ்ரணிக்க முதல் அது ஆர் எனப் பார்க்கும் ஆர்வம் தள்ள ஓடிப்போய், 'சேர்ட் கொலரி'ல் பிடித்துக் கொண்டான் ரகு. திருப்பினான் முகத்தை. பாலன். பாலகன். இந்தப் பாலகனைத் தானும் பயன்படுத்தலாம் என்று நினைத்தான்.

"பாலா, கொக்கா சுசீலாவைப் பின்வளத்தாலை நீ வந்தது மாதிரிக் கூட்டிக்கொண்டு வா. இல்லாட்டி இதை நான் கொப்பரிட்டைச் சொல்லிப் போடுவன்"

பாலன் வெருண்டு போனான். பாவம். அந்த வயது உந்துதல்களை ஆர் அறிவர்? இதனைப பயன்படுத்திற ரகு அண்ணை! உண்மையிலை ரகு அண்ணை சரியில்லை. என்னைப் பயன்படுத்திறார். என்ரை அக்காவோடை அவர் கதைக்கிறதுக்காக என்னைப் பயன்படுத்திறார். பட்டண்ணையும் ஒண்டும் சொல்ல மாட்டார். ஏனெண்டா அவருக்கும் ரகு அண்ணைக்கும் இடையிலை கனக்க விஷயங்கள் நடந்ததை நான் என்ரை கண்ணாலை கண்டிருக்கிறன்.

இனி, அக்காவைக் கூட்டிக் கொண்டுவர வேணும். அக்கா அம்மாவுக்குப் பந்தப் பிடிச்சுக்கொண்டு நிக்கும். முருங்கைக்காய் முத்தல், இல்லாட்டி வெண்டிக்காய்ப் பிஞ்சு.... இதுகளை விட்டா, அக்காவாலை வேறை கதையள் சொல்லித் தன்னைச் சமாளிக்கத் தெரியாது.

ஏனெண்டு தெரியேல்லை. சபேசன் கூட அக்காவிலை வழிஞ்சவர். அக்கா பெரிய வடிவெண்டில்லை. அவள் நடந்து போகேக்க ஒரு கவர்ச்சி இருக்கு. இதனாலையோ என்னவோ எல்லாப் பெடியளும் அக்காவை விரும்புகினம்.

சில நேரத்திலை எனக்கு எரிச்சல் வரும். ஏதோ, நான்தான் அக்கான்ரை எல்லாத்தையும் தீர்மானிக்கிறது மாதிரி.... எல்லாரும் என்னிலை அன்பு காட்டிறது எனக்குப் புடிக்குது. எனக்குச் சில உணர்வுகள் இருக்கு. எனக்கும் சில... சில... இதுகள் இருக்கு.

மீசை வைச்ச ஆக்கள்..

தாடி வைச்ச ஆக்கள்....

ஒண்டும் இல்லாத ஆக்கள்.....

இப்பிடி நானும் அலைஞ்சனான்தானே.

ரகு அண்ணையிலை எனக்குத் தனியான ஒரு மரியாதை இருக்கு. அவர் நீலத்தில ஒரு 'கலர்ப் பெஞ்சில்' வாங்கித் தந்தவர் எணட்டுக்காக இல்லை. அவர்

www.tamilarangam.net

பாக்கேக்கை... அவற்றை கண்ணிலை ஒரு அன்பு வழியும். அந்தக் கண்ணுகள்... நான் மழலைகளை நேசிக்கிறன் எண்டு சொல்லும். பயப்பிடாதை நான் இருக்கிறன், எல்லாம் வெல்லலாம் எண்டு சொல்லும். என்ன பிரச்சனை? ஏன் அழுகிறாய்? ஏனக் நடுங்கிறாய்? விசரா? எண்டெல்லாம் கேக்கும் அந்தக் கண்கள்.

அந்தக் கண்களுக்காக... ரகு அண்ணைக்காக நான் எதையும் செய்வன். ரகு அண்ணை பாவம். நல்லவர். அக்காவை மட்டுமல்ல, ஆரைக் கூட்டிக் கொண்டுவா எண்டாலும் நான் கூட்டிக்கொண்டு வருவன், ரகு அண்ணை நல்லவர். திருப்பித் திருப்பிச் சொல்லுறன். ரகு அண்ணை நல்லவர். ஒருநாள் நான் பள்ளிக்கூடத்துக்கு நடந்து போறன். அப்ப ரகு அண்ணை சைக்கிளிலை வாறார். மற்ற ஆக்கள் எண்டால் பேசாமல் தெரியாது மாதிரிப் பாவனை பண்ணி என்னைக் கடந்து போயிருப்பினம். ஆனா, ரகு அண்ணை "என்ன பாலா பள்ளிக்கூடத்துக்கோ... நானும் பிந்தித்தான் போனன். ஏறன் சைக்கிளிலை. வாங்கிற தணட்னையிலை உனக்கும் சரி பங்காப் பேஏகட்டும்" எண்டு நான் வாங்கிற தண்டனையைத் தானும் ஏற்றவர். நான் இவற்றை சைக்கிளிலை ஏறாமல் விட்டால் எனக்குத் தண்டனை கிடைச்சிருக்காமல் தப்பி இருப்பன் எண்டுறது வேற விஷயம்.

* * * * * * * *

என்னவோ அக்காவைக் கூட்டிக் கொண்டு வந்திட்டன்.

* * * * * * * *

"நான் வேணுமெண்டு... உங்களைக் கூட்டிக்கொண்டு வரச் சொல்லேல்லை." என்றான் ரகு.

"பறவாயில்லை" என்றாள் சுசீலா-

(சொண்டுகளும் கைகளும் நடுங்கிக் கொண்டிருந்தன)

(ரகுவிற்கும் கூடவே)

## ஸ்தவங்கர் அரச தேவாலயம்
(Stavanger Dom kirke)

ஸ்தவங்கர் அரச தேவாலயம் 1125ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பசிலிக்கா தேவாலயமும் (Pasilika church) உரோமய உறவும் கொண்டதாகவே ஸதவங்கரின் முதலாவது உத்தியோக பூர்வ தேவாலயம் அமைந்திருந்தது. இதன் முதலாவது மறைமாவட்ட ஆயராக இங்கிலாந்தின் Winchesterஐ சேர்ந்த இரய்னால் (Raindal) நியமிக்கப்பட்டார். இத்தேவாலயத்தின் முதலாவது நாற்பக்கக் கோபுரம் 1277 - 1307 வரையிலான காலப்பகுதியிலேயே கட்டி முடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 1800ம் ஆண்டுவரை பலதரப்பட்ட முக்கிய சமூக அரசியல் மாற்றங்கள் ஏற்பட்ட போதும் தேவாலயம் பாதிப்புறவில்லை. இத் தேவாலயம் மீண்டும் 1860-70 காலப் பகுதியில் கட்டிடக்கலை நிபுணர் (arkitekt) C.F.V.D.Lippe என்பவராலும் மீண்டும் 1942ல் கட்டிடக் கலை நிபுணர் E.Moestue என்பவராலும் மீள வடிவமைக்கப்பட்டுத் திருத்தப்பட்டது. ஐரோப்பாவிலுள்ள பழமையான தேவாலயங்களில் ஸ்தவங்கர் அரச தேவாலயமும் முக்கியமானது.

(பட்டண்ணையும் பாலனும் படலையில் கிடுகு ஓலை பொருத்திக் கொண்டிருநதார்கள்)

* * * * * * * *

திடீரென்று "விடுங்கோ" என்றாள். எல்லாமே முடிவற்றதாய் விட்டுவிட்டேன். விடுதலைப் பறவையாய்ப் பறந்துபோஏனாய்.

நானும் ஒரு சிட்டுக் குருவியைப் போலப் பறந்தலைந்து துவண்டு போனேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கணங்கள்... நிமிடங்களாகி.... உன்னைத் தொலைத்துவிட்டேன்.

நீயும் என்னைத் தொலைத்துவிட்டாய்.

யாரும் யாருக்காகவும் வாழ்வதும் இல்லை, தொலைப்பதும் இல்லை. எடுப்பதும் கொடுப்பதும்.....

தடுப்பதும்... விடுப்பதும்....!

எதனை எடுத்தோம்.

எதனை தொடுத்தோம்.

சுசீலா, 'விடுடா கையை நாயே' அல்லது 'எடுடா கையை நாயே' என்றா சொன்னாய்? எப்படியாயினும் ஏதோ சொன்னாய்... சொல்ல முடிந்திருக்கிறது உன்னால்.

இந்த வார்த்தைகள் என்னால் முடியுமா? முடியாது.

நான் ஒரு கோழைபோல் உன் காதல் வேண்டி அழுகிறேன்.

ஊரின் மத்தியில் நீ ஒரு கதாநாயகி ஆகலாம். எனக்குற நீ ஒரு பெண். எனது பெண். என் சுசீலா.

எப்படிச் சொல்ல முடிந்தது உன்னால்?

நானா உன் காதல் தேடி அலைந்தேன்? நானாகக் கேட்டது ஒரு நீலாம்பரி மட்டுமே. நான் கெட்டது, குடித்தது, உன் வீட்டின் முன் அலறியது, எல்லாவற்றுக்குமான பழிவாங்கலா இது?

நான் என்ன செய்தேன் எனக்கெதிராக? சுசீலா....! உன்னைத்தான். சும்மா சொல்லு. எல்லாம் கைகூடி வருகையில் ஏன் தாழியை உடைக்கிறாய்?

நான் உன்னைத் துன்பப் படுத்த வேணும் எண்டு இதுகளைச் செய்யவில்லை. மாறாக உன்னைச் சந்தோஷப்படுத்தும் எண்டு செய்யிறன்.

உன்னாலை முடிஞ்சால் உன்ரை personalityக்கு உன்னாலை விளக்கம் கொடுக்க முடியுமோ?

'பேசனாலிற்றி' எண்டாலே அது மற்ற ஆக்களாலை உனக்குச் சுமத்திற ஒரு பட்டம்.

பட்டத்திற்காகப் பலர் வாழ்ந்தும் இறந்தும் உள்ளனர்.

நீ எதுக்காக இப்பிடிச் சொன்னனி?

இப்பிடியே சிந்திச்சுக்கொண்டு அருளண்ணையின் வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தான் ரகு.

அப்பொழுது, திடீரென ஒரு மின்வான்,

ஆக்களில்லாமல், றைவர், கிளீனர் இன்னுமொரு ஆள் ஆகிய மூவருடன் கூடிய 'மினிவான்' 'sudden break' போட்டு ரகுவின்முன் நின்றது.

"Are you Mr.Ragu"

"Yes"

கேள்வியும் விடையுமாய் கணங்கள் கழிந்துகொண்டிருக்கையில் ஒரு சிறுவன் சொன்னான்,

"எங்கடை சுசீலா அக்காவின்ரை பிரச்சினையில தலையிட்டா வெடிதான் வைப்பம்" A K47ஐ ஒருமுறை தட்டிக் காட்டியதாக ரகுநாதன் நினைத்துக் கொண்டான்.

* * * * * * * *

எங்கடை சுசீலா அக்காவோ?

(இனி)


இந்த இதழை அழகுறத் தயாரிக்க எடுத்த முயற்சி, பல தொழில்நுட்பக் காரணங்களை ஏற்படுத்தி இதழ் மிகத் தாமதமாகவே வருகிறது. வரும் இதழ்கள் விரைவாக வெளியிட முயல்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கெறுக்குப் பிடித்த தென்னை மரமும் தூக்கணாங் குருவியும்



தென்னை மரத்திற் கோ
தலைக்கு ஏறிய கெறுக்கு.
என்னைத் துார எறிந்துவிட்டு
நிற்கிறதே!
திமிரோடு.
தலைவிரி கோலமாக இன்னும்
பயம்காட்டி.
குஞ்சம் குஞ்சமாகத்
தொங்கவிட்டேனே
என் வீடுகளை எல்லாம் அதில்
பிய்த்து எறிந்து விட்டது
மூசி.
புயலை எதிர்த்து நிற்கிறேனாம்
தான்.
நானும் தானே நிற்கிறேன்
இதனோடு
பைத்தியத்திற்கு
விளங்குதே இல்லை.
அடிதொடியாக வாழ்ந்த என்னைப் போய்
கித்துள்“களில்
கூட்டைக் கட்டட்டாம்
பாருங்கோ அதுகிண்ட திமிர.
தாழுண்ட நீரைத்
தலையாலே தருவேனாம் தான்
தொங்கல் அவிழ்த்து அணிலுக்குக் கொடுத்தபடி
சொல்லுது
செருக்கோடு
வெட்கமே இல்லை அதற்கு.
வல்லூறுகள் வந்து விழவும்
தலையிலே இருத்தி
ஆடுது கூத்தாய்
ஊத்தைச் சொண்டுகள் துடைப்பதற்கும்
நான் இருந்து வளர்ந்த
ஈக்கிள்க் கூந்தலைக் கொடுக்கிறதே
சவம்.
பாழாய்ப் போன அந்த மரம்.
குரங்குகளோடும் கூட்டாம் இப்ப
நான் இருக்க முடியாமல்.

ஜீவிதன்

Suvadugal,
A Tamil monthly from Norway
Issue 64, February'95

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்